தேவார மணி

ஆசிரியர்:

அப்பர்.

சம்பந்தர்.

சுந்தரர்.

வெளியிட்டோர்:

அ. கு. ராம. சு. சொ. இராமன் செட்டியார், ராயவரம்.

தொகுத்தவர்: ராய. சொ.

இந்நூல் கிடைக்கும் இடங்கள்

க. அ. கு. ராம. சு. சொ. இராமன் செட்டியார், ராயவரம்,
திருச்சிராப்பள்ளி ஜில்லா.

உ. க. வீ. அழ. மு. இராமனுதன் செட்டியார், கோட்டையூர்,
இராமனுதபுரம் ஜில்லா.

ங. ராய. சொக்கலிங்கன், அமராவதி புதூர்,
இராமனுதபுரம் ஜில்லா.

படிக்கும் விருப்பம் உள்ளவர் மேற்கண்ட இடங்களில் நேரில் இலவசமாகப் பெறலாம். 0—6—3 அனுப்பினுல் ரிஜிஸ்தர் புக்போஸ்டில் ஒருபுத்தகம் அனுப்பப்பெறும்.

உ
சிவமயம்

தேவாரமணி

நூல் முகம்

தேவாரம் என்பதை, தே–வாரம் என்றும், தே–ஆரம் எனவும் இருவகையாகப் பிரிக்கலாம். தே : கடவுள். வாரம் : அன்பு. கடவுளிடத்துக் கொண்ட காதலால் எழுந்தது தேவாரம்.

தே : இறை. ஆரம் : மாலை. இறைக்குச் சூட்டப்பெற்ற தெய்வப் பாமாலை தே ஆரம்; அது இலக்கண முறைப்படி தேவாரம் என ஆகும். தேவாரம் ஒரு பெருங்கடல். அத்தெய்வக் கடலுள் மூழ்கி எடுக்கப்பெற்ற சிறந்த மணிகளைக் கொண்டது இந்நூல்.

தேவாரத்தை அருளியவர், சிவபெருமானின் முழு முதல் தன்மையை உணர்ந்து, அப்பெருமானோடு இணைந்து, இரண்டறக்கலந்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள் என்ற பெரியார் மூவர் ஆவர். இம் முப்புலவர்களும் முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர் எனச் சுருக்கமாக அழைக்கப் பெறுவர்.

இன்று இருக்கும், மூவரும் பாடிய தேவாரப் பாடல் **௮௨௩௯.** இவற்றுள் அப்பர் தேவாரம் **௩௦௬௬**; சம்பந்தர் தேவாரம் **௪௧௪௭**; சுந்தரர் தேவாரம் **௧௦௨௬.** இவ் எண்ணாயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது பாடல்களில் பொறுக்கிய முந்நூறு பாசுரங்கள் கொண்டது இந்நூல்.

அப்பர் பாசுரம் **௩௦௬௬**-ல் **௧௫௦**-ம், சம்பந்தர் பாடல் **௪௧௪௭**-ல் **௧௦௦**-ம், சுந்தரர் பாட்டு **௧௦௨௬**-ல் **௫௦**-ம் ஆக முந்நூறு பாக்கள் கொண்ட தொகுப்புநூல் இது.

தேவார ஆசிரியராகிய இம்மூவரும் காலத்தால் ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவர் என்பதற்குத் தக்க சான்றுகள்

இருக்கின்றன. இம்மூவருள்ளும்-ஏன்? அறுபத்துமூன்று நாயன்மாருள்ளுமே-காலத்தால் பின்னே வந்தவர் சுந்தரமூர்த்திகள். திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருந்தகையார்க்குத் தேவாரம் பாடிய இம்மூவரும் காலத்தால் முன் இருந்தவர்களா பின்தோன்றியவர்களா என்பதில் கருத்து வேறுபாடு இருக்கின்றது. அவ் ஆழிய கடலுள் நான் இப்போது மூழ்கப்போவதில்லை.

இம் மூவரும் பாடிய சிவத்தலங்கள் இருநூற்று எழுபத்து நான்கு. இவற்றுள் யார் யார் பாடிய தலங்கள் எத்துணை எத்துணை, அவை எந்தெந்தப் பகுதியில் உள்ளன என்பன போன்ற பெருக்கத்தை அவைபற்றிய விரிந்த நூல்களில் கண்டு கொள்க.

பல ஆயிரம் பாடல்களை எல்லோரும் படிப்பார்கள் என எதிர்பார்ப்பது முடியாத காரியமாக இருக்கிறது. தேவாரம் படியுங்கள் என்றால் "எண்ணாயிரம் பாடலா! அடே அப்பா!!" என்று யாரும் கூறுவாரானால் அதில் ஒன்றும் வியத்தற்கு இல்லை. ஆயிரக்கணக்கான பாடல்கள் கொண்ட நூல்கள் அனைத்தும் சுருங்கிய அளவில் தொகுப்பு நூல்களாக வர வேண்டுவது அவசியம்.

தேவாரத்தில் உள்ள அருமணிகளை அடங்கல் முறையாக வைத்துவிடாமல் அனைவரும் படித்து இன்புற வேண்டும் என்பதே இந்நூல் வெளியீட்டின் நோக்கம். இதனைப் படித்து உணர்ந்து சுவை காண்போரை, நேரம் இடங்கொடுக்குமானால் முழுத்தேவாரநூலைப் படிக்கவும் இந்நூல் தூண்டு கருவியாகும்.

என் முறைப்படி இந்நூலையும் படிப்பவர் இடர்ப்படாது சுவைகண்டு மகிழ, சொற்களையெல்லாம் இயன்றவரையில் சந்தி பிரித்துப் போட்டிருக்கின்றேன். அரும் பதங்களுக்குப் பொருளும் எழுதி, இன்றியமையாத அளவுக்குச் சில விளக்கங்களும் கொடுத்து, உரைப்பகுதி விரிந்துவிடக் கூடாதே எனப் பயந்து பயந்து சில ஒப்புமைகளும் வரைந்து பாடல்களின் அடியில் சேர்த்திருக்கின்றேன்.

பாடல்களின் சீர் ஓசை முதலியவற்றில் தோன்றும் சில குறைபாடுகள் தொன்று தொட்டுத் திரும்பத் திரும்ப ஏடு

பெயர்த்து எழுதியவர்களால் நேர்ந்தனவாகக்கொண்டு, அவற்றை அறிஞர் ஒப்பத்தக்க வகையில், வேண்டும் அளவுக்கு ஒழுங்கு படுத்தியிருக்கின்றேன். இக் குறைபாட்டைச் சரிசெய்யவில்லை யானால் நூல் ஆசிரியர்க்குச் செய்யவேண்டிய கடமையைச் செய் தவர்கள் ஆகமாட்டோம். இலக்கண வழுக்களோடு அவர்கள் பாடினார்கள் எனக் கருதுவது அப்பெரியார்கள் புலமையைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

சான்றாகச் சில இங்குக் காட்டுதும்: "முளைத்தானை" என்பது இந்நூலின் ௧௩௬-ம் பாடல். இது திருத்தாண்டகம். தாண்ட கம் என்பது எண்சீர் விருத்தம். "திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்" என்பது பிழை. "லவாய்" என்ற ஓரசைச் சீர் இங்கு நிற்குமாறு இல்லை. எனவே, "லவ்வாய்" என்று போட்டுத்தான் தீரவேண்டும். இத்திருத்தத்தால் பொருள் தவறி விடவில்லை; சீரும் ஓசையும் நிரம்பி விடுகிறது.

இந் நூலின் ௧௦௬-வது பாட்டு, "சங்க நிதி பதும நிதி" என்பது. இதுவும் திருத்தாண்டகமே. "அங்கம் எலாம் குறைந்து அழுகு தொழுநோயரராய்" என்பதில் "யராய்" என்று ஒரு சீர் நிற்காது. "யாராய்" எனக் கொள்வது பொருத்தம் உடையது. இதேமாதிரி "மைப்படிந்த கண்ணாளும்" என்ற திருத் தாண்டகத்தில் "அவ்வண் ணமும்" என்று வருமாறு இல்லை. "அவ்வண் ணம்மும்" என்று ஒரு '**ம்**' சேர்த்தால்தான் சீர் சீராகின்றது.

"ஒருமுழம் உள்ள குட்டம்" என்பது இந்நூலின் ௮௬-வது பாசுரம். இது திருநேரிசை. நேரிசை என்பது அறு சீர் விருத்தம். "அரைமுழம் அதன்அ கலம்" என்பதில் 'கலம்' என்ற ஓர சைச் சீரை இரண்டசைச் சீராக்க "கல்லம்" என்று திருத்தித் தான் ஆகவேண்டியதிருக்கிறது.

இன்னோர் அன்ன திருத்தம் கொண்டு பெரியவர்களை அவ மதித்துவிட்டதாக அறிஞர் கருதமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. பெரியோர்கள் புலமையில் பெரிதும் மதிப்பு வைத்து அவர்கள் பாடலில் அறியாமை காரணமாகவும் அயர்ச் சியினாலும் பிறர் புகுத்திய பிழைகளைக் களைவது தக்கதே என் பதை அறிஞர் ஒப்புவர் அன்றோ.

தேவாரத்தின் சிறப்பைப் பற்றிப் பல படப் பேசவேண்டாம். இந் நூலின் உள் நுழைவார் இதனை நன்கு அறிவர். சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனக் கொள்ளும் சைவ அறிஞர்கள் தேவாரத்தைப் பாராட்டுவது இயல்பு. வரந்தருவார் என்ற ஒரு வைணவப் புலவர், "தேவரும் மறையும் இன்னமும் காணச் செஞ்சடைக் கடவுளைப் பாடி யாவரும் மதித்தோர் மூவர்" என்று தேவாரத்தையும் தேவாரம் பாடிய மூவரையும் பாராட்டி இன்புற்று மகிழ்வது, தேவாரத்தின் பெருமைக்கும் மூவர் புகழுக்கும் சிறந்த எடுத்துக் காட்டு.

முன்னர் திருவாசகத் தேனை வெளியிட்டேன். இன்று "தேவாரமணி" வெளிவருகிறது. இனி, திவ்யப் பிரபந்தத் திரட்டு ஒன்றும் வெளியிட எண்ணியிருக்கின்றேன்.

இந்நூலை வெளியிடத் தூண்டியவர்கள் எங்கள் ஐயா அவர்கள். ஐயா என்றால் அருட் செல்வர் கோட்டையூர் இராமனாதனார் என்று, சொல்லித் தெரிய வேண்டாம். ஐயாவுக்கும் எனக்கும் நெருங்கிய நண்பராகிய இராயவரம் அன்பர் அ. கு. ராம. சு. சொ. இராமன் செட்டியார் அவர்களிடம் "தேவார மணி"யை நீங்கள் அச்சிட்டு வழங்க வேண்டும் என ஐயா சொன்னார்கள். அவர்கள் உடனே சரி என ஒப்புக்கொண்டார்கள்.

அதன் பயனாக இந்நூல் வெளிவருகின்றது. இந்த விலை மதிக்க முடியாத தேவார மணியை விலையின்றி வழங்கிப் புகழ் பெறுகின்றார் அருமை நண்பர் இராயவரம் இராமன் செட்டியார் அவர்கள்.

இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த ஐயா இராமனாதனார், அன்பர் இராமனார் ஆகிய இருவர்க்கும், இந்நூலைப் படித்துப் பயன் பெறும் முகத்தால் தமிழ் மக்கள் தங்கள் நன்றியைச் செலுத்துவாராக!

வணக்கம்.

அமராவதி புதூர்
காந்தி ஆண்டு அ௪
தை - ரு

ராய. சொ.

திருநாவுக்கரசு சுவாமிகள்

தேவார மணி

திருநாவுக்கரசு சுவாமிகள்

அங்க மாலை

தலையே! நீவணங்காய்!
தலை மாலை தலைக்குஅணிந்து
தலையா லேபலி தேரும் தலைவனைத்
தலையே நீவணங்காய்! **க.**

கண்காள்! காண்மின்களோ!
கடல் நஞ்சுண்ட கண்டன்தனை,
எண்தோள் வீசிநின்று ஆடும் பிரான்தனைக்
கண்காள் காண்மின்களோ! **உ.**

செவிகாள்! கேள்மின்களோ!
சிவன் எம்இறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதும்
செவிகாள் கேள்மின்களோ! **ந.**

அங்கமாலை: உறுப்புக்களின் பயனை உணர்த்தும் பாசுர வரிசை.

க. *தலைமாலை:* தலைகளால் தொடுக்கப்பெற்ற மாலை. *தலையாலே:* தலைஓட்டிலே. *பலிதேரும்:* பிச்சை ஏற்கும். *தலைவன்:* சிவபெருமான்.
தலையின் பயன் தலைவனை வணங்குவதே.

உ. *காண்மின்கள்:* பாருங்கள். *கண்டம்:* கழுத்து.
கண்களின் பயன் கடவுளைக் காண்பதே.

ந. *எரி:* தீ. *திறம்:* மேன்மை.
காதுகளைப் பெற்றோர் பெறும்பேறு, இறைசிவன் புகழ் கேட்பதே.

வாயே! வாழ்த்துகண்டாய்!
மத யானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும்பி ரான்தன்னை
வாயே வாழ்த்துகண்டாய்! ச.

தேடிக் கண்டுகொண்டேன்;
திரு மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்உளே
தேடிக் கண்டுகொண்டேன். ரு.

கலிவிருத்தம் (திருக்குறுந்தொகை)

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே;
ஈசன் எந்தை இணைஅடி நீழலே. சு.

ச. உரி: தோல். காட்டகத்து: காட்டிலிடத்திலே.
வாய் படைத்தது மதயானைத் தோல்போர்த்த மகாதேவனை வாழ்த்தவே.

ரு. நான்முகன்: பிரமன். என்உளே: எனக்குள்ளே.
பதவி படிப்பு ஆதியவற்ருல் இறுமாப்புற்ருேரால் தேடிக் காண முடியாத தேவனை என் உள்ளே கண்டுகொண்டேன்.

சு. மாசு இல்: குற்றம் இல்லாத. மாலை மதியம்: மாலைப் போதிலே தோன்றும் சந்திரன்; அஃதாவது வளர்பிறை. இளவேனில்: சித்திரை, வைகாசி மாதங்கள். மூசு வண்டு அறை: மொய்த்து வண்டுகள் ஓலமிடும். பொய்கை: தடாகம். இணை அடி: இரண்டு பாதங்கள். நீழல்: நிழல்.

ஈசன் திருவடிநிழல், வீணையின் ஒலியாகவும் திங்களின் தண்மையாகவும் தென்றலாகவும் இளவேனிலாகவும் பொய்கையாகவும் பொலிகிறது.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. ௭.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே,
புக்கு நிற்கும்பொன் ஆர்சடைப் புண்ணியன்;
பொக்கம் மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே. ௮.

விறகில் தீயினன்; பாலில் படுநெய்போல்,
மறைய நின்றுளன்; மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. ௯.

---

௭. மடநெஞ்சு: அறியாமையோடு கூடிய மனம். தாழ்த்த: வணங்க. சென்னி: தலை. சூழ்த்த: சேர்ந்த; சூழ்ந்த என்பதன் திரிபு. வீழ்த்தவா: தொலைந்து போய்விட்டதே.
வாழ்த்த வாய் தந்தான்; நினைக்க நெஞ்சு கொடுத்தான்; தாழ்த்தத் தலையளித்தான்; ஆனால் நான் எதுவும் செய்யாமல் நெடுங்காலத்தை வீணாக்கினேன்.

௮. நெக்கு நெக்கு: இளகி இளகி. புக்கு: புகுந்து. நிற்கும்: நிற்பான். பொன்ஆர்சடை: பொன்னை ஒத்த நிறமுடைய சடை. பொக்கம்: வஞ்சகம். நக்கு நிற்பன்: மறைந்து நிற்பான். அவர்தமை நாணி: அவர்கட்காக வெட்கப்பட்டு.
வஞ்சகர் பூசையைக் கண்டு கடவுளே வெட்கப்படுவான்.

௯. படு: உண்டாகும். உறவு கோல்: தொடர்பு என்ற மத்து. உணர்வு கயிறு: உணர்ச்சி என்ற கயிறு. முறுக வாங்கி: நன்றாக இழுத்து.
விறகுக்குள் தீ இருப்பதுபோலவும் பாலுக்குள் நெய் இருப்பது போலவும் இரத்தினத்துள் ஒளி இருப்பது போலவும் இறைவன் ஒவ்வொருவர் உள்ளும் மறைந்து நிற்கின்றான்; உறவு என்ற கோலைஇட்டு உணர்வு என்னும் கயிற்றைக் கொண்டு முறுக வாங்கிக் கடைந்தால் வெளிப்படுவான்.

கற்றுக் கொள்வன வாயுள நாஉள;
இட்டுக் கொள்வன பூஉள நீர்உள;
கற்றைச் செஞ்சடை யான்உளன்; நாம்உளோம்;
எற்றுக் கோநம னால்முனிவு உண்பதே. ௧௦.

மனிதர் காள்! இங்கே வம்! ஒன்று சொல்லுகேன்;
கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லிரே?
புனிதன் பொற்கழல் ஈசன்எ னுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே. ௧௧.

கங்கை ஆடில்என்? காவிரி ஆடில்என்?
கொங்கு தண்கும ரித்துறை ஆடில்என்?
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில்என்?
எங்கும் ஈசன்எ னாதவர்க்கு இல்லையே. ௧௨.

---

௧௦. கற்றை: கூட்டமான. எற்றுக்கோ: எதற்காகவோ. நமன்: எமன். முனிவு: கோபம்.

சிவனை அடைந்தார்க்கு எம பயம் இல்லை.

௧௧. வம்: வாருங்கள். புனிதன்: பரிசுத்தமானவன். பொற்கழல்: அழகிய திருவடி. சாலவும்: மிகவும். ஏசற்றவர்: விரும்பியவர்.

விரும்புபவர்க்கு, ஈசன் எனுங்கனி, மாங்கனியைவிட, பலாப் பழத்தைக் காட்டிலும் சால இனிக்கும்.

௧௨. கொங்கு: மணம். தண்: குளிர்ச்சி. ஓங்கு: ஓங்கிய. மா: பெரிய. ஓதம்: சத்தம்.

எத்தனை தீர்த்தத்தில் மூழ்கினாலும் ஈசனை எங்கும்காணும் அறிவு அற்றார்க்கு வீடு இல்லை.

வேதம் ஓதில்என்? வேள்விகள் செய்கில்என்?
நீதி நூல்பல நித்தல் பயிற்றில்என்?
ஓதி அங்கம்ஓ ராறும் உணர்கில்என்?
ஈச னைஉள்கு வார்க்கன்றி இல்லையே. க௩.

நன்று நோற்கில்என் ? பட்டினி ஆகில்என் ?
குன்றம் ஏறி இருந்தவம் செய்யில்என் ?
சென்று நீரிற் குளித்துத் திரியில்என்?
என்றும் ஈசன்என் பார்க்கன்றி இல்லையே. க௪.

கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்குஅன்பு இல்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்துஅட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே. க௫.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினர் ;
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே ;
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர் ;
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே. க௬.

க௩. வேதம் : மறை. வேள்வி : யாகம். நித்தல் : நாள் தோறும். பயிற்றில் : படித்தால். உள்குதல் : நினைத்தல்.
க௪. நோற்கில் : தவம் செய்தால். குன்றம் : மலை.

க௫. அட்டி : சேர்த்து.

கோடி தீர்த்தத்தில் குளித்தாலும் கடவுளிடத்து மெய்யன்பு இல்லாதவர் ஓட்டைக் குடத்திலே நீரைச் சேர்த்து வைத்த மூடர்க்குச் சமமாவர்.

க௬. நொந்தினர் : அழிந்தார். ஈறு இல்லாதவன். முடிவு இல்லாதவன். ஈசன் : சிவபெருமான்.

வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்!
யாதோர் தேவர் எனப்படு வார்க்கெலாம
மாதே வன்அலால் தேவர்மற்று இல்லையே. கஎ.

கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடொக்கு மோகடல் என்றல்போல்,
பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே. கஅ.

இல்லக விளக்கது; இருள்கெ டுப்பது;
சொல்லக விளக்கது; சோதி உள்ளது;
பல்லக விளக்கது; பலரும் காண்பது;
நல்லக விளக்கது; நமச்சி வாயவே. கசு.

கஎ. வாது: சண்டை. ஏழை: அறிவிலி.

கஅ. கூவல்: கேணி. குரைகடல்: கத்துகின்ற கடல். பாவகாரிகள்: பாவம் செய்வோர்.

கிணற்றில் இருக்கும் ஆமை, கடல் ஆமையைப்பார்த்து, "உங்கள் கடல் எங்கள் கிணற்றைப்போலப் பெரிதா" எனக்கேட்டதாம். கிணற்று ஆமைக்குக் கிணற்றுக்கு வெளியே இருக்கும் உலகம் தெரியாதல்லவா? இந்தக்கதையை விவேகாநந்த அடிகள் சுவை படக் கையாள்கின்றார்.

கசு. இல்அகம்: உள்வீடு. சொல் அகம்: சொல்லுக்கு உள்ளே. பல்அகம்: பல இடத்துள்ளும். நல்லஅக விளக்கு: நல்ல உள் விளக்கு.

கரவாடும் வன்நெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடைஏறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல்ஏந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. உ0.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்துஅடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

அல்லல் என்செயும்! அருவினை என்செயும்!
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்!
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே. உஉ.

உ0. கரவு ஆடும்: மறைக்கும் தன்மைகொண்ட. வல்நெஞ்சர்: கல் போன்ற கடிய மனத்தினர். கரவார்: ஒளிக்காதவர். விரவாடுதல்: கலந்து அளவளாவுதல். விடை: காளை. வித்தகன்: வல்லமையுடையவன். அரவு: பாம்பு. அனல்: நெருப்பு. இரவு ஆடும்: இரவிலே நடனமாடுகின்ற; "நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதன்" என்பது திருவாசகம்.

உக. கைப்போது: கையாகிய பூ. முப்போது: மூன்று பொழுது. அப்போது: அந்தமூன்று காலத்தும். ஐம்புலன்: மெய், வாய், கண், மூக்கு, செவி. அகத்து: உள்ளே. அடக்கி: அடங்கச்செய்து. எப்போதும்: எந்தக்காலத்தும்.

உஉ. அல்லல்: துயரம். தொல்லை: பழைய. தொந்தம்: தொடர்பு. தில்லை மாநகர்: சிதம்பரப் பெருநகரம். சிற்றம்பலம்: இறைவன் நடனமாடும் இடம். எல்லை: அளவு.

பண்ணில் ஓசை! பழத்தினில் இன்சுவை!
பெண்ணொடு ஆண்என்று பேசற்கு அரியவன்!
வண்ணம் இல்லி! வடிவுவேறு ஆயவன்!
கண்ணில் உள்மணி! கச்சிஏ கம்பனே. உங.

கையி னோடுகால் கட்டி உமரெலாம்,
"ஐயன் வீடினன்" என்பதன் முன்னம்நீர்,
பொய்யி லாஅரன் புள்ளிருக் குவேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே. உச.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்,
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்,
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்;
என்க டன்பணி செய்துகி டப்பதே. உரு.

உங. பண்: இசை. வண்ணம்இல்லி: நிறம் இல்லாதவன். கச்சி: காஞ்சிவரம். ஏகம்பன்: ஏகாம்பரநாதன்; காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் சிவன்.

உச. உமர்: நும் உறவினர். வீடினன்: இறந்துபோனான். புள்ளிருக்கு வேளூர்: வைத்தீஸ்வரன் கோவில். மைஉலாவிய கண்டன்: நஞ்சு பொருந்திய கழுத்தை உடையவன்.

கையையும் காலையும் கட்டி "தலைவன் காலமாகி விட்டான்" என்று உம் சுற்றத்தார் சொல்வதற்குமுன் கடவுளைத் தொழுங்கள்!

உரு. நம் கடம்பன்: நமது முருகவேள். பெற்றவள், உமையவள். பங்கினன்: பாகத்திலே உடைய சிவபெருமான். கடம்பை: திருக்கடம்பூர் என்னும் தலம். கரக்கோவில், கடம்பூர்க் கோவிலின் பெயர். கடன்: கடமை.

அவன் கடமை என்னையும் ஏற்றல்; என்கடமை தொண்டு செய்து கிடத்தல்.

என்னில் ஆரும் எனக்குஇனி யார்இலை;
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்;
என்உ ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்உ ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. உசு.

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும், .
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்,
எழுதும் கீழ்க்கணக்கு; இன்னம்பர் ஈசனே. உஎ.

நெஞ்சம் என்பதோர் நீள்கயம் தன்னுளே,
வஞ்சம் என்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்து,நின் நாமத் திருஎழுத்து
அஞ்சும் தோன்ற அருளும்;ஐ யாறரே. உஅ.

உசு. என்னில்: என்னைக் காட்டிலும். உயிர்ப்பாய்: மூச்சுக் காற்றாக. இன்னம்பர்: ஒரு சிவத் தலம்.

உஎ. தூ: பரிசுத்தமான. காமுற்று: விரும்பி. அரற்றுதல்: ஓலமிடுதல். புறக்கணித்தல்: பொருட்படுத்தா திருத்தல். கீழ்க்கணக்கு: கணக்கின் கீழ்.

ஈசன் இரண்டு கணக்கின்கீழ் உலகத்தவரை எழுதிப் பதிந்து வருகிறான்; ஒரு பக்கம் தொழுது மலர் தூவி ஓலமிடுபவர்; இன்னொருபுறம் வீணைகப் பொழுது போக்கிப் புறக்கணிப்பவர்.

உஅ. நீள் கயம்: நீண்ட குட்டை. வான் சுழி: பெரிய சுழல். துஞ்சும்போழ்து: இறக்கும் போது. திரு எழுத்து ஐந்து: சிவாயநம. ஐயாறர்: திருவையாற்றில் அமர்ந் திருக்கின்ற ஈசர்.

ஒழுகும் மாடத்துள் ஒன்பது வாய்தலும்
கழுகுஅ ரிப்பதன் முன்னம், கழல்அடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்று
அழும்அ வர்க்கன்பன், ஆனைக்கா அண்ணலே. ௨௯.

மாட்டைத் தேடி, மகிழ்ந்து, நீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்!
கூட்டை விட்டுஉயிர் போவதன் முன்னமே,
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. ௩௦.

இன்று ளார்நாளை இல்லை எனும்பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள்!
அன்று வானவர்க் காக விடம்உண்ட
கண்ட னார்காட்டுப் பள்ளிகண்டு உய்ம்மினே. ௩௧.

ஆணி போலநீ ஆற்ற வலியைகாண்!
ஏணி போல்இழிந்து ஏறியும் ஏங்கியும்
தோணி யாகிய சோற்றுத் துறையர்க்கே
பூணி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே! ௩௨.

---

௨௯. ஒழுகும் மாடம்: ஓட்டை வீடாகிய உடம்பு. ஒன்பது வாய்தல்: உடம்புள் இருக்கும ஒன்பது வழி. கழுகு அரிப்பதன் முன்னம்: கழுகுகள் கொத்துவதற்குமுன். கழல் அடி: சிலம்பணிந்த திருவடி. ஆனைக்கா: திருவானைக்காவல் என்னும் பதி.

௩௦. மாடு: செல்வம். நாண் இலீர்: வெட்கம் இல்லாதவர்களே. காட்டுப்பள்ளி: திருக்காட்டுப்பள்ளி என்னும் தலம்.

௩௧. ஓராது: உணராமல். உழிதரும்: அலைகின்ற. ஊமர்காள்: ஊமைகளே. உய்ம்மின்: பிழைத்துப் போங்கள்.

௩௨. ஆற்ற: மிகவும். சோற்றுத்துறை: ஒரு சிவஸ்தலம் பூணி: எருது. பணி: தொண்டு.

கனியி னும்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும்அ ரசினும்
இனியன் தன்அடைந் தார்க்குஇடை மருதனே. ௩௩.

மனத்துள் மாயனை மாசுஅறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை
எனக்குத் தாயைஎம் மான்இடை மருதனை
நினைத்திட்டு ஊறிநி றைந்ததென் உள்ளமே. ௩௪.

கல்லி னோடுஎனைப் பூட்டி, அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்க,என் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேன்அன்றே. ௩௫.

வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்;
அஞ்சஇ றப்பும் பிறப்பும் அறுக்கலாம்;
மஞ்சன் மாமயி லாடு துறைஉறை
அஞ்சொ லாள்உமை பங்கன் அருளிலே. ௩௬.

---

௩௩. கட்டிபட்ட கரும்பு : கருப்பஞ்சாற்றில் விளைந்த கட்டி. பனி : குளிர்ச்சி. பாவைநல்லார் : பதுமைபோன்றபெண்கள். தனி முடி ; ஒப்பற்ற கிரீடம். கவித்து : சூடி. இடைமருதன்: திருவிடைமருதூரை ஆளும் இறைவன்.

௩௪. மனத்துள் மாயன : உள்ளத்துள்ளே ஒளிந்திருக்கின்றவன். மாசு அறு : குற்றம் அற்ற. புனிற்றுப்பிள்ளை: இளம் குழந்தை.

௩௫. அமண்கையர் : சமணர். ஒல்லை : விரைந்து. நூக்க : தள்ள. உய்ந்தேன் : பிழைத்தேன்.

௩௬. வெம்சினம் : வெம்மையான கோபம். காலன் : எமன். விரைகிலான் : விரைந்து பற்றமாட்டான். மஞ்சன் : மைந்தன். மயிலாடுதுறை : மாயூரம் என்னும் தலம். அஞ்சொலாள் : அழகிய பேச்சினள்.

நிலைமை சொல்லுநெஞ் சே! தவம் என்செய்தாய்!
கலைகள் ஆயவல் லான், கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன், நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே. ௩௭.

பெருக லாம்தவம்; பேதைமை தீரலாம்;
திருக லாகிய சிந்தை திருத்தலாம்;
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்;
மருக லான்அடி வாழ்த்தி வணங்கவே. ௩௮.

எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே!
பந்தம் வீடுஅவை ஆய பராபரன்,
அந்தம் இல்புகழ் ஆரூர் அரன்நெறி
சிந்தை உள்ளும் சிரத்துளும் தங்கவே. ௩௯.

என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே!
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்,
செந்நெ லார்வயல் சேறையுட் செந்நெறி,
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. ௪௦.

---

௩௭. கலைகள் ஆய வல்லான்: கலைகளால் ஆராய வல்லவன்.

௩௮. மருகலான்: திருமருகல் என்னும் தலத்தில் இருப்பவன்.

௩௯. பந்தம்: கட்டு. அந்தம் இல் புகழ்: முடிவற்ற கீர்த்தி. ஆரூர்: திருவாரூர்.

௪௦. வார்: நீண்ட. விழு: மேலான. சேறை: திருச்சேறை என்னும் தலம்.

அனுச யப்பட்டு அதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே. ௪௧.

பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரோ!
மண்ணி னார்வலம் செய்மறைக் காடரோ!
கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே. ௪௨

தேடிச் சென்று திருந்துஅடி ஏத்துமின்!
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்;
ஆடிப் பாடிஅண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நமது உள்ள வினைகளே. ௪௩

பஞ்சின் மெல்அடிப் பாவைஓர் பங்கனைத்
தஞ்சம் என்றுஇறு மாந்துஇவள் ஆரையும்
அஞ்சு வாள்அல்லள் ஆவடுதண் துறை
மஞ்ச னேஇஇவள் ஆடிய மையலே. ௪௪.

---

௪௧. அனுசயம்: வைராக்கியம். பூவனூர்: ஒரு சிவஸ்தலம்.

௪௨. மறைக்காடு: வேதாரண்யம்.

௪௪. பஞ்சின்: பஞ்சைப் போன்ற. தஞ்சம்: அடைக்கலம். ஆவடுதண்துறை: திருவாவடுதுறை. மஞ்சன்: மைந்தன். மையல்: மயக்கம்.

இப்பாசுரம் நற்றாயிரங்கல் என்னும் துறைப்பாட்டு. தாம்தாயாராக இருந்து தம்மகள் கடவுளைக் காதலிப்பதாக அடிகள் பாடுகிறார்.

ஊச லாள்அல்லள்; ஒண்கழ லாள்அல்லள்;
தேச மாம்திருப் பாண்டிக் கொடுமுடி
ஈச னே,எனும் இத்தனை அல்லது
பேசு மாறுஅறி யாள்ஒரு பேதையே. ௬௫.

சொன்மாலை பயில்கின்ற குயில்இனங்காள்! சொல்லீரே!
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்,
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்,என் புதுநலம்உண் டிகழ்வானோ.

வஞ்சித்துஎன் வளைகவர்ந்தான் வாரானே ஆயிடினும்
பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்;
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழல்ஓம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்! கொடியையே. ௬௭.

---

௬௫. ஊசலாள் அலள்: ஊஞ்சல் ஆடமாட்டாள். ஒண் கழலாள் அலள்: ஒளிமிக்க கழல் விளையாடலையும் செய்யமாட்டாள். பாண்டிக் கொடுமுடி; ஒரு சிவஸ்தலம். பேதை: பெண். **இதுவும் முன்பாட்டுப் போன்ற தாயார் பாசுரமே.**

௬௬. சொல்மாலை: சொல்வரிசை. வரி: கோடு. பண்மிழற்றும்: இசைபாடும். பழனம்: திருப்பழனம். புதுநலம்: புதிய அழகு. **இப்பாடல் குயில் விடு தூது. அடிகள் தாம் நாயகியாக இருந்து நாயகனும் பொன்மாலை மார்பனுகிய பழனத்தானுக்குக் குயிலைத் தூது அனுப்புகின்றார்.**

௬௭. வளை: வளையல். கவர்ந்தான்: பிடுங்கிக்கொண்டவன். வாரானே ஆயிடினும்: வராவிட்டாலும். பஞ்சி: பஞ்சு. பரந்து: பரவலாக. ஆர்க்கும்: ஒலிக்கின்ற. கலி: துன்பம். மெலிய: வாட்டமுற. அழல் ஓம்புதல்: தீவளர்த்தல். அப்பூதி: அப்பூதி அடிகள் நாயனார்; அவர் திருநாவுக்கரசரின் பேரன்பர். குஞ்சிப்பூ: குடுமியில் சூடும்மலர். அப்பூதி தலைமேற் சூடிய மலர் சிவபெருமானின் சேவடி என்பது கருத்து. **இப்பாசுரமும் தலைவி கூறுவதே.**

கட்டளைக் கலித்துறை (திருவிருத்தம்)

சிவன்எனும் நாமம் தனக்கே
உடையசெம் மேனிஎம்மான்,
அவன்எனை ஆட்கொண்டு அளித்திடும்
ஆகில் அவன்தனையான்
பவன்எனும் நாமம் பிடித்துத்
திரிந்துபன் நாள்அழைத்தால்
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழி
யான்என்று எதிர்ப்படுமே. ௨அ.

கல்நெடும் காலம் வெதும்பிக்
கருங்கடல் நீர்சுருங்கிப்
பல்நெடுங் காலம் மழைதான்
மறுக்கினும் பஞ்சம்உண்டென்று
என்? நெடும் சூழ்அறும்; அஞ்சல்நெஞ்
சே! இமை யாதமுக்கண்
பொன்நெடுங் குன்றம் ஒன்று உண்டுகண்
டீர்இப் புகல்இடத்தே. ௨௬.

௨அ. எம்மான் : எம் தலைவன். பவன் : எல்லாவற்றையும் பிறப்பிக்கின்ற சிவபிரான். எதிர்ப்படும் : முன்னர்த்தோன்றுவான்.

ஓயாது அழைத்தால் " ஏது இவன் விடமாட்டான் போல் இருக்கிறதே" என வந்து தோன்றிவிடுவான்.

௨௬. கல் நெடுங்காலம் : மண் கல்லாக விளையக்கூடிய அவ்வளவு நீண்ட காலம். என்?: ஏன் நினைக்கின்றாய். நெடும் சூள் அறும் : நீண்ட சாபம் நீங்கும். அஞ்சல் : பயப்படாதே. இமையாத முக்கண் : மூடாத மூன்று கண்கள். பொன் நெடுங் குன்றம், சிவபெருமான். இப்புகல் இடம் : இந்தப் புகழுடைய உலகம்.

வானம் துளங்கிலென்? மண்கம்பம்
ஆகிலென்? மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு
மாறிலென்? தண்கடலும்
மீனம் படிலென்? விரிசுடர்
வீழிலென்? வேலைநஞ்சுண்டு
ஊனம்ஒன்று இல்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே ருo

முன்னே உரைத்தால் முகமனே
ஒக்கும்இம் மூஉலகுக்கு
அன்னையும் அத்தனும் ஆவாய்!
அழல்வணா! நீஅலையோ?
உன்னை நினைந்தே கழியும்என்
ஆவி; கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெறாய்எம்
பிரான்உன்னை வேண்டியதே. ருக

ருo. துளங்கில்: அசைந்தால். மண்கம்பம்: பூமிஆட்டம். மால்வரை: பெருமலை. தானம் துளங்கி: இடம் பெயர்ந்து. தலை தடுமாறுதல்: நிலை குலைதல். மீனம்படில் என? (கடலில்) மீனே இல்லாமற் பட்டுப்போனால் என்ன?. விரி சுடர் வீழில் என்? சந்திர சூரியர் கீழே வீழ்ந்து விட்டால் தான் என்ன? வேலை: கடல். ஊனம்: குற்றம். ஒருவன்: சிவ பெருமான். உத்தமர்: அவன் மெய்யடியார்.

ருக. முகமன்: உபசார வார்த்தை. அத்தன்: தந்தை. அழல்வணா!: நெருப்புப்போன்ற நிறமுடைய சிவபெருமானே!

இன்றுஅரைக் கண்உடை யார்எங்கும்
இல்லை; இமயம்என்னும்
குன்றுஅரைக் கண்ணன் குலமகட்
பாவைக்குக் கூறுஇட்டநாள்
அன்று, அரைக் கண்ணும் கொடுத்து, உமை
யாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண் டீர்! ஒற்றி
யூர்உறை உத்தமனே. ருஉ

பொருவிடை ஒன்றுடைப் புண்ணிய
மூர்த்தி; புலிஅதளன்;
உருவுடை அம்மலை மங்கை
மணாளன்; உலகுக்கெல்லாம்
திருவுடை அந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்;
திருவடி யைக்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. ருங.

ருஉ. அரைக்கண்: பாதிப்பகுதி. இமயம் என்னும் குன்று அரைக்கண்ணன் குலமகட்பாவைக்கு: இமயம் என்று சொல்லக்கூடிய மலையரசனின், பாவைபோன்ற குலமகளாகிய பார்வதிக்கு. கூறுஇட்டநாள் அன்று: சொத்தைப் பிரித்துக் கொடுத்த அந்தக் காலத்து. அரைக்கண்ணும் கொடுத்து: உடம்பில் பாதிஇடமும் அளித்து. ஒன்றரைக்கண் உடையவன் என்பது நிந்தனைப்புகழ்ச்சி.

ருங. பொருவிடை: போர்க்காளை. புலிஅதளன்: புலித் தோலை உடுத்தவன். உருவு உடை: அழகு பொருந்திய. அம்மலை மங்கை: அந்தப் பர்வதராசன் மகளாகிய பார்வதி.

3

ஒன்றி இருந்து நினைமின்கள்!
உந்தமக்கு ஊனம் இல்லை;
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தான், அடியவற்காச்;
சென்று தொழுமின்கள்! தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்;
"என்றுவந் தாய்" என்னும் எம்பெரு
மான்தன் திருக்குறிப்பே. ருச.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தே இந்த மாநிலத்தே. ருரு.

ருச. ஒன்றி இருந்து: ஒருமனப்பட்டிருந்து. கன்றிய காலன்: கோபித்த எமன். கடிந்தான்: அடக்கினன். அடியவன்: மார்க்கண்டன். நட்டம்: கூத்து.

தில்லைக்கூத்தனின் தோற்றம் "அப்பா! எப்பொழுது வந்தாய்?" என்று ஆடிக்கொண்டே தம்மைக் கேட்பதுபோலத் தோன்றுகிறது, திருநாவுக்கரசு சுவாமிகட்கு.

ருரு. குனித்த: வளைத்த. குமிண்சிரிப்பு: அரும்பியநகை. பனித்த: குளிர்ந்த. இனித்தம்: தித்திப்பு. எடுத்த பொற்பாதம்: குஞ்சிதபாதம்.

தெண்ணிலா மலர்ந்த வேணியானின் திருநடம் காணும் பேறு பெற்றால் மனிதப்பிறவி தேவைதான்.

சாட எடுத்தது, தக்கன் தன்
வேள்வியிற் சந்திரனை;
வீட எடுத்தது, காலனை;
நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது, தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதம்அன்
றே, நம்மை ஆட்கொண்டதே. ருசு

சிந்திப் பரியன; சிந்திப்
பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன; முத்தி
கொடுப்பன; மொய்த்து, இருண்டு,
பந்தித்து, நின்ற பழவினை
தீர்ப்பன; பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்து ஆடும், ஐ
யாறன் அடித்தலமே. ருஎ

ருசு. சாட: மோத. வீட: உருண்டுவிழ.
சந்திரனைச் சாடவும் எமனை வீடவும் திருமாலும் பிரமனும் தேடவும் எடுக்கப்பெற்ற திருவடியே, தில்லை நகருள் சிற்றம் பலத்துள் நடனம் ஆடவும் எடுக்கப்பெற்றது. அத்திருவடியே நம்மை ஆட்கொண்டது.

ருஎ. சிந்திப்ப அரியன: சிந்திக்க முடியாதன. முந்தி: விரைந்து. மொய்த்து: அடர்ந்து. இருண்டு: இருள் அடைந்து. பந்தித்து: கட்டுப்படுத்தி. நின்ற: விலகாமல் இருந்த. அந்திப்பிறை: மாலை மதியம். அடித்தலம்: திருவடித்தாமரை.

களித்துக் கலந்ததொர் காதற்
கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றஇப்
பத்தரைக் கோதில்செந்தேன்
தெளித்துச் சுவையமுது ஊட்டி
அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெரும்செல்வம் ஆக்கும்,ஐ
யாறன் அடித்தலமே. ௫அ.

மலையார் மடந்தை மனத்தன;
வானோர் மகுடம்மன்னி
நிலையாய் இருப்பன; நின்றோர்
மதிப்பன; நீள்நிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன;
பொன்உல கம்அளிக்கும்
அலையார் புனற்பொன்னி ஆழ்ந்தஐ
யாறன் அடித்தலமே. ௫௬.

௫அ. காதற் கசிவு: அன்புக் கனிவு. பத்தர்: அடியார். கோதுஇல்: குற்றம் அற்ற. தெளித்து: தூவி. அளித்து: காப்பாற்றி.

௫௬. மலையார் மடந்தை: பார்வதி. மகுடம்மன்னி: முடியிலே பொருந்தி. புலையாடு புன்மை: இழிந்த சிறுமை. தவிர்ப்பன: நீக்குவன. அலையார் புனற்பொன்னி: அலை மோதும் நீரையுடைய காவிரி.

மன்னும் மலைமகள் கையால்
வருடின; மாமறைகள்
சொன்ன துறைதொறும் தூப்பொருள்
ஆயின; தூக்கமலத்து
அன்ன வடிவின; அன்புடைத்
தொண்டர்க்கு அமுது அரும்பி,
இன்னல் களைவன; இன்னம்ப
ரான்தன் இணையடியே. ௬௦.

மண்பா தலம்புக்கு மால்கடல்
மூடிமற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர்
வீழினும் அஞ்சல்நெஞ்சே!
திண்பால் நமக்கொன்று கண்டோம்;
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழல்இணையே. ௬௧.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா!
உன்அடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டும்;இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே. ௬௨.

---

௬௦. மன்னும்: நிலைபெறுடைய. வருடின: நீவப்பெற்றன. தூ: புனிதம். கமலம்: தாமரை. இன்னல்: துன்பம். களைதல்: நீக்குதல். இன்னம்பர்: ஒரு சிவஸ்தலம்.

௬௧. மண்பாதலம்புக்கு: இவ்உலகம் பாதாள உலகத்துள்ளே புகுந்து. மாகடல்மூடி: பெருங்கடல் தூர்ந்து. இருசுடர்: சந்திர சூரியர். திண்பால்: உறுதியாக.

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையும் கருத்துடையேன் ;
உருவாய்த் தெரிந்துன்தன் நாமம்
பயின்றேன் உனதருளால் ;
திருவாய் பொலியச் "சிவாய
நம"என்று நீறு அணிந்தேன் ;
தருவாய், சிவகதி! நீ, பா
திரிப்புலி யூர்அரனே. கங

வெம்மை நமன்தமர் மிக்கு
விரவி விழுப்பதன்முன்,
இம்மைஉன் தாள்என்தன் நெஞ்சத்து
எழுதிவை; ஈங்குஇகழில்,
அம்மை! அடியேற்கு அருளுதி
என்பதுஇங்கு ஆர்அறிவார்?
செம்மை தருசத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே! கச.

கங. கருவாய் : கருப்பத்தினிடத்தே. திருவாய் பொலிய : திருவாய் பொலிவுபெற; 'சிவாயநம' என்பதனுலே வாய் பொலிவு பெறுகிறது ; அதனுல் அது திருவாயும் ஆகிறது.

கச. வெம்மை : கொடுமை. விழுப்பதன்முன் : இழுப்பதற்குமுன்னே, ஈங்கு இகழில் : இங்கு இகழ்ந்து தள்ளிவிடுவாயாகில். சத்தி முற்றம், ஒரு சிவஸ்தலம்.

புற்றினில் வாழும் அரவுக்கும்
  திங்கட்கும் கங்கைஎன்னும்
சிற்றிடை யாட்கும் செறிதரு
  கண்ணிக்கும் சேர்விடமாம்;
பெற்றுடை யான்பெரும் பேச்சுடை
  யான்பிரி யாதெனையாள்
விற்றுடை யான்ஒற்றி ஊருடை
  யான்தன் விரிசடையே. ௬௫.

கருஉற்ற நாள்முத லாகஉன்
  பாதமே காண்பதற்கு
உருகிற்றுஎன் உள்ளமும், நானும்
  கிடந்துஅலந்து எய்த்துஒழிந்தேன்;
திருஒற்றி யூரா! திருவால
  வாயா! திருவரூரா!
ஒருபற்று இலாமையும் கண்டுஇரங்
  காய்கச்சி ஏகம்பனே. ௬௬.

---

௬௫. கண்ணி: தலையிற் சூடும் மாலை. சேர்விடம்: அடையும் இடம். பெற்றுடையான்: என்னை ஆளாகப்பெற்றவன். பெரும் பேச்சுடையான்: பெரிய புகழுக்கு இடமானவன். எனை ஆள் விற்றுடையான்: என்னை ஆளவும் விற்கவும் உரிமை உடையவன். "இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக் கொள் ஒற்றிவை" என்று திருவாசகம் கூறும்.

பாம்புக்கும் சந்திரனுக்கும் கங்கைக்கும் கொன்றைக் கண்ணிக்கும் ஒருங்கே தங்கும் இடமாக இருக்கின்றது சிவபெருமானின் விரிசடை.

௬௬. கருஉற்ற: தாயின் கருப்பத்தில் பொருந்திய. அலந்து: வருந்தி. திருவால்வாய: மதுரை. 'திருவரூரா' என்பதில் ஆகாரம் செய்யுள் நோக்கிக் குறுகின்றது. கட்டளைக் கலித்துறை ஈற்றுச்சீர் விளங்காயாகத்தான் வரவேண்டும் என்பது யாப்பிலக்கணவிதியாகலின் 'திருவாரூரா' என்று 'புளிமாந்தண்பூ' வருமாறு இல்லை.

அறுசீர் விருத்தம் (திருநேரிசை)

காயமே கோயில் ஆகக்
கடிமனம் அடிமை ஆக
வாய்மையே தூய்மை ஆக
மனமணி இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
போற்றஇக் காட்டி னோமே. ௬௭.

விளைவுஅறிவு இலாமை யாலே
வேதனைக் குழியில் ஆழ்ந்து
களைகணும் இல்லேன்; எந்தாய்!
காமரம் கற்றும் இல்லேன்;
தளைஅவிழ் கோதை நல்லார்
தங்களோடு இன்பம் எய்த
இளையனும் அல்லேன்; எந்தாய்!
என்செய்வான் தோன்றி னேனே. ௬௮.

---

௬௭. காயம்: உடம்பு. கடிமனம்: ஐயம் கொண்ட மனம். மனமணி: ஆன்மா. நேயம்: அன்பு. அமைய: பொருந்த. இ.காட்டினோமே: இங்குக்காட்டினோம்.
உடம்பிலேயே கடவுளைக் காண்கின்றார் அப்பர் சுவாமிகள்.

௬௮. ஆழ்ந்து: மூழ்கி. களைகண்: பற்றுக்கோடு. காமரம்: இசை. தளை அவிழ் கோதை நல்லார்: இதழ் விரிந்த மாலையை அணிந்த பெண்கள்.

உடம்புஎனும் மனைஅ கத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
உயிர்எனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்புஅமர் காளை தாதை
கழல்அடி காண லாமே. ௬௯

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்புஎனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவுஎனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையும் அன்றே. ௭௦.

---

௬௯. மனை அகத்துள் : வீட்டுக்குள். தகளி : விளக்கு வட்டில். மடம்படும் உணர்நெய் அட்டி : அறியாமையைக் கெடுக்கும் உணர்வு என்ற நெய்யை ஊற்றி. திரிமயக்கி : திரியை இட்டு. கடம்பு அமர்காளை : கடம்பமரத்தடியில் விரும்பி அமர்கின்ற முருகக் கடவுள்.

௭௦. வித்தை வித்தி : முளையை விதைத்து. களை : வேண்டாத புற்பூடு. வாங்கி : பிடுங்கி. பொறை : பொறுமை. நோக்கிக் கண்டு : நன்றாகப்பார்த்து. தகவு : தகுதி. வேலி: அடைப்பு.

கள்ளனேன்; கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன்; நாடிக் கண்டேன்;
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடன்இருந்து அறிதி என்று
வெள்கினேன்; வெள்கி நாணும்
விலாஇறச் சிரித்திட் டேனே. எக.

கறுத்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையைக் கையால்
மறித்தலும், மங்கை அஞ்ச,
வானவர் இறைவன் நக்கு
நெறித்தொரு விரலால் ஊன்ற,
நெடுவரை போல வீழ்ந்தான்;
மறித்துஇறை ஊன்றி னேல்
மறித்துநோக்கு இல்லை யன்றே. எஉ.

எக. கள்ளத் தொண்டு: ஏமாற்றும் பணி. நாடி: தேடி. வெள்கி: வெட்கப்பட்டு. விலாஇற: விலா எலும்பு முறியும்படி.

எஉ. கறுத்தவன்: கறுப்பு நிறமான இராவணன். மறித்தலும்: எடுத்தவுடன். மங்கை: அம்பிகை. வானவர் இறைவன்: சிவபெருமான். நக்கு: சிரித்து. ஊன்ற: அமுக்க. நெடுவரை: பெரியமலை. வீழ்ந்தான்: வீழ்ந்து விட்டான் இராவணன். திரும்பச் சிறிது அழுத்தினான் ஆனால் இராவணன் அப்போதே அழிந்திருப்பான் என்பது கடைசி அடியின் கருத்து.

குவப்பெரும் தடக்கை வேடன்
  கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்,
துவர்ப்பெரும் செருப்பால் நீக்கித்
  தூயவாய்க் கலசம் ஆட்ட,
அவப்பெரும் குருதி சோர,
  ஒருகணை இடந்தங்கு அப்பத்
தவப்பெருந் தேவு செய்தார்
  சாய்க்காடு மேவி னாரே. எரு.

சகமலாது அடிமை இல்லை;
  தானலால் துணையும் இல்லை;
நகமெலாம் தேயக் கையால்
  நாள்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர் மல்க
  முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகமலால் கோயில் இல்லை;
  ஐயன்ஐ யாற னார்க்கே. எச.

எரு. குவ: குவிந்த; குவவு என்பதன் கடைக்குறை. வேடன்: கண்ணப்ப நாயனார். கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்: வளைந்த வில்லில் கோத்துவந்த மாமிசச் சுமை. துவர்: புழுதி. வாய்க்கலசம்: வாயிற் கொண்டுவந்த நீர். அவம்: பழி. ஒரு கணை: ஒருகண்ணை. இடந்து: தோண்டி.

எச. சகம்: உலகம். நாள்மலர்: அன்று அலர்ந்த பூ. அகம்: உள்ளம்.

கச்சைசேர் அரவர் போலும்!
  கறைஅணி மிடற்றர் போலும்!
பிச்சைகொண்டு உண்பர் போலும்!
  பேரரு ளாளர் போலும்!
இச்சையால் மலர்கள் தூவி
  இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க்கு இனியர் போலும்!
  நாகஈச் சரவ னாரே. எரு.

மாஇரு ஞாலம் எல்லாம்
  மலர்அடி வணங்கும் போலும்!
பாய்இரும் கங்கை யாளைப்
  படர்சடை வைப்பர் போலும்!
காஇரும் பொழில்கள் சூழ்ந்த
  கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்!
  ஆவடு துறைய னாரே. எசு.

எரு. கச்சை: இடுப்பில் கட்டும் கயிறு. கறை: நஞ்சம். மிடறு: கண்டம். நாகஈச்சரம்: திருநாகேச்சுரம் என்னும் ஊர்.

எசு. மாஇருஞாலம்: மிகப்பெரிய உலகம். படர்சடை: பரந்தசடை. கழுமலவூரர்: சீகாழி வந்த ஞானசம்பந்தர்.

செறிவிலேன் சிந்தை உள்ளே;
  சிவன்அடி தெரிய மாட்டேன்;
குறியிலேன்; குணம்ஒன்று இல்லேன்;
  கூறுமா கூற மாட்டேன்;
நெறிபடு மதிஒன்று இல்லேன்;
  நினையுமா நினைய மாட்டேன்;
அறிவிலேன்; அயர்த்துப் போனேன்;
  ஆவடு துறையு ளானே. எஎ.

உன்னிப் போதும் நெஞ்சுள்
  ஒருவனை ஏத்து மின்னோ!
கன்னியை ஒருபால் வைத்துக்
  கங்கையைச் சடையுள் வைத்துப்
பொன்னியின் நடுவு தன்னுள்
  பூம்புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தி யானைத்
  தொண்டனேன் கண்ட வாறே. எஅ.

எஎ. செறிவு: நிறைவு. குறி: குறிக்கோள். நெறி: மார்க்கம். மதி: புத்தி. நினையுமா: நினைக்க வேண்டிய மாதிரி.

எஅ. உன்னி: நினைத்து. பொன்னியின் நடுவு: காவிரியின் மத்தி. துன்னிய: நெருங்கிய. துருத்தி: திருத்துருத்தி; தஞ்சைஜில்லாவில் இன்று குத்தாலம் எனவழங்கப்படும் ஊர்.

நொய்யவர்; விழுமி யாரும்;
  நூலினுள் நெறியைக் காட்டும்
மெய்யவர்; பொய்யும் இல்லார்;
  உடல்எனும் இடிஞ்சில் தன்னில்
நெய்யமர் திரியும் ஆகி
  நெஞ்சத்துள் விளக்கும் ஆகிச்
செய்யவர் கரிய கண்டர்
  திருச்செம்பொன் பள்ளி யாரே. ௭௯.

துஞ்சுஇருள் காலை மாலை
  தொடர்ச்சியை மறந்தி ராதே,
அஞ்சுஎழுத்து ஓதின் நாளும்
  அரன்அடிக்கு அன்பது ஆகும்;
வஞ்சனைப் பாற்சோறு ஆக்கி
  வழக்கிலா அமணர் தந்த
நஞ்சுஅமுது ஆக்கு வித்தார்
  நனிபள்ளி அடிக ளாரே. ௮௦.

---

௭௯. நொய்யவர்: நுணுக்கமானவர். விழுமியாரும்: பருப்பொருளுமாவார். இடிஞ்சில்: விளக்குத்தகளி.

௮௦. துஞ்சுஇருள்: தூங்குகின்ற இராப்பொழுது. வழக்கிலா: முறையற்ற. அமணர்: சமணர்.

சந்தணி கொங்கை யாளோர்
பங்கினர்; சாம வேதர்;
எந்தையும் எந்தை தந்தை
தந்தையும் ஆய ஈசர்;
அந்தியோடு உதயம் அந்த
ணாளர்ஆன் நெய்யால் வேட்கும்
வெந்தழல் உருவர்; வீழி
மிழலையுள் விகிர்த னாரே. ௮௧.

மெய்உளே விளக்கை ஏற்றி,
வேண்டளவு உயரத் தூண்டி,
உய்வதோர் உபாயம் பற்றி,
உகக்கின்றேன்; உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர்!
அவர்களே வலியர் சால;
செய்வதொன்று அறிய மாட்டேன்
திருப்புக லூர னாரே. ௮௨.

---

௮௧. சந்து: சந்தனம். அந்தணாளர். அழகிய தண்ணளியை உடையார். ஆன்: பசு. வேட்கும்: வேள்வி செய்யும்.

௮௨. மெய்: உடம்பு. உய்வது: கடைத்தேறுவது. உகத்தல்: மகிழ்ச்சி அடைதல். ஐவர்: ஐம்புலன். அகத்தே: உள்ளே. அவர்கள்: அந்த ஐவர். வலியர் சால: மிகவும் வல்லவர்.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
 மேனியான் தாள்தொ ழாதே,
உய்யலாம் என்றுஎண்ணி உறிதூக்கி
 உழிதந்தேன்; உள்ளம் விட்டுக்
கொய்புலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
 மயில்ஆலும் ஆரூ ரரைக்
கையினால் தொழாதொழிந்து கனிஇருக்கக்
 காய்கவர்ந்த கள்வ னேனே. அ௩.

உயிர்நிலை உடம்பே காலா
 உள்ளமே தாழி யாகத்
துயரமே ஏற்றம் ஆகத்
 துன்பக்கோல் அதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப்
 பாழ்க்குநீர் இறைத்து மிக்க
அயர்வினால் ஐவர்க்கு ஆற்றேன்
 ஆரூர்மூ லட்ட னீரே. அ௪.

அ௩. சண்ணித்த: பூசிய, உறிதூக்கி உழிதந்தேன்: உறியைத்தூக்கிக் கொண்டு அலைந்தேன்; உறியைக் கையில் தூக்கித் திரிதல் சமணக்கொள்கை. ஆலுதல்: ஆடுதல், "கனி இருக்கக் காய்கவர்ந்த" என்பது "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்ற திருக்குறள் ஆட்சி.

அ௪. உயிர்நிலை உடம்பே காலா: உயிர் நிற்றற்குக் காரணமாகிய உடம்பைக் காலாகக்கொண்டு. தாழி: நீர் இறைக்கும் சால். ஏற்றம்: துலாமரம். கோல்: ஏற்றத்தில்உள்ள கம்பு. அயர்வு: சோர்வு. ஐவர்: பஞ்சேந்திரியம். மூலட்டம்: மூலட்டானம்; திருவாரூர்க்கோவிலின் பெயர்.

நாகத்தை நங்கை அஞ்ச,
நங்கையை மஞ்ஞை என்று
வேகத்தைத் தவிர நாகம்,
வேழத்தின் உரிவை போர்த்துப்
பாகத்தின் நிமிர்தல் செய்யாத்
திங்களை மின்னென்று அஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம்
அடங்கும்ஆ ரூர னார்க்கே. ௮௫.

குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை, என்றும்
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்லன் ஆகி
உணருமாறு உணர்த்து வேனே. ௮௬.

---

௮௫. நாகம் : பாம்பு. நங்கை : உமை. மஞ்ஞை : மயில். தவிர : நீக்க. வேழம் : யானை. உரிவை : தோல். திங்கள் : சந்திரன். மின் : மின்னல். ஆகம் : உடம்பு.

நாகம், நங்கை, யானைத்தோல், திங்கள் இவைகளெல்லாம் சிவபெருமானோடு ஒட்டிய பொருள்கள்; நாகத்தைக் கண்டு நங்கை பயந்தாள்; நங்கையை மயில் என்று கருதி நாகம் வேகம் தணிந்தது; யானைத் தோலால் மூடப்பட்ட உடம்பின் உச்சியில் தோன்றிய திங்களை மின்னல் எனக்கருதி உடம்பிற்கிடந்த பாம்பு அடங்கி விட்டது; இவ்வளவு திருவிளையாடல் நடக்கின்றது சிவபெருமான் உடம்புக்குள்.

௮௬. குறவி : வள்ளி என்ற குறத்தி. நறவு : தேன். நறு : நல்ல. மெல் : மெல்லிய. வேளூர் : வைத்தீஸ்வரன் கோவில். உறவு : தொடர்பு.

கோடிமா தவங்கள் செய்து
குன்றினுர் தம்மை எல்லாம்
வீடவே சக்க ரத்தால்
எறிந்துபின் அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ!
நன்னெறி ஆகும் அன்றே. அஎ.

வரைகள்ஒத் தேஉ யர்ந்த
மணிமுடி அரக்கர் கோனை
விரையம்உற்று அறஒ டுக்கி
மீண்டுமால் செய்த கோயில்
திரைகள்முத் தால்வ ணங்கும்
திருஇரா மேச்சு ரத்தை
உரைகள்பத் தால்உ ரைப்பர்,
உள்குவார் அன்பி னுலே. அஅ.

அஎ. குன்றினுர் : ஒழுக்கத்தில் குறைந்தார். வீட : அழிய. மால் : திருமால். செய்த : கட்டிய.

இராமேஸ்வரம் கோவில் திருமாலின் அவதாரமாகிய இராம பிரானுல் கட்டப்பெற்றது என்பது கருத்து. இராமனுக்கு நாதன் என்னும் பொருளிலேயே இராமேஸ்வரம்சிவபெருமான் இராம னுதன் என்னும் பெயர் பெற்றிருக்கிருர் என்பர்.

அஅ. விரையம் உற்று அற : கெடுதல்பெற்று ஒழிய. மீண்டு : இலங்கையினின்றும் திரும்பி. திரை : அலை. உள்குதல் : நினைந்துருகுதல்.

ஒருமுழம் உள்ள குட்டம்,
ஒன்பது துறைஉ டைத்தாய்,
அரைமுழம் அதன்அ கல்லம்,
அதனில்வாழ் முதலை ஐந்து,
பெருமுழை வாய்தல் பற்றிக்
கிடந்துநான் பிதற்று கின்றேன்;
கருமுகில் தவழும் மாடக்
கச்சிஏ கம்ப னீரே. ௩௯.

மனமெனும் தோணி பற்றி
மதிஎனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும் போது
மதமெனும் பாறை தாக்கி
மறியும்போது அறிய ஒண்ணாது
உனைஉனும் உணர்வை நல்காய்!
ஒற்றியூர் உடைய கோவே. ௪௦.

---

௩௯. குட்டம்: குட்டை. துறை: வழி. முதலை ஐந்து: ஐம்புலன். முழை வாய்தல்: துவாரவாய். கருமுகில்: கரிய மேகம்.

௪௦. தோணி: படகு. மதி: அறிவு. கோல்: தள்ளுகம்பு. சினம்: கோபம். மதம்: உன்மத்தம். பாறை: கற்பாறை. மறியும்போது: நிலைகுலையும்போது.

பிறைஅணி முடியி னானே!
பிஞ்ஞகா! பெண்ணோர் பாகா!
மறைவலா! இறைவா! வண்டார்
கொன்றையாய்! வாம தேவா!
அறைகழல் அமரர் ஏத்தும்
அணிஅணா மலையு ளானே!
இறைவனே! உன்னை அல்லால்
யாதுநான் நினைவி லேனே. ௯௧.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்;
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்;
நலம்தீங்கினும் உன்னை மறந்தறியேன்;
உன்நாமம்என் நாவில் மறந்தறியேன்;
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்!
உடல்உள்ளுறு சூலை தவிர்த்தருளாய்!
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. ௯௨.

---

௯௧. பிறை: சந்திரன். அணி: சூடிய. பிஞ்ஞகன்: தலை அலங்காரம் உடையவன். அணி அணாமலை: அழகிய அண்ணாமலை.

௯௨. சலம்: நீர். உலந்தார்: இறந்தார். பலி: பிச்சை. சூலை: ஒருநோய். அலந்தேன்: நொந்துபோனேன். அதிகைக் கெடில வீரட்டானம்: கெடிலநதி சூழ்ந்த திருஅதிகை வீரட்டானம் என்னும் தலம்.

நீதியால் வாழ மாட்டேன்;
நித்தலும் தூயேன் அல்லேன்;
ஓதியும் உணர மாட்டேன்;
உன்னைஉள் வைக்க மாட்டேன்;
சோதியே! சுடரே! உன்தன்
தூமலர்ப் பாதம் காண்பான்,
ஆதியே! அலந்து போனேன்;
அதிகைவீ ரட்ட னீரே. ௩௩.

தலைசுமந்து இருகை நாற்றித்
தரணிக்கே பொறைய தாகி,
நிலையிலா நெஞ்சம் தன்னுள்
நித்தலும் ஐவர் வேண்டும்
விலைகொடுத்து அறுக்க மாட்டேன்;
வேண்டிற்றே வேண்டி எய்த்தேன்;
குலைகொள்மாங் கனிகள் சிந்தும்
கோவல்வீ ரட்ட னீரே. ௩௪.

---

௩௩. நித்தலும்: நாள்தோறும். காண்பான்: காணும் பொருட்டு.

௩௪. நாற்றி: தொங்கவிட்டு. பொறையதாகி: பாரமாக இருந்து. ஐவர் வேண்டும் விலை கொடுத்து அறுக்கமாட்டேன்: ஐம்புலன்களும் விரும்பும் விலையைக்கொடுத்துப் பற்றைவிடமாட்டேன். குலை: கொத்து. கோவல்: திருக்கோவலூர் என்னும் மிகப் பழம் பதி.

"தலை சுமந்து இருகை நாற்றி" என்ற சொற்றொடர் கம்பராமாயணத்தில் அப்படியே காணப்படுகிறது.

படைகள்போல் வினைகள் வந்து
பற்றிஎன் பக்கல் நின்றும்
விடகிலா; ஆத லாலே
விகிர்தனை விரும்பி ஏத்தும்
இடையிலேன்; என்செய் கேன்நான்?
இரப்பவர் தங்கட்கு என்றும்
கொடையிலேன்; கொள்வ தேநான்;
கோவல்வீ ரட்ட னீரே. ௬௫.

மண்ணிடைக் குரம்பை தன்னை
மதித்துநீர் மையல் எய்தில்,
விண்ணிடைத் தரும ராசன்
வேண்டினால் விலக்கு வார்ஆர்?
பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பத்தர்க்கு என்றும்
கண்ணிடை மணியர் போலும்!
கடவூர்வீ ரட்ட னாரே. ௬௬.

---

௬௫. படைகள்போல்: சேனைகளைப்போல வரிசையாக. பக்கல்: பக்கத்திலே. விடகிலா: விடமாட்டா. விகிர்தன்: கடவுள். இடைஇலேன்: தொடர்பு இல்லேன். இரப்பவர்: யாசிப்பவர்.

௬௬. குரம்பை: உடம்பு. மையல்: மயக்கம். தருமராசன்: எமதருமன். கடவூர்: திருக்கடவூர். இத்தலத்திலேயே மார்க்கண்டனுக்காகக்காலனை உதைத்ததாகப்புராணம்கூறும்.

"பழிஇலான், புகழ்உடையான், பால்நீற்றன்,
ஆன்ஏற்றன்" என்கின் றாளால்;
"விழியுலாம் பெருந்தடங்கண் இரண்டல்ல,
மூன்றுளவே" என்கின் றாளால்;
"சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே!" என்கின் றாளால்;
கழியுலாம் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ? ௬௭.

வெள்ளநீர்ச் சடைய னார்தாம்
வினவுவார் போல வந்துஎன்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு
உறங்குநான் புடைகள் போந்து,
"கள்ளரோ புகுந்தீர்?" என்னக்
கலந்துதான் நோக்கி நக்கு
"வெள்ளரோம்" என்று நின்றார்;
விளங்குஇளம் பிறைய னாரே. ௬௮.

---

௬௭. என்கின்றாள்: என்று சொல்லுகின்றாள். சுழிஉலாம்: சுழித்து உலாவி. கழியுலாம் சூழ்ந்த: கடலையடுத்துள்ள உப்புப்பரப்புப்பெற்ற. கழிப்பாலை: திருக்கழிப்பாலை என்னும் தலம். கண்டாள் கொல்லோ?: கண்டுவிட்டாளோ?.

இது கடவுளை நினைந்து காதலித்துப் புலம்பும் மகள் பொருட்டுத் தாயார் கூறும் பாசுரம்.

௬௮. வெள்ள நீர்: கங்கை. புடை: பக்கம். கலந்து: கூடி. நக்கு: சிரித்து. வெள்ளரோம்: வெள்ளை உள்ளம் உடையோம்.

இது நாவுக்கரசடிகள், தாம் நாயகியாகவிருந்து, சிவபெருமான் நாயகனாகவந்து தம்மைக் கலந்ததாகக் கூறும் பாடல்.

எண்சீர் விருத்தம் (திருத்தாண்டகம்)

நாம்ஆர்க்கும் குடிஅல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்; பிணிஅறியோம்; பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை;
தாம்ஆர்க்கும் குடிஅல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே. ௯௯.

அகல்இடமே இடமாக ஊர்கள் தோறும்
அட்டுண்பார்; இட்டுண்பார்; விலக்கார் ஐயம்;
புகல்இடமாம் அம்பலங்கள்; பூமி தேவி
உடன்கிடந்தாற் புரட்டாள்; பொய் யன்று மெய்யே;
இகல்உடைய விடைஉடையான் ஏன்று கொண்டான்;
இனிஏதும் குறைவுஇலோம்; இடர்கள் தீர்ந்தோம்;
துகில்உடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே. ௧௦௦.

---

௯௯. நமனை அஞ்சோம்: எமனுக்குப் பயப்படமாட்டோம். நடலை: வஞ்சனை. ஏமாப்போம்: (அறத்திற்கே) அரணை உடையேம். சங்க வெண்குழை: வெண்மையான சங்குத் தோடு. கொய்ம்மலர்ச் சேவடி: கொய்தற்குரிய பூப்போன்ற செவ்விய அடி. குறுகினோம்: அடைந்தோம்.

௧௦௦. அட்டு உண்பார்: சமைத்துச் சாப்பிடுவார். துரிசு: குற்றம். புரட்டாள்: புரட்டித் தள்ளிவிட மாட்டாள்.

வார்ஆண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்;
மாதேவா மாதேவா என்று வாழ்த்தி,
நீர்ஆண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்;
நீறணியும் கோலமே நிகழப் பெற்றோம்;
கார்ஆண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கல்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்;
பார்ஆண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ? பற்றற் றோமே. கoக.

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்;
இருநிலத்தில் எமக்குஎதிரா வாரும் இல்லை;
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்;
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்;
ஒன்றினாற் குறையுடையோம் அல்லோம்; அன்றே,
உறுபிணியார் செறல்ஒழிந்திட்டு ஓடிப் போனார்;
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. கoஉ.

கoக. வார்: கச்சு. புரோதாயம்: புனிதமாவதற்கு ஆடும் விசேடம். கார்: மேகம். பார்ஆண்டு: உலகத்தை ஆண்டு. பகடு: யானை. பணி: ஏவல். பற்று: ஆசை.

கoஉ. இடைவோம் அல்லோம்: பின்வாங்கமாட்டோம். அன்றே: அன்று தினமே. உறுபிணியார்: மிக்க நோய்என்பவர். செறல்: அழித்தல். பொன்றினார்: இறந்தவர். புண்ணியன்: சிவபெருமான்.

மூஉருவின் முதல்உருவாய் இருநான்கு ஆன
  மூர்த்தியே என்றுமுப் பத்து மூவர்
தேவர்களும் மிக்கோரும் சிறந்து வாழ்த்தும்
  செம்பவளத் திருமேனிச் சிவனே என்னும்
நாஉடையார் நமையாள உடையார் அன்றே;
  நாவலந்தீ வகத்தினுக்கு நாதர் ஆன
காவலரே ஏவி விடுத்தா ரேனும்
  கடவம்அலோம் கடுமையொடு களவுஅற் றோமே.௧௦௩

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
  மயானத்தான்; வார்சடையான்; என்னின், அல்லான்;
ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்;
  ஓரூரன் அல்லன்; ஓர் உவமன் இல்லி;
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
  அவன்அருளே கண்ணாகக் காணின் அல்லால்,
இப்படியன், இந்நிறத்தன், இவ்வண் ணத்தன்,
  இவன்இறைவன் என்றுஎழுதிக்காட்டொணாதே.௧௦௪

---

௧௦௩. நாஉடையார், சிவனடியார்; நம்மை ஆளத்தக்கவர் அன்னாரே. நாவலந்தீவகம்: இந்தியநாடு. காவலர்: மன்னர். ஏவிவிடுத்தல்: ஆள் அனுப்பி அழைத்தல். கடவம்அலோம்: கடப்பாடு உடையோம் அல்லோம். நம்மிடம் கடுமையும் இல்லை; களவும் இல்லை; யாருக்கு அஞ்ச வேண்டும்?

௧௦௪. ஒப்பு: சமம்

அவன் அருளையே கண்ணாகக்கொண்டு காணவேண்டுமேயன்றி வேறுவகையில் அவனைக் காணமுடியாது. "அவன் அருளாலே அவன்தாள் வணங்கியே" என்பது திருவாசகம்.

பண் ஆர்ந்த வீணை பயின்றது உண்டோ?
  பாரிடங்கள் பலசூழப் போந்தது உண்டோ?
உண்ணாறு வருநஞ்சம் உண்டது உண்டோ?
  ஊழித்தீ அன்ன ஒளிதான் உண்டோ?
கண்ணார் கழற்காலற் செற்றது உண்டோ?
  காமனையும் கண்அழலாற் காய்ந்தது உண்டோ?
எண்ணார் திரிபுரங்கள் எய்தது உண்டோ?
  எவ்வகைஎம் பிரானைக் கண்ட வாறே. கoரு.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
  தரணியொடு வான்ஆளத் தருவ ரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்,
  மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யாராய்,
  ஆஉரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்,
  அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. கoசு.

கoரு. பயின்றது: பழகியது. பாரிடங்கள்: பூதகணம். போந்தது: வந்தது. கண்ஆர்: கண்நிறைந்த. கழற்காலற் செற்றது: வீரச்சிலம்பணிந்த எமனைக் கோபித்தது.

கoசு. சங்கநிதி பதுமநிதி: குபேரனது இரண்டு அரியமணி. மங்குவார்: ஒளியற்றார். மாதேவர்க்கு ஏகாந்தர்: சிவபெருமானிடம் ஒன்றுபட்டவர். ஆ: பசு.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பார் ஆகில்,
தீவண்ணர் திறம்ஒருகால் பேசார் ஆகில்,

ஒருகாலும் திருக்கோவில் சூழார் ஆகில்,
உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணார் ஆகில்,

அருநோய்கள் கெடவெண்ணீறு அணியார் ஆகில்,
அளிஅற்றார் பிறந்தவாறு ஏதோ என்னில்,

பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. ௧௦௭.

நற்பதத்தார் நற்பதமே! ஞான மூர்த்தி!
நலம்சுடரே! நால்வேதத்து அப்பால் நின்ற

சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய்! இதுஉன் தன்மை;

நிற்பதொத்து நிலையிலா நெஞ்சம் தன்னுள்
நிலாவாத புலால்உடம்பே புகுந்து நின்ற

கற்பகமே! யான்உன்னை விடுவேன் அல்லேன்;
கனகமா மணிநிறத்துஎம் கடவு ளானே. ௧௦௮.

---

௧௦௭. ஒருகாலும் : ஒருமுறைகூட. அளி : கருணை. நலிய : வருத்த. பெயர்த்தும் : திரும்பவும்.

இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
　இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி
　ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
　பிறர்உருவும் தம்உருவும் தாமே ஆகி
நெருநலையாய் இன்றாகி நாளை ஆகி
　நிமிர்புன் சடைஅடிகள் நின்ற வாறே. ௧௦௯

தந்தை,யார்? தாய்,யார்? உடன்பி றந்தார்,
　தாரம்,ஆர்? புத்திரர்,ஆர்? தாம்தாம், ஆரே?
வந்தவாறு எங்ஙனே? போமாறு ஏதோ?
　மாயம்ஆம்! இதற்குஏதும் மகிழ வேண்டாம்;
சிந்தையீர்! உமக்கொன்று சொல்லக் கேண்மின்;
　திகழ்மதியும் வாள்அரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் "நமச்சி வாய"
　என்றுஎழுவார்க்கு இருவிசும்பில் இருக்க லாமே. ௧௧௦

---

௧௦௯. இயமானன் : ஆன்மா. எறியும் காற்று : வீசும் காற்று. நெருநலை : நேற்று.

உலகப் பாசங்களையெல்லாம் விட்டு எந்தையார் திருநாமம் 'நமச்சிவாய' என்று எழுவார் வானுலகாள்வர்.

போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி!
புண்ணியனே நண்ணல் அரியாய் போற்றி!
ஏற்றிசைக்கும் வான்மேல் இருந்தாய் போற்றி!
எண்ணு யிரநூறு பெயராய் போற்றி!
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி!
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி!
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி!
கயிலைமலை யானே போற்றி! போற்றி! கககக.

அருந்துணையை, அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை, அகல்ஞாலத்து அகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்துஅடக்கி, மடவா ரோடும்
பொருந்துஅணைமேல் வரும்பயனைப், போகம் மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையைப், பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. ககஉ.

கககக. போற்றிசைத்து : பரவிப்புகழ்ந்து. நண்ணல் : அடைதல். ஏற்றிசைக்கும் வான்மேல் : ஏற்றிப்பாடும் உச்சி மீது. நாற்றிசை : நான்கு திக்கு வித்து : விதை. போற்றி : வணக்கம்.

ககஉ. அல்லல் : துயரம். அகல்ஞாலம் : பரந்த உலகம். அகம் : உள்ளே. அணை : படுக்கை. போகம் : இன்பம். பெரும்பற்றப்புலியூர் : சிதம்பரம.

பேர்ஆயி ரம்பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப், பிரிவுஇலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப் பானை,
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீஎழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப், புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. கக௩.

மீளாத ஆள்என்னை உடையான் தன்னை,
வெளிசெய்த வழிபாடு மேவி னானை,
மாளாமை மறையவனுக்கு உயிரும் வைத்து
வன்கூற்றின் உயிர்மாள உதைத்தான் தன்னைத்,
தோள்ஆண்மை கருதிவரை எடுத்த தூர்த்தன்
தோள்வலியும் தாள்வலியும் தொலைவித்து ஆங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே. கக௪.

கக௩. சிலை: வில். புள்ளிருக்குவேளூர்: வைத்தீஸ்வரன் கோவில். ஆற்றநாள்: நீண்ட நாள்.

கக௪. மாளாமை: சாகாமல். மறையவன்: மார்க்கண்டன். தூர்த்தன்: இராவணன். இராவணனுக்கு நாளோடு வாள் கொடுத்தமையை, "முக்கோடி வாழ்நாளும" என்றும் "சங்கரன் கொடுத்த வாளும" என்றும் கூறுவர் கம்பர்.

ஓசை ஒலிஎலாம் ஆனாய் நீயே;
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே;
வாச மலரெலாம் ஆனாய் நீயே;
மலையான் மருகனாய் நின்றாய் நீயே;
பேசப் பெரிதும் இனியாய் நீயே;
பிரானாய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே;
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே;
திருவையாறு அகலாத செம்பொற் சோதி! கக௫.

தினைத்தனையோர் பொறைஇலா உயிர்போம் கூட்டைப்
பொருள்என்று மிகஉன்னி, மதியால் "இந்த
அனைத்துலகும் ஆளலாம்" என்று பேசும்
ஆங்காரம் தவிர்நெஞ்சே! அமரர்க் காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெம் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்,நெய்த் தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்ய லாமே. கக௬.

கக௫. மலையான் மருகன்: பர்வதராசனின் மாப்பிள்ளை.

கக௬. தினைத்தனை: தினை அளவு. பொறை: பாரம். கூடு: உடம்பு. உன்னி: நினைத்து. தவிர்: நீங்கு. முனைத்து: எதிர்த்து. பொன்ற: அழிய. முடுகிய: வலிமைவாய்ந்த. வெம்சிலை: பொல்லாத கல்லாகிய வில். நெய்த்தானம்: ஒரு ஸ்தலம்.

எத்தாயர், எத்தந்தை, எச்சுற் றத்தார்,
எம்மாடு, சும்மாடாம்? ஏவர் நல்லார்?
செத்தால்வந்து உதவுவார் ஒருவர் இல்லை;
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்;
சித்தாய வேடத்தாய்! நீடு பொன்னித்
திருவானைக் காஉடைய செல்வா! என்தன்
அத்தா!உன் பொற்பாதம் அடையப் பெற்றால்,
அல்லகண்டம் கொண்டுஅடியேன் என்செய் கேனே.

செய்யானை வெளியானைக் கரியான் தன்னைத்
திசைமுகனைத் திசைஎட்டும் செறிந்தான் தன்னை
ஐயானை நொய்யானைச் சீரி யானை
அணியானைச் சேயானை ஆன்அஞ்சு ஆடும்
மெய்யானைப் பொய்யாதும் இல்லான் தன்னை
விடையானைச் சடையானை வெறித்த மான்கொள்
கையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ஆரக் கண்டேன் நானே. ககஅ.

ககஎ. எம்மாடு சும்மாடாம்: எந்தச் செல்வம் நல்ல செல்வம் ஆகும்?. ஏவர்: எவர். பொன்னி: காவிரி. அத்தா: தலைவனே. அல்லகண்டம்: துன்பம்.

ககஅ. செய்யான்: செம்மையானவன். வெளியான்: வெண்மையானவன். கரியான்: கருமையானவன். செறிந்தான்: நிறைந்தவன். நொய்யான்: நுண்ணியன். அணியான்: கிட்டத்தில் உள்ளவன். சேயான்: தூரத்தில் இருப்பவன். ஆன்அஞ்சு: கோசலம், கோமயம், தயிர், பால், நெய்.

பன்னியசெந் தமிழ்அறியேன்; கவியேன்; மாட்டேன்;
எண்ணோடு பண்நிறைந்த கலைகள் ஆய
தன்னையும்தன் திறத்துஅறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியும் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்துஎன்னை ஆளாக் கொண்ட
தென்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழும்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

எனக்குஎன்றும் இனியானை எம்மான் தன்னை
எழிலாரும் ஏகம்பம் மேயான் தன்னை
மனக்குஎன்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னைத்
தனக்குஎன்றும் அடியேனை ஆளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப்
புனக்கொன்றைத் தார்அணிந்த புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. கஉ௦

ககக. பன்னிய : பயிலத்தக்க. கவியேன் : கவிபுனையேன். மாட்டேன் : ஈடுபட மாட்டேன். பொறி : அறிவு. திறம் : தகுதி. நெறி : வழி.

கஉ௦. எழில் : அழகு. ஏகம்பம் : காஞ்சிவரம். மனக்கு : மனத்துக்கு. புனம் ; வனம்.

நினைந்துஉருகும் அடியாரை நைய வைத்தார்;
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்;
சினந்திருகு களிற்றுஉரிவைப் போர்வை வைத்தார்;
செழுமதியின் தளிர்வைத்தார்; சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத்து ஏறத் துற்ற
இனமலர்கள் போதுஅவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்;
நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே. கஉக.

மறையானை மால்விடையொன்று ஊர்தி யானை
மால்கடல்நஞ்சு உண்டானை வானோர் தங்கள்
இறையானை என்பிறவித் துயர்தீர்ப் பானை
இன்னமுதை மன்னியசீர் ஏகம் பத்தில்
உறைவானை ஒருவரும்ஈங்கு அறியா வண்ணம்
என்உள்ளத்து உள்ளேஒ ளித்து வைத்த
சிறையானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே. கஉஉ.

கஉக. தளிர்: கொழுந்து. இனம்: கூட்டம். துருவி: ஆராய்ந்து. துற்ற: சேர்த்திய. இனமலர்கள்: நறும் பூக்கள். போது அவிழ்ந்து: இதழ் விரிந்து. மதுவாய்ப் பில்கி: தேனூறு நிறைந்து.

கஉஉ. மறை: வேதம். ஊர்தி: வாகனம். இறை: கடவுள். மன்னிய: பொருந்திய. சிறையான்: அடைக்கப்பெற்றவன்.

பச்சை நிறமுடையர்; பாலர்; சாலப்
பழையர்; பிழையெலாம் நீக்கி ஆள்வர்;
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்;
கலன்ஒன்று கையேந்தி இல்லம் தோறும்
பிச்சை கொளநுகர்வர்; பெரியர் சாலப்;
பிறங்கு சடைமுடியர்; பேணும் தொண்டர்
இச்சை மிகஅறிவர்; என்றும் உள்ளார்;
இடைமருது மேவி இடங்கொண் டாரே. கஉங.

ஒருமணியை உலகுக்குஓர் உறுதி தன்னை
உதயத்தின் உச்சியை உருமா ணனைப்
பருமணியைப் பாலோடுஅஞ்சு ஆடி னனைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
தீங்கரும்பின் இன்சுவையைத் திகழும் சோதி
அருமணியை ஆவடுதண் துறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்துஉய்ந் தேனே.

கஉங. பச்சை : பசுமை. கதநாகம் : சீறும்பாம்பு. கலன் : பிச்சைப்பாத்திரம். பிறங்கு : விளங்குகின்ற. இச்சை : விருப்பம். இடைமருது : திருவிடைமருதூர்.

கஉச. உதயத்தின் உச்சி : தோற்றத்தின் சிகரம். உருமாணனை: அழகிய மானைக்கையிலே உடையானை. பவித்திரன் : பரிசுத்தமானவன். பசுபதி : உயிர்கட்கெல்லாம் தலைவன். பவளக்குன்று : செம்மலை. ஆவடு தண்துறை : திருவாவடுதுறை.

திருவே! என் செல்வமே! தேனே! வானோர்
செழுஞ்சுடரே! செழுஞ்சுடர்நற் சோதி! மிக்க
உருவே!என் உறவே!என் ஊனே! ஊனின்
உள்ளமே! உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே!என் கற்பகமே! கண்ணே! கண்ணிற்
கருமணியே! மணியாடு பாவாய்! காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்;
ஆவடுதண் துறைஉறையும் அமரர் ஏறே. கஉரு.

அன்று ஆலின் கீழ்இருந்தங்கு அறஞ்சொன் னானை
அகத்தியனை உகப்பானை அயன்மால் தேட
நின்றானைக் கிடந்தகடல் நஞ்சுஉண் டானை
நேர்இழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும்
வென்றானை மீயச்சூர் மேவி னானை
மெல்இயலாள் தவத்தின்நிறை அளக்கல் உற்றுச்
சென்றானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. கஉசு.

கஉரு. திரு: அழகு. மிக்க உரு: மேம்பட்ட வடிவம். உறவு: சுற்றம். ஊன்: உடம்பு. கரு: மூலப்பொருள். காவாய்: காப்பாற்றுவாயாக!. ஏறு: சிங்கம்.

கஉசு. ஆலின்கீழ்: கல்லால மரத்தின் அடியில். அறம் சொன்னது, தட்சணாமூர்த்தியாக இருந்து. அகத்தியன், தமிழ் முனிவன். உகத்தல்: மகிழ்தல். அகத்தியன் தமிழ் கண்டுகளிக்கின்றான். சிவபெருமான். நேர்இழை: செவ்விய ஆபரணம்; ஈண்டு அவ் அணியை அணிந்த உமையவள். அவளோடு கூடியிருந்தே ஐம்புலனையும் வென்றான். இவ் அருமையை "மங்கையோடு இருந்தே யோகுசெய்வானை" என்று பாராட்டுவார், கருவூர்த்தேவர். மீயச்சூர், பேரளத்துக்கு அணித்தேயுள்ள ஒரு தலம்.

மெய்த்தவன்காண்! மெய்த்தவத்தில் நிற்பார்க்கெல்லாம்;
விருப்பிலா இருப்புமன வினையர்க்கு என்றும்
பொய்த்தவன்காண்; புத்தன் மறவாது ஓடி
எறிசல்லி புதுமலர்கள் ஆக்கி னான்காண்!
உய்த்தவன்காண்! உயர்கதிக்கே, உள்கி னாரை;
உலகனைத்தும் ஒளித்துஅளித்திட்டு உய்யச் செய்யும்
வித்தகன்காண்! வித்தகர்தாம் விரும்பி ஏத்தும்
விண்இழிதண் வீழி மிழலை யானே. ௧௨௭.

கலையாரும் நூல்அங்கம் ஆயி னான்காண்!
கலைபயிலும் கருத்தன்காண்! திருத்தம் ஆகி
மலையாகி மறிகடல்ஏழ் சூழ்ந்து நின்ற
மண்ஆகி விண்ஆகி நின்றான் தான்காண்!
தலையாய மலைஎடுத்த தகவி லோனைத்
தகர்ந்துவிழ ஒருவிரலாற் சாதித்து ஆண்ட
சிலையாரும் மலைமகள்ஓர் கூறன் தான்காண்!
சிவனவன்காண்! சிவபுரத்துஎம் செல்வன் தானே.

---

௧௨௭. இருப்பு: இரும்பு. பொய்த்தவன்: காணப்படாதவன். புத்தன்: சாக்கிய நாயனார். எறிசல்லி: வீசியகல். விண்இழி: மேல் உலகினின்றும் இறங்கிவந்த.

௧௨அ. கலைஆரும்: கலைகள் நிறைந்த. மறிகடல்: அலைதாவுகடல். தலையாய மலை: திருக்கயிலாயகிரி. தகவு இலோன்: இராவணன். தகர்ந்து: ஒடிந்து. சிலைஆரும்: கற்சிலையை ஒத்த என்றும் வாடாத தோற்றம். ஓர் கூறன்: ஒரு பகுதியிலே உடையவன். சிவபுரம்: கும்பகோணத்துக்கு அருகேயுள்ள தலம்.

உருகுமனத்து அடியவர்கட்கு ஊறும் தேனை,
உம்பர்மணி முடியணியை, உண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்,
பேணியஅந் தணர்க்குமறைப் பொருளைப், பின்னும்
முருகுவிரி நறுமலர்மேல் அயற்கும் மாற்கும்
முழுமுதலை, மெய்த்தவத்தோர் துணையை, வாய்த்த
திருகுகுழல் உமைநங்கை பங்கன் தன்னைச்,
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. கஉகூ.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே! நீ, வா!
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகுஇட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்துஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
"சங்கரா! சயபோற்றி! போற்றி!" என்றும்
"அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி!" என்றும்
"ஆரூரா!" என்றென்றே அலறு நில்லே. கநo.

கஉகூ. உம்பர்: தேவர். மணிமுடி அணியை: இரத்தினக்கிரீடத்தில் அணியக்கூடிய ஆபரணத்தை. உண்மை நின்ற: மெய்வழிபற்றிய. பெருகுநிலைக் குறியாளர்: பெருந்தன்மையே குறிக்கோளாக உடையவர். முருகு: வாசனை. நறுமலர்: நல்லபூ. திருகுகுழல்: பின்னிய கூந்தல். செங்காட்டங்குடி, சிறுத்தொண்ட நாயனார் தம் கருத்திற்கிசைந்த துணைவி வெண்காட்டு நங்கையுடனும் செல்வன் சீராளனோடும் வாழ்ந்த பதி.

கநo. நிலைபெறும் ஆறு: கடைத்தேறும் வழி. புலர்வதன்முன்: விடிவதற்குள்ளே. அலகிடுதல்: கூட்டுதல். மெழுக்கும் இட்டு: மெழுகி. புனைந்து: தொடுத்து. தலை ஆர: தலை நிலத்தில்பட. அலறுதல்: இரைந்து கூவுதல். "தெருவு தொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்று ஏத்தி" என்பது திருவாசகம். "ஆமாறு உன் திருவடிக்கே அகங்குழையேன்" என்னும் திருவாசகத்தேன், இத்தேவார மணியின் கருத்தைத் தழுவியது.

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி!
  கழல்அடைந்தார் செல்லும் கதியே போற்றி!
அற்றவர்கட்கு ஆர்அமுதம் ஆனாய் போற்றி!
  அல்லல்அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி!
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி!
  வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி!
செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி!
  திருமூலட் டானனே போற்றி! போற்றி! கஙக.

ஒருவனாய் உலகுஏத்த நின்ற நாளோ?
  ஓர்உருவே மூவுருவும் ஆன நாளோ?
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ?
  காமனையும் கண்அழலால் விழித்த நாளோ?
மருவனாய் மண்ணும்விண்ணும் தெரித்த நாளோ?
  மான்மறிக்கை ஏந்திஓர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ? பின்னோ?
  திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. கஙஉ.

கஙக. கழல்: திருவடி. கதி: புகல் இடம். அற்றவர்: இல்லாதவர். செற்றவர்: பகைவர். புரம்: ஊர். திருமூலட்டானன், திருவாரூர்ச் சிவபெருமான்.

கஙஉ. மூஉரு: அயன், அரி, அரன். கருவன்: அழிக்கும் வடிவினன். மருவனாய்: பொருந்தியவனாய். தெரித்த: புலப்படுத்திய. திருவினாள், ஈண்டுப்பார்வதி.

"மும்மூர்த்திகளின் தோற்றக் காலத்திலா, காலனைக் காய்ந்த போதா, காமனை எரித்த அன்றா, உமையவள் உடம்பில் கூறு கொள்வதற்கு முன்னா பின்னா ஆரூர் கோயில் கொண்டது" என்ற கருத்து திருவாரூரின் பழமையில் அப்பர் சுவாமிகளின் உறைத்த பற்றைக் காட்டுகிறது.

பாடகம்சேர் மெல்லடிநற் பாவை யாளும்
நீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்பான்,
வேடனாய் வில்வாங்கி எய்த நாளோ?
விண்ணவர்க்குங் கண்ணவனாய் நின்ற நாளோ?
மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ? பின்னோ?
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. ௧௩௩.

சிவனாகித் திசைமுகனாய்த் திருமால் ஆகிச்
செழுஞ்சுடராய்த் தீயாகி நீரும் ஆகிப்
புவனாகிப் புவனங்கள் அனைத்தும் ஆகிப்
பொன்னாகி மணியாகி முத்தும் ஆகிப்
பவனாகிப் பவனங்கள் அனைத்தும் ஆகிப்
பசுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற
தவனாய தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. ௧௩௪.

---

௧௩௩. பாடகம்: பாதசரம். பாவையாள்: பார்வதி. பார்த்தன்: அருச்சுனன். பலம்: வலிமை. காண்பான்: காணும் பொருட்டு. அம்பலம்: தில்லைச்சிற்றம்பலம். மன்னி: பொருந்தி.

"தில்லைச் சிற்றம்பலத்துள் நட்டம் ஆடுதற்கு முன்னா பின்னா திருவாரூர் கோவில் கொண்டது" என்ற கருத்து, கம்பீரமாக நிற்கின்றது.

௧௩௪. திசைமுகன்: பிரமன். சுடர்: சூரியசந்திரர். புவன்: உலகம். பவன்: காற்று. பவன்: சிவபிரான். தலையாலங்காடு: ஒருசிவஸ்தலம்.

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யில் பூசி
  வெளுத்தமைந்த கீளொடுகோ வணமும் தற்றுச்
"செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய்!" என்றும்
  "செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே!" என்றும்
"துடியனைய இடைமடவாள் பங்கா!" என்றும்
  "சுடலைதனில் நடமாடும் சோதீ!" என்றும்
கடிமலர்தூய்த் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
  கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. கநரு.

ஐயினால் மிடறுஅடைப்புண்டு ஆக்கை விட்டு
  ஆவியார் போவதுமே, அகத்தார் கூடி
மையினால் கண்எழுதி மாலை சூட்டி
  மயானத்தில் இடுவதன்முன், மதியம் சூடும்
ஐயனார்க்கு ஆளாகி அன்பு மிக்கு
  அகம்குழைந்து மெய்அரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
  கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. கநசு.

கநரு. கீள்: கோவணம் பொருந்தக் கட்டும் துணிக்கயிறு. தற்று: கட்டி. செடி: துன்பம். துடி: உடுக்கு. கடி: மணம். கன்றாப்பூர், திருக்கன்றாப்பூர் என்னும் தலம். அங்குள்ள கடவுளுக்கு நடுதறிநாதன் என்பது பெயர்.

கநசு. ஐ: கபம். மிடறு: தொண்டை. ஆக்கை: உடம்பு. ஆவியார்: உயிரார். அகத்தார்: வீட்டுக்காரர். ஐயனார்: சிவபெருமானார். மெய் அரும்பி: உடல் சிலிர்த்து. அடிகள் பாதம்: சிவன் திருவடி.

அன்பர் உள்ளத்துள்ளே ஆண்டவனைக் காணலாம். உயிராரைப் பிரிந்த உடலாருக்குக் கண்ணுக்கு மைதீட்டி மாலை சூட்டி மயானத்தில் வைக்கும் மரபு முன் இருந்திருக்கிறது போலும்.

தூண்டு சுடர்அனைய சோதி கண்டாய்!
தொல்அமரர் சூளா மணிதான் கண்டாய்!
காண்டற்கு அரிய கடவுள் கண்டாய்!
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்!
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்!
மெய்ந்நெறி கண்டாய்! விரதம் எல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்!
மறைக்காட்டு உறையும் மணாளன் தானே. கஙஎ.

மூரி முழங்குஒலிநீர் ஆனான் கண்டாய்!
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்!
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்!
இன்அடியார்க்கு இன்பம் விளைப்பான் கண்டாய்!
ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!
அண்ணா மலைஉறைஎம் அண்ணல் கண்டாய்!
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்!
மறைக்காட்டு உறையும் மணாளன் தானே. கஙஅ.

கஙஎ. சூளாமணி: முடியில் அணியும் நகை. ஆற்ற: மிகவும். மெய்ந்நெறி: உண்மையானவழி. மாண்ட: மாட்சிமைப்பட்ட. மறைக்காடு: வேதாரண்யம்.

கஙஅ. மூரி: வலிமைமிக்க. ஏரி: பெரியநீர்நிலை. விளைப்பான்: உண்டாக்குவான். வாரிமதகளிறு: கடல் போல மதத்தைக் கொட்டும் யானை.

"ஏரி நிறைந்தனைய செல்வன்" என்பது "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம் பேரறிவாளன் திரு" என்ற அருமைத் திருக்குறளின் உள்ளுறையாக அமைந்திருக்கிறது.

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிரும் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்அசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணுக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறுத்
தூமுத்த வெண்முறுவல் உமையோடு ஆடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவா லவ்வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. ௧௩௯.

மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட்கு என்றும்
விருப்பவன்காண்! பொருப்புவலிச் சிலைக்கை [யோன்காண்!
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழி,தருமிக்கு அருளி னோன்காண்!
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருந்தளியான் காண்அவன்என் சிந்தை யானே.

---

௧௩௯. முகிழ்: அரும்பிய. வரை சிலையா: மலையை வில்லாக வளைத்து. வாசுகிமாநாணுக்கோத்து: வாசுகி என்னும் பாம்பைப் பெரிய வரை வில்லுக் கேற்ற கயிறாகப் பூட்டி. துவள நீறு: அழிந்து பொடியாக. தூ முத்தவெண்முறுவல்: புனிதமான முத்துப்போன்ற வெள்ளிய பற்கள். திளைத்தல்: அநுபவித்தல். தென்கூடல் திருவாலவாய்: அழகிய கூடல் என்றும் திருவாலவாய் என்றும் புகழ் பெற்ற மதுரை மா நகரம்.

௧௪௦ மின்: மின்னல். கொடி மருங்கல்: கொடி போன்ற இடை. பொருப்பு: மலை. சங்கம்: மதுரைத் தமிழ்ச் சங்கம். கனகக்கிழி: பொன் முடிப்பு. தருமிக்கு: தருமி என்னும் பெயருடைய ஒருவனுக்கு. கடிக்கொன்றை: மணமுள்ள கொன்றை மலர்; அதன்நிறம் பொன்னைக் காட்டுகின்றது. மருங்கு: பக்கம். புனக்காந்தள்: வனத்திலுள்ள காந்தள் மலர்; காந்தள் கைக்கு உபமானம். தென்: தேன். புறவு: சோலை. திருப்புத்தூர்: காரைக்குடிக்குப் பதின்மூன்று மைலில் உள்ள சிவத்தலம். திருத்தளி: அங்குள்ள ஸ்ரீதளி என்னும் குளம்.

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்!
பன்னிரண்டு கண்உடைய பிள்ளை தோன்றும்!
நடைமலிந்த விடையோடு கொடியும் தோன்றும்!
நான்மறையின் ஒலிதோன்றும்! நயனம் தோன்றும்!
உடைமலிந்த கோவணமும் கீளும் தோன்றும்!
மூரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்!
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்!
பொழில்திகழும் பூவணத்துஎம் புனித னார்க்கே. ௧௪௧

எத்திசையும் வானவர்கள் தொழநின் றானை
ஏறுஊர்ந்த பெம்மானை எம்மான் என்று
பத்தனாய்ப் பணிந்துஅடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
முத்தினை என்மணியை மாணிக் கத்தை
முளைத்துஎழுந்த செம்பவளக் கொழுந்துஒப் பானை
சித்தனைஎன் திருமுதுகுன்று உடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. ௧௪௨

---

௧௪௧. பன்னிரண்டு கண்உடைய பிள்ளை : முருகன். நயனம் : (ஈண்டு) நெற்றிக்கண். மூரல் : பல். சிரமாலை : தலைவரிசை. புடை : பக்கம். பொலிவு : விளக்கம். பொழில் : சோலை. பூவணம் : திருப்புவனம் என்று இன்றுவழங்கப்படும் மதுரைக்குப் பன்னிரண்டு மைலில் உள்ள பதி.

௧௪௨. ஏறு : விடை. பன்னாள் : பலகாலமும். பாமாலை : தேவாரப்பாசுர வரிசை. பயில்வித்தான் : பயிற்றுவித்தவன். சித்தன்: சித்துக்கள் வல்லவன். திருமுதுகுன்று: விருத்தாசலம் என்னும் பதி.

மனத்தகத்தான்; தலைமேலான்; வாக்கின் உள்ளான்;
வாயாரத் தன்அடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான்; இமையவர்தம் சிரத்தின் மேலான்;
ஏழண்டத்து அப்பாலான்; இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான்; நறுங்கொன்றைப்போதின்உள்ளான்;
பொருப்பிடையான்; நெருப்பிடையான்; காற்றின்
உள்ளான்;
கனத்தகத்தான்; கயிலாயத்து உச்சி உள்ளான்;
காளத்தி யான்;அவன்என் கண்ணு ளானே. ௧௪௩.

நேர்ந்துஒருத்தி ஒருபாகத்து அடங்கக் கண்டு
நிலைதளர ஆயிரமா முகத்தி னோடு
பாய்ந்துஒருத்தி படர்சடைமேற் பயிலக் கண்டு
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்,
தாம்திருத்தித் தம்மனத்தை ஒருக்காத் தொண்டர்
தனித்துஒருதண்டு ஊன்றிமெய் தளரா முன்னம்,
"பூந்துருத்தி! பூந்துருத்தி!" என்பீர் ஆகில்
பொல்லாப் புலால்துருத்தி போக்க லாமே. ௧௪௪.

---

௧௪௩. காளத்தி: கண்ணப்பநாயனார் வழிபட்ட திருக்கா ளாஸ்திரி என்னும் தலம்.

௧௪௪. முதல் ஒருத்தி, உமையாள்; இரண்டாவது ஒருத்தி, கங்கையாள்; அவள் அநேகம் முகமாக விரிந்த சடைமேல் உலாவுகின்றாள். படஅரவு: படம் எடுத்தாடும் பாம்பு. ஒருக்கா: அடக்காத. தனித்து...... தளராமுன்னம்: முதுமை அடையுமுன். பூந்துருத்தி: திருப்பூந்துருத்தி எனும் தலம். புலால் துருத்தி: உடல்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
அகன்றாள் அகல்இடத்தார் ஆசா ரத்தை;
தன்னை மறந்தாள்;தன் நாமம் கெட்டாள்;
தலைப்பட்டாள் நங்கை, தலைவன் தாளே. கச௫.

நென்னலைஓர் ஓடுஏந்திப் பிச்சைக்கு என்று
வந்தார்க்கு "வந்தேன்" என்று இல்லே புக்கேன்;
அந்நிலையே நிற்கின்றார்; ஐயம் கொள்வார்,
அருகே வருவார்போல் நோக்கு கின்றார்;
"நுந்நிலைமை ஏதோ? நும் ஊர்தான் ஏதோ?"
என்றேனுக்கு ஒன்றாகச் சொல்ல மாட்டார்;
மென்முலையார் கூடி விரும்பி ஆடும்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. கசசு.

கச௫. வண்ணம்: மாதிரி பெயர்த்தும்: திரும்பவும். பிச்சி: பித்துப்பிடித்தவள். அத்தன்: தந்தை. நீத்தாள்: விட்டு விலகினாள். அகன்றாள்.........ஆசாரத்தை: பரந்த உலகத்தாருடைய சம்பிரதாயத்தினின்றும் விடுபட்டாள். தன் நாமம் கெட்டாள்: தன்பெயரைப் போக்கிக்கொண்டாள். தலைவன்: நாயகன்; அவன்தான் சிவபெருமான்.

இது தாய்இரங்கல் துறை.

கசசு. நென்னலை: நேற்று. ஐயம்: பிச்சை. என்றேனுக்கு: என்று கேட்ட எனக்கு. வெண்காடு: திருவெண்காடு. விகிர்தனார்: கடவுள்.

இது தலைவி கூற்று. கடவுளைக் காதலித்து நாயகி கூறுவது.

பட்டுஉடுத்துப் பவளம்போல் மேனி எல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி இங்கே வந்தார்க்கு
"எவ்வூரீர்? எம்பெருமான்!" என்றேன்; ஆவி
விட்டிடுமா றதுசெய்து, விரைந்து நோக்கி,
வேறோர் பதிபுகப் போவார் போல,
வட்டணைகள் படநடந்து, மாயம் பேசி,
வலம்புரமே புக்குஅங்கே மன்னி னாரே. ௧௪௭.

வெந்தார்வெண் பொடிப்பூசி, வெள்ளை மாலை
விரிசடைமேல் தாம்சூடி, வீணை ஏந்திக்
கந்தாரம் தாம்முரலாப் போகா நிற்கக்
"கறைசேர் மணிமிடற்றீர்! ஊர்ஏது" என்றேன்;
நொந்தார்போல் வந்துஎனது இல்லே புக்கு
"நுடங்குஏர் இடைமடவாய்! நம்ஊர் கேட்கில்,
அந்தா மரைமலர்மேல் அளிவண்டு யாழ்செய்
ஆமாத்தூர்" என்றுஅடிகள் போயி னாரே. ௧௪௮.

---

௧௪௭. பசுஞ்சாந்தம்: குளிர்ந்த சந்தனம். பாதம் நோவ: திருவடிவருந்த. ஆவி.........நோக்கி: உயிரைப்போக்குவது போலப் பார்த்து. வட்டணை: தாளம். வலம்புரம்: திருவலம்புரம். மனனினர்: அடைந்துவிட்டார்.

௧௪௮. வெந்தார் வெண் பொடி: சுடுகாட்டுச் சாம்பல். வெள்ளைமாலை: எலும்புமாலை. கந்தாரம்: ஒருபண். முரலா. வாசித்து. கறை: விஷம். நொந்தார்: மெலிந்தவர். இல்லேபுக்கு: வீட்டுக்குள்ளே புகுந்து. நுடங்குஏர்இடை மடவாய்: வளைந்த அழகிய இடையையுடைய பெண்ணே. ஆமாத்தூர்: திருஆமாத்தூர்.

இவ் இரண்டு பாசுரங்களும் தலைவி கூற்றுக்களே.

நஞ்சடைந்த கண்டத்தர்; வெண்ணீறு ஆடி
நல்லபுலி அதள்மேல் நாகம் கட்டிப்
பஞ்சடைந்த மெல்விரலாள் பாகம் ஆகப்
பராய்த்துறையேன் என்றுஓர் பவள வண்ணர்,
துஞ்சிடையே வந்து துடியும் கொட்டத்
'துண்'என்று எழுந்திருந்தேன்; சொல்ல மாட்டேன்;
புன்சடையின் மேல்ஓர் புனலும் சூடிப்
''புறம்பயம்நம் ஊர்''என்று போயி னாரே. ௧௪௪.

மருஉற்ற மலர்க்குழலி மடவாள் அஞ்ச
மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச்
செருஉற்ற வாள்அரக்கன் வலிதான் மாளத்
திருஅடியின் விரல்ஒன்றால் அலற ஊன்றி
உருவொற்றி அங்கிருவர் ஓடிக் காண
ஓங்கினஅவ் ஒள்அழலார் இங்கே வந்து
திருவொற்றி யூர்நம்ஊர் என்று போனார்;
செறிவளைகள் ஒன்றொன்றாச் சென்ற வாறே. ௧௪௫.

---

௧௪௪. பராய்த்துறை: திருப்பராய்த்துறை என்னும் ஊர். துஞ்சிடையே: நான் தூங்கும்போது. துடி: உடுக்கு. துண் என்று: அதிர்ச்சியடைந்து. சொல்லமாட்டேன்: என்ன நடந்தது என்று சொல்லவேமாட்டேன். புறம்பயம்: திருப்புறம்பயம். "புனல் அரங்கம் ஊர் என்று போயினாரே" என்பார் திருமங்கையாழ்வார்.

இப்பாடலும் காதலி பேச்சே.

௧௪௫. மரு: மணம். துளங்க: அசைய. செறுத்து: கோபித்து. செரு: போர். அரக்கன்: இராவணன். மாள: தொலைய. உருவொற்றி: உருவைத்தொடர்ந்து. இருவர்: பிரமன், மால் ஓங்கின: வளர்ந்த. அழலார்: நெருப்பு வடிவினர். வளை: காப்பு.

இப்பாசுரமும் திருநாவுக்கரசடிகளாகிய காதலி, சிவபெருமானாகிய காதலனை நினைந்து கூறியதே.

திருஞான சம்பந்த சுவாமிகள்

தேவார மணி

திருஞான சம்பந்த சுவாமிகள்

நான்குசீர் விருத்தம்

வாழ்க! அந்தணர், வானவர், ஆன் இனம்;
வீழ்க! தண்புனல்; வேந்தனும் ஓங்குக!
ஆழ்க! தீயதெல் லாம்; அரன் நாமமே
சூழ்க! வையக முந்துயர் தீர்கவே. கருக.

காதல் ஆகிக் கசிந்துகண் நீர்மல்கி
ஓது வார்தமை நன்நெறிக்கு உய்ப்பது;
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது;
நாதன் நாமம் நமச்சி வாயவே. கருஉ.

கருக. வாழ்க: வாழ்வாராக. அந்தணர்: சிறந்த கருணையாளர். ஆன் இனம்: பசுக்கூட்டம். வீழ்க: பொழிக. புனல்: மழை. ஆழ்க தீயது எல்லாம்: தீமை யனைத்தும் தொலையட்டும். அரன் நாமமே சூழ்க: சிவன்பெயரே உலகெலாம் முழங்குவதாக. வையகம்: உலகம். துயர்தீர்க: துன்பத்தினின்றும் விடுபடுக.

கருஉ. காதல்: பேரன்பு. கசிந்து: இளகி. மல்கி: கொட்டி. ஓதுவார்தமை: சொல்லுபவரை. நெறி: வழி. உய்ப்பது: செலுத்துவது. நாதன் நாமம்: தலைவன் பெயர்.

துஞ்சலும் துஞ்சல்இ லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின்! நாள்தொறும்;
வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சஉ தைத்தன; அஞ்சுஎ ழுத்துமே. ௧௫௩.

செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே. ௧௫௪.

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும்
கொடியானே. ௧௫௫.

---

௧௫௩. துஞ்சல்: உறங்குதல். நைந்து: கசிந்து. வஞ்சகம் அற்று அடி வாழ்த்தியது, மார்க்கண்டன். வந்த கூற்று அஞ்ச: பிடிக்கவந்த எமன் பயப்பட. **உதைத்தன: உதை** கொடுத்தன. அஞ்சு எழுத்து: சிவாயநம.

௧௫௪. நெடுமாடம்: நீண்ட மேல்மாடிகள். சேண் ஓங்கி: ஆகாயத்தை அளாவி. மதிதோய: சந்திரனை அணைய.

சிற்றம்பலம் மேய செல்வன் கழல்ஏத்தும் செல்வமே செல்வம்; ஏனைச் செல்வம் செல்வம் அன்று.

௧௫௫. கண்காட்டும் நுதல்: கண்பெற்ற நெற்றி. கனல்: நெருப்பு. பெண்: உமையவள். உரு: வடிவம். பிறை: சந்திரன். புயல்: மேகம். வெண்காடு: திருவெண்காடு என்னும் தலம். விடைகாட்டும் கொடியான்: ரிஷபம் எழுதிய கொடியை உடைய சிவபெருமான்.

மைதவழும் மாமிடறன் மாநடம தாடிக்
கைவளையி னாளொடு கலந்தபதி என்பர்;
செய்பணிபெ ருத்தெழும்உ ருத்திரர்கள் கூடித்
தெய்வமது இணக்குறு திருப்புகலி யாமே. கருசு.

நம்மானம் மாற்றி நமக்கரு ளாய்நின்ற
பெம்மானைப் பேயுடன் ஆடல் புரிந்தானை
அம்மானை அந்தணர் சேரும் அணிகாழி
எம்மானை ஏத்தவல் லார்க்குஇடர் இல்லையே. கருஎ.

"நம்பொருள்நம் மக்கள்"என்று நச்சி இச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்துசால அல்லல்உய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன்ஒ ளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்நகர்ந லங்கொள்காழி சேர்மினே. கருஅ

கருசு. மை : நஞ்சு. மாமிடறன் : சிறந்த கண்டத்தை உடையவன். மாநடம் : மகிமை வாய்ந்த நடம். கைவளையினாளொடு : வளையல் அணிந்தகையை உடைய அம்பிகையோடு. கலந்த பதி : சேர்ந்த ஊர். என்பர் : என்று சொல்லுவர் பெரியார். பணி : தொண்டு. பெருத்து : மிகுந்து. உருத்திரர்கள் : சிவன் அடியார். தெய்வமது இணக்குறு : கடவுளோடு ஒன்று படுகின்ற. திருப்புகலி, சம்பந்த சுவாமிகள் பிறந்த சீகாழியின் பன்னிரண்டு பெயர்களுள் ஒன்று.

கருஎ. மானம்: ஈண்டுக் கருவம். அணிகாழி: எழில்வாய்ந்த சீகாழிப்பதி. இடர் : துன்பம்.

கருஅ. நச்சி : விரும்பி. இச்சை செய்து : ஆசைப்பட்டு. அம்பரம் : ஆகாயம். அல்லல் உய்த்தல்: துயரம் அடைதல்.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதுஎனத்
தாதையார் முனிவுஉறத் தான்எனை ஆண்டவன்;
காதையார் குழையினன்; கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. கருகூ

கள்ஆர்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ஆர்ந்த சடைமுடிஎம் பெருமானார் உறையும்இடம்;
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாம்இருவர்
புள்ளானார்க்கு அரையன் இடம் புள்ளிருக்கு வேளூரே.

தையலாள் ஒருபாகம் சடைமேலாள் அவளோடும்
ஐயம்தேர்ந்து உழல்வார்ஓர் அந்தணனார் உறையும்இடம்;
மெய்சொல்லா இராவணனை மேல்ஓடி ஈடுஅழித்துப்
பொய்சொல்லாது உயிர்போனான் புள் இருக்கு
வேளூரே. கசாக.

கருகூ. போதை: ஞானம். அடிசில்: உணவு. தாதை: திருஞான சம்பந்தரைப்பெற்ற தந்தையாகிய சிவபாத இருதயர். முனிவுஉற: கோபிக்க. ஆண்டவன்: சிவபெருமான். காதையார் குழையினன்: தோடுஉடையசெவியன். கழுமலம்: சீகாழி. பேதை: தேவி. பெருந்தகை: கடவுள்.

கசாo. கள்: தேன். மதமத்தம்: ஊமத்தம்பூ. தள்ளாய: வயதுமுதிர்ந்த. சடாயு சம்பாதி: இரண்டு கழுகுகளின் பெயர். புள்ளானார்க்கு அரையன்: பறவைகளின் வேந்தன். புள் இருக்கு வேளூர்: வைத்தீஸ்வரன் கோவில்.

கசாக. தையலாள ஒருபாகம்: ஒருபக்கத்திலே உமையவள். சடைமேலாள: சடைமேலே ஒரு பெண்ணாகிய கங்கையாள். ஐயம் தேர்ந்து: பிச்சை கொண்டு. மெய்: உண்மை. மேல் ஓடி: மேற்சென்று. ஈடு: பெருமை. பொய்சொல்லாது உயிர் போனான்: பொய்சொல்லாமல் தன் உயிர் கொடுத்துப் புகழ் கொண்ட சடாயு.

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றம்இல் குணங்களொடு கூடும்அடி யார்கள்,
மற்றவரை வானவர்தம் வானுலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே. கசுஉ.

மானம்ஆக் குவ்வன; மாசுநீக் குவ்வன;
வானைஉள் கச்செலும் வழிகள்காட் டுவ்வன;
தேனும்வண் டும்இசை பாடும்தே வன்குடி
ஆன்அஞ்சா டும்முடி அடிகள்வே டங்களே. கசுங.

கீதமுன் இசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் இயல்புஉடைப் புனிதர் பொன்நகர்,
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதுஎழு விசய மங்கையே. கசுச.

கசுஉ. பற்று: பாசம். துயக்குஅற: தொடர்ச்சியில்லாமல். மற்றவர்: அடியார் அல்லார். ஏற்றக் கற்றவன்: அனுப்பப் படித்தவனாகிய சிவபெருமான். கருப்பறியலூர்: ஒரு சிவத் தலம்.

கசுங. மானம்: பெருமை. தேவன்குடி: திருந்துதேவன்குடி என்னும் இடம். குவ்வன டுவ்வன என்பன, குவன டுவன என்பவற்றின் இரட்டிப்பு. இப்புள்ளி எழுத்துக்கள் செய்யுள் ஓசையை நிரப்ப வந்தன. ஆக்குவன நீக்குவன காட்டுவன என்பனவே சொற்கள்.

கசுச. கீதம்: சங்கீதம். கோதனம்: பசுங்கன்று. விசய மங்கை, ஒரு தலம்.

பேயாயின பாடப்பெரு நடம்ஆடிய பெருமான்,
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக உடையான்,
தாயாகிய உலகங்களை நிலைபேறுசெய் தலைவன்,
நேயாடிய பெருமான் இடம் நெய்த்தானம்எனீரே. ௧௬௫

நின்அடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்அடியான் உயிர்வவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்அடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்அடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

கருவினால் அன்றியே கருவெலாம் ஆயவன்,
உருவினால் அன்றியே உருவுசெய் தான்இடம்;
பருவநாள் விழவொடும் பாடலோடு ஆடலும்
திருவினால் மிகுபுகழ்த் தென்குடித் திட்டையே. ௧௬௭.

---

௧௬௫. வேயாயின தோளி: மூங்கில்போன்ற தோளையுடைய அம்பிகை. நிலைபேறு செய்தல்: நிலைநிறுத்துதல். நேய் என்பது நேயத்தில் அம் குறைந்துநின்றது; நேயம்: அன்பு. நெய்த்தானம்: திரு நெய்த்தானம் எனும் பதி.

௧௬௬. அடியான்: மார்க்கண்டன். அடல்கூற்று: வலிய எமன். பரவி: வணங்கி. நெடுங்களம்: திருநெடுங்களம்.

௧௬௭. தென்குடித்திட்டை: திட்டை என்னும் சிவத்தலம். **வித்தின்றி முளைத்தவன்; சாதனம் இன்றியே எல்லா உருவங்களையும் உண்டாக்கியவன் என்பது கருத்து.**

மன் ஆனவன்; உலகிற்குஒரு மழையானவன்; பிழையில்
பொன் ஆனவன்;முதலானவன்;பொழில்சூழ் புளமங்கை
என் ஆனவன்; இசை ஆனவன்; இளஞாயிறின் சோதி
அன்னான் அவன் உறையும்இடம் ஆலந்துறை அதுவே.

எங்கள் பெருமானை, இமையோர் தொழுதுஏத்தும்
நங்கள் பெருமானை, நல்லூர் பிரிவில்லாத்
தம்கை தலைக்குஏற்றி "ஆள்" என்று அடிநீழல்
தங்கும் மனத்தார்கள், தடுமாற்று அறுப்பாரே. கசுகூ.

வாள் ஆர்கண் செந்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
தோள் ஆகம் பாகமாப் புல்கினான் தொல்கோயில்,
வேளாளர் என்றவர்கள் வண்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. கஎ௦.

கசுஅ. பொழில்சூழ்: சோலை சூழ்ந்த. புளமங்கை: திருப்புள்ள மங்கை என்னும் தலம். என் ஆனவன்: எனக்குச் சொந்தம் ஆனவன். இளஞாயிறின் சோதி அன்னான்: காலைச் சூரியனின் மென்மையான ஒளிபோன்றவன்.

கசுகூ. இமையோர்: தேவர். ஆள்; நான் உன்னுடைய ஆள். தடுமாற்று அறுப்பார்: தடுமாற்றத்தை நீக்குவார்.

கஎ௦. வாள்ஆர்கண்: கத்திபோன்ற கண். செம்துவர்வாய்: சிவந்த பவளம் போன்றவாய். புல்கினான்: சேர்ந்தான். தொல்கோயில்: பழைய கோவில். வண்மை: கொடைத் தன்மை. தாளாளர்: முயற்சியுடையார். ஆக்கூர், ஒருதலம். அங்குள்ள கோயிலுக்குத் தான்தோன்றிமாடம் என்பது பெயர்.

விளங்குஇழை மடந்தைமலை மங்கைஒரு பாகத்து
உளம்கொள இருத்திய ஒருத்தன் இடம் என்பர்;
வளம்கெழுவு தீபமொடு தூபம்மலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய்நகள் ளாறே. கஎக.

நறைகொண்ட மலர்தூவி விரைஅளிப்ப நாள்தோறும்
முறைகொண்டு நின்றுஅடியார் முட்டாமேபணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையும்செங்காட்டங்குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.

பெண்ஆண் எனநின்ற பெம்மான், பிறைச்சென்னி
அண்ணா மலைநாடன், ஆரூர் உறைஅம்மான்,
மண்ஆர் முழவுஓவா மாடம் நெடுவீதிக்
கண்ஆர் கடல்நாகைக் காரோ ணத்தானே. கஎங.

கஎக. இழை: ஆபரணம். உளம்கொள இருத்திய; விரும்பி அமர வைத்துக்கொண்ட. கெழுவு; மிகுந்த. தீபம்: விளக்கு. தூபம்: புகை. நளன்; நளச்சக்கிரவர்த்தி. கெழுவி. பொருந்தி.

கஎஉ. நறை; தேன். விரை; மணம். முட்டாமே: முட்டுப் படாமல். சிறை; சிறகு. கறை; விஷம். கணபதீச்சரம்; திருச்செங்காட்டங்குடியில் உள்ள கோயிலின் பெயர்.

கஎங. மண்ஆர் முழவு ஓவா மாடம்: கழுவப்பெறும் மத்தள ஒலி நீங்காத அடுக்கு மாளிகை. கண்ஆர்: கண்நிறைந்த. கடல்நாகை: கடல் சூழ்ந்த நாகபட்டினம். காரோணம்: நாகையில் உள்ள கோயில்.

கனிதனைக், கனிந்தவ ரைக்கலந்து ஆட்கொள்ளும்
முனிதனை, மூஉல குக்கொரு மூர்த்தியை,
நனிதனை நல்லவர் தாம்தொழும் வெண்ணியில்
இனிதனை ஏத்துவர் ஏதம்இ லாதாரே. கஎச.

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போரிடைச் சுக்கிரீ வன்அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருஉசாத் தானமே. கஎரு.

மலையார்தரு மடவாள்ஒரு பாகம்மகிழ்வு எய்தி
நிலையார்தரு நிமலன்வலி நிலவும்புகழ் ஒளிசேர்
கலையார்தரு புலவோர்அவர் காவல்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரும் இடும்பாவனம் இதுவே.

கஎச. கனிந்தவரைக் கலந்து : ஈடுபட்டவரோடுகூடி. முனி: துறவி. நனி : நன்றாக. வெண்ணி: ஒரு சிவத்தலம். இனிதன்: இன்பமானவன். ஏதம்: குற்றம்.

கஎரு. நீர் இடைத்துயின்றவன் : கடலிலே உறங்கும் திருமாலின் அவதாரமாகிய இராமபிரான். தம்பி : அவன் தம்பி இலக்குவன். கார்உடை : கறுத்த. சேடர் : அறிஞர். திரு உசாத்தானம், கோயிலூர் என்னும் பெயரையுடைய ஒரு தலம்.

கஎசு. வலி : பலம். கலைஆர்தருபுலவோர் : கலை நிரம்பிய புலவர்.

பஞ்சுதோய் மெல்அடிப் பாவை யாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர், நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்துஅடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக் காடரே. கஎஎ.

மெய்யராகிப் பொய்யைநீக்கி வேதனையைத் துறந்து
செய்யரானர் சிந்தையானே! தேவர்குலக் கொழுந்தே!
நைவன்நாயேன்உன் தன்நாமம்நாளும்நவிற்றுகின்றேன
வையம்முன்னே வந்துநல்காய் வலிவலம்மே யவனே.

நாளாய போகாமே, நஞ்சுஅணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம், மடநெஞ்சே! அரன்நாமம்
கேளாய்!நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே. கஎகூ

கஎஎ. பஞ்சுதோய்: செம்பஞ்சு ஊட்டிய. மஞ்சுதோய்: மேகம் தவழும். வெம்சினம்: கடும்கோபம. மருப்பு: தந்தம். விரைய: வேகமாக. குஞ்சரம்; யானை.

கஎஅ. வேதனை: துயரம். செய்யர்: செம்மையானவர், நைவன்: வருந்துவேன். நவிற்றுதல்: சொல்லுதல். வையம்முன்னே: உலகத்தார் முன்னிலையில்.

கஎகூ. கிளை கிளைக்கும்: சுற்றம் செழிக்கும். கோள்: இடையூறு.

குற்றம்நீ! குணங்கள்நீ! கூடல்ஆல வாயிலாய்!
சுற்றம்நீ! பிரானும்நீ! தொடர்ந்துஇலங்கு சோதிநீ!
கற்றநூற் கருத்தும்நீ! அருத்தம்இன்பம் என்றுஇவை
முற்றும்நீ! புகழ்ந்துமுன் உரைப்பதுஎன்முகம்மனே.

ஏலமார் தருகுழல் ஏழையோடு எழில்பெறும்
கோலமார் தருஇடைக் குழகனூர் உறைவிடம்,
சாலமா தவிகளும் சந்தனம் சண்பகம்
சீலமார் ஏடகம் சேர்தலாம் செல்வமே. கஅக.

வானிற்பொலிவு எய்தும்மழை மேகங்கிழித்து ஓடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்,
ஆனிற்பொலி ஐந்தும்அமர்ந்து ஆடிஉலகு ஏத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே.

கஅ௦. அருத்தம்: பொருள். முகமன்: உபசாரம்.

கஅக. ஏலம்: மணம். குழல்: கூந்தல். ஏழை: பார்வதி. தரு: மரம். உறைவிடம்: தங்கும்இடம். சீலம்: ஒழுக்கம். ஏடகம்: திருவேடகம் எனும் தலம்.

கஅஉ. மழை மேகம் கிழித்து: மழை பொழிகின்ற முகிலைப் பிளந்து. கூனல் பிறை: வளைந்த சந்திரன். சாரல்: சிறு தூற்றல். கொடுங்குன்றம்: பிரான்மலை என்னும் தலம். தேனிற்பொலிமொழியாள்: "சொல்லினைத்தேனில் குழைத்து உரைப்பாள்."

பருமாமத கரியோடுஅரி இழியும்விரி சாரல்
குருமாமணி பொன்னோடுஇழி அருவிக்கொடுங் குன்றம்,
பொரும்மாஎயில் வரைவில்தரு கணையிற்பொடி செய்த
பெருமானவன் உமையாளொடும் மேவும்பெரு நகரே.

வெம்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்கும் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியார் அவர்போலும்,
எங்கள் உச்சி உறையும் இறையாரே. க்அச.

பிடிஎலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடிஉலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்!நின்
அடிஅலால் அடைசரண் உடையரோ அடியரே. கஅரு.

கஅந. பருமாமதகரி: பெருத்த சிறந்த மத யானை. அரி: சிங்கம். இழிதல்: இறங்குதல். குருமாமணி: நிறம்வாய்ந்த உயர்ந்த இரத்தினம். பொரும் மா எயில்: போர்புரிந்த பெரிய கோட்டை. வரை வில் தரு கணையில்: மலையாகிய வில்லில் தொடுத்த அம்பினால்.

கஅச. வெம்கள்: விரும்பத்தக்க தேன். விம்மு: நிறைந்த, வெறி: மணம். உச்சி: முடி.

கஅரு. பிடி: பெண் யானை. பெரும் கை மா: பெரியதுதிக்கையை உடைய ஆண் யானை. விடியல்: புலர் பொழுது. தடம்: தடாகம். கடிஉலாம்: மணம் வீசும். கானப்பேர்: காளையார் கோவில். அடை சரண்: புகல்இடம்.

சிலையினால் முப்புரம் தீஎழச் செற்றவன்,
நிலையிலா இருவரை நிலைமைகண்டு ஓங்கினான்,
கலையினார் புறவில்தேன் கமழ்தரு கானப்பேர்
தலையினால் வணங்குவார் தவம்உடை யார்களே. கஅசு.

உண்ணாமுலை உமையாளொடும் உடன்ஆகிய ஒருவன்
பெண்ஆகிய பெருமான்மலை, திருமாமணி திகழ
மண்ஆர்ந்தன அருவித்திரள் மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணம் அறுமே.

சந்தம்ஆர் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தம்ஆர் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணைஅடி என்மனத்து உள்ளவே. கஅஅ.

கஅசு. இருவர் : பிரமன்,மால். புறவு : சோலை.

கஅஎ. உண்ணாமுலை : பருகாத தனம்; இது திருவண்ணாமலை அம்பிகையின் பெயர்; "வரை உரங் கிழித்த வேளும் வாய் வைத்துஅருந்தாத இளமுலை" என்பர் திருவிளையாடல்ஆசிரியர். மண் ஆர்ந்தன : நிலத்தில் வீழ்வன. திரள் : கூட்டம். மழலைம் முழவு : புதிய மத்தள ஒலி.

கஅஅ. சந்தம் : சந்தன மரம். அகில் : அகிற்கட்டை. உந்து : தள்ளுகின்ற. முகலி : திருக்காளத்தி நகரில் ஓடும் பொன்முகலியாறு. மந்தம் ஆர் : மந்தாரப் பூக்கள் நிறைந்த. மல்குவண் : வளம் பெருகிய.

துறைபல சுனைமூழ்கித் தூமலர் சுமந்துஓடி
மறைஒலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்துஏத்தச்
சிறைஒலி கிளிபயிலும் தேன்இனம் ஒலிஓவாப்
பறைபடு விளங்குஅருவிப் பருப்பதம் பரவுதுமே. கஅகூ.

தொண்டர்அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும்இடம் என்பரால்,
வண்டுபாட, மயில்ஆல, மான்கன்று துள்ள,வரிக்
கெண்டைபாயச் சுனைநீலம் மொட்டலரும் கேதாரமே.

''சடையாய்'' எனுமால்; ''சரண்நீ'' எனுமால்;
''விடையாய்'' எனுமால்; வெருவா விழுமால்;
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய்! தகுமோ? இவள்உள் மெலிவே. ககூக.

கஅகூ. துறை: வழி. சுனை: நீர்நிலை. தூ: சுத்தமான. சிறை கிளி ஒலிபயிலும் என மாற்றுக. இறகுகளையுடைய கிளி பேச்சுப்பழகும என்பது பொருள். தேன் இனம்: வண்டுக்கூட்டம். ஓவா: நீங்காத. பறை: பெருஞ்சத்தம். பருப்பதம்: ஸ்ரீசைலம் என்னும் தலம்.

ககூ௦. தொண்டர்: அடியார். அஞ்சுகளிறு: ஐம்புலன். சுரும்பு: வண்டு. இண்டை: மாலை. சுனைநீலம்: சுனையின்கண்ணுள்ள நீலோற்பலம். மொட்டு அலரும்: முகிழ்விரியும். கேதாரம்: இமயமலைச் சாரலிலுள்ள திருக்கேதாரம் என்னும் தலம்.

ககூக. சடையாய்: சடையை உடையவனே. சரண்: பற்றுக்கோடு. வெருவா விழும்: துணுக்குற்று விழுவாள். எனும்: (எல்லாஇடத்தும்) என்று கூறுவாள். ஆல் எங்கும் அசை. மடை: வருவாய் நீர் தேங்கும்இடம். குவளை: நீலோற்பலம். மருகல்: திருமருகல் தலம். இவள் உள மெலிவு: இப்பெண்ணினது அகநோய்.

இது தாயார் பாடல்; காதல் நோய்வாய்ப்பட்ட மகள் பொருட்டுத் தாயார் சொல்லுவதாகச் சுவாமிகள் பாடுகிறார்.

செங்கட் பெயர்கொண் டவன்,செம் பியர்கோன்,
அங்கட் கருணை பெரிதா யவனே!
வெங்கண் விடையாய்! வெண்நா வலுளாய்!
அங்கத்து அயர்வா யினள்ஆ யிழையே. ௧௬௨.

சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா! தேனொடுபால்,
முறையாலே உணத்தருவன்;மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல்தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள்! பயப்புஊரச்
சங்காட்டம் தவிர்த்துஎன்னைத் தவிராநோய் தந்தானே!
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனல்ஏந்தி விளையாடும் பெருமானே.

---

௧௬௨. செங்கட் பெயர் கொண்டவனாகிய செம்பியர்கோன் என்பவர், கோச்செங்கட்சோழ நாயனார். அவரிடம் பெருங் கருணை கொண்டவன், சிவபெருமான். வெங்கண்விடை: சிவந்த கண்ணையுடைய காளை. வெள்ளைநாவல் மரம், திருவானைக்காவலில் தலவிருட்சம். ஜம்புகேசுவரம் என்பது திருவானைக்காவலுக்குப் பெயர். ஜம்பு: நாவல். அங்கத்து அயர்வு ஆயினன் ஆயிழை: உடம்பு மெலிந்துவிட்டாள் ஒருபெண்.

இதுவும் தாயார் இரங்கல் துறையே.

௧௬௩. சிறை ஆரும்: சிறகுகளைஉடைய. மடம்: இளமை. தரளம்: முத்து. தோணிபுரம்: சீகாழி. துளங்குதல்: விளங்குதல். பேசாயே: சொல்லுவாயாக.

இது கிளியைத் திருநாமம் கேட்கும்துறை.

௧௬௪. பைங்கோடு: பசுமையான கொம்பு. புன்னை: புன்னை மரம். பயப்பு: பசலை நிறம். சங்காட்டம்: புணர்ச்சி. தவிர்த்து: நீக்கி. தவிரா நோய்: தீராநோய். வெங்காடு: சுடுகாடு.

இது தலைவனை அடையாத தலைவி வருந்திக் கூறுவது.

கூர்ஆரல் இரைதேர்ந்து குளம்உலவி வயல்வாழும்
தாராவே! மடநாராய்! தமியேற்குஒன்று உரையீரே!
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்தன் அருள்ஒருநாள் பெறலாமே?

பாராரே எனைஒருகால்; தொழுகின்றேன்! பாங்கமைந்த
கார்ஆரும் செழுநிறத்துப் பவளக்கால் கபோதங்காள்!
தேர்ஆரும் நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீர்ஆரும் சடையாருக்கு என்நிலைமை நிகழ்த்தீரே. ககசு

ககரு. ஆரல்: ஆரால் என்னும் மீன் வகை. இரை: உணவு. தாரா: வாத்து. தமியேற்கு: அடியேனுக்கு. சீராளன்: சிறுத்தொண்டநாயனாரின் செல்வ மகன். பெறலாமே: பெறமுடியுமா?

இதுவும் தலைவி இரங்கிக் கூறுவதே.

ககசு. பாராரே எனை ஒருகால்: என்னை ஒருமுறையாவது பார்க்கமாட்டாரா. கார்ஆரும் செழுநிறம்: கொழுகொழுப் பான கறுப்புநிறம். கபோதம்: கரும்புறா. திருத்தோணி புரம்: சீகாழித்தலம். காதல் நோய்உற்றவள் பறவைகளையும் "தொழுகின்றேன்" எனக் கூறுவதை "செங்கால் மடநாராய் தென் உறந்தை சேறியேல், நின்கால்மேல் வைப்பன் என் கையிரண்டும்" என்று முத்தொள்ளாயிரமும் மொழியும். "தேர்ஆரும் நெடுவீதி" என்ற சொல் தொடரைத் திருமங்கை யாழ்வாரும் கையாண்டிருக்கிறார்.

இதுவும் தலைவி கூற்றே.

மட்டுஇட்ட புன்னைஅங் கானல் மடமயிலைக்
கட்டுஇட்டங் கொண்டான், கபாலீச் சரம்அமர்ந்தான்,
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டுஇட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்! ககஎ.

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான், கபாலீச் சரம்அமர்ந்தான்,
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேர்இழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்! ககஅ.

ககஎ. மட்டு: தேன். கானல்: சோலை. மடமயிலை: மாடம் மல்கு மயிலாப்பூர். கட்டு இட்டங் கொண்டான்: விருப்பொடு தழுவினவன். கபாலீச்சரம்: திருமயிலாப்பூர்க் கோயில். ஒட்டிட்ட: ஒட்டிக்கொண்ட. உருத்திரபல்கணத்தார்: சிவன் அடியார். அட்டு: சமைத்து. காணாதே போதியோ: காணாமல் போகின்றாயோ. பூம்பாவாய்: அழகிய நங்கையே.

இது இரங்கல்பா.

ககஅ. ஒண் கண்: ஒளி பொருந்திய கண். மாமயிலை: சிறந்த மயிலாபுரி. நெய்ப்பூசும் ஒண் புழுக்கல்: நெய் கலந்த நல்ல சோறு.

இதுவும் இரங்கற்பாடலே.

ஐந்துசீர் விருத்தம்.

செல்வம் மல்கு செண்பகம்
 வேங்கை சென்றுஏறிக்
கொல்லை முல்லை மெல்அரும்பு
 ஈனும் குற்றாலம்;
வில்லின் ஒல்க மும்மதில்
 எய்து வினைபோக
நல்கும் நம்பான் நன்நகர்
 போலும் நமரங்காள். கசூசு.

போதும் பொன்னும் உந்தி
 அருவி புடைசூழக்
கூதல் மாரி நுண்துளி
 தூங்கும் குற்றாலம்;
மூதூர் இலங்கை முட்டிய
 கோனை மிறைசெய்த
நாதன் மேய நன்நகர்
 போலும் நமரங்காள். உOO.

கசூசு. கொல்லையில் போட்ட முல்லைக்கொடி மலையிலுள்ள செண்பகம் வேங்கை முதலியமரங்களில்ஏறிப்படர்ந்து அரும்பு விடும் வளம் அமைந்த திருக்குற்றாலம். இங்கு "கொல்லை முல்லை மெல் அரும்பு ஈனும் குற்றாலம்" எனக் காணப்படுவது, திருமங்கை ஆழ்வார் பாசுரத்தில் "கொல்லை முல்லை மெல் அரும்பு ஈனும் குறுங்குடியே" எனக் காணப்படுகிறது. நம்பான்: கடவுள். நம்பன் என்பதன் நீட்டல். நமரங்காள்: நம்மவர்களே.

உOO. போது: பூக்கள். உந்தி: செலுத்தி. கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்: கூதலோடு மழையானது சிறிய நீர்த்துளிகளாகத் தொங்கும் குற்றாலப்பதி. இலங்கை முட்டியகோன்: தன் கயிலைமலையை முட்டிய இலங்கைத் தலைவனுகிய இராவணனை. மிறை செய்தநாதன்: தண்டித்த கடவுள்.

முந்திமா விலங்கல்அன்று எடுத்தவன்
முடிகள்தோள் நெரிதரவே,
உந்திமா மலர்அடி ஒருவிரல்
உகிர்நுதி யால்அடர்த்தார்;
கந்தமார் தருபொழில் மந்திகள்
பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வே
லியுறை செல்வர்தாமே. உ௦க.

துஞ்ச வருவாரும் தொழுவிப்
பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்துஎன்னை நினைவிப்
பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்துஒருத்தி வாழ்நாள்
கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்
காட்டுஎம் அடிகளே. உ௦உ.

உ௦க. முந்தி: விரைந்து. மா விலங்கல்: சிறப்புடைய கயிலைமலை. எடுத்தவன், இராவணன். நெரிதர: நொறுங்க. உகிர்நுதி: நகத்தின் நுனி. அடர்த்தார்: தாக்கினர். கந்தம் ஆர்தரு பொழில்: மணம் மல்கிய சோலை. மந்தி: குரங்கு. பாய்தர: பாய. மதுத் திவலை சிந்து பூந்துறை: தேன் துளிகளைக் கொட்டுகின்ற அழகிய வழி.

உ௦உ. துஞ்ச வருவாரும்: உறங்கும்போதும் வந்து உள்புகுந்தவரும். தொழுவிப்பார்: தொழச்செய்பவர். முனைநட்பாய்: முற்காலத்து நட்பாக இருந்து. வஞ்சப்படுத்து: வஞ்சனை செய்து. ஒருத்தி: ஒரு பெண். வாழ்நாள் கொள்ளும்: உயிரை வாங்கிய. பழையனூர் ஆலங்காடு: பழையனூர்க்குப் பக்கத்துள்ள திருவாலங்காடு என்னும்பதி. இங்குப் பழையனூரில் ஒரு வணிகனை ஒருத்தி வஞ்சித்துக்கொன்ற கதை கூறப்படுகிறது. இதனை "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகன் உயிர் இழப்ப" என்னும் பாடலால் உமாபதி சிவாச்சாரியார் உரைப்பர்.

காவினை இட்டும் குளம்பல
 தொட்டும் கனிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித்
 தீர்என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலர்அடி
 போற்றுதும் நாம்அடியோம்;
தீவினை வந்துஎமைத் தீண்டப்பெ
 றாதிரு நீலகண்டம். உ௦௩.

நன்றுடை யானைத் தீயதுஇல்
 லானை நரைவெள்ளேறு
ஒன்றுடை யானை உமைஒரு
 பாகம் உடையானைச்
சென்றடை யாத திருஉடை
 யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன்
 உள்ளம் குளிருமே. உ௦௪.

உ௦௩. கா: பொழில். தொட்டும்; தோண்டியும். ஏவினை: வில் தொழில்.

உ௦௪. நரை வெள் ஏறு: நரைத்த வெள்ளை விடை. சென்று அடையாத திரு: அணுகி அடையமுடியாத செல்வம். சிராப் பள்ளிக் குன்று: திருச்சிராப்பள்ளி மலை.

முன்னம் நின்ற முடக்கால்
முயற்குஅருள் செய்துநீள்
புன்னை நின்று கமழ்பா
திரிப்புலி யூர்உளான்,
தன்னை நின்று வணங்கும்
தனைத்தவம் இல்லிகள்
பின்னை நின்ற பிணியாக்
கையைப்பெறு வார்களே. உ0௫.

அணைஅலை சூழ்கடல் அன்றுஅடைத்
துவழி செய்தவன்,
பணைஇலங் கும்முடி பத்துஇறுத்
தபழி போக்கிய
இணையிலி என்றும்இ ருந்தகோ
இல்இரா மேச்சுரம்,
துணையிலி தூமலர்ப் பாதம்ஏத்
தத்துயர் நீங்குமே. உ0௬.

உ0௫. முடக்கால் முயற்கு : நொண்டிக்காலையுடைய முயலுக்கு. பாதிரிப்புலியூர் : திருப்பாதிரிப்புலியூர். தனை : அத்தனை. இல்லிகள் : இல்லாதவர்கள். பிணியாக்கை : நோய் உடம்பு.

உ0௬. அணை : மேடு. வழி செய்தவன் : பாதையை உண்டாக்கிய இராமன். பணை : பருத்த. முடிபத்து : இராவணனுடைய பத்துத்தலை. இறுத்த : அறுத்த. இணை இலி : ஒப்பு இல்லாத சிவன்; "பிறப்பு அறுத்த இணையிலி" எனத் திருவாசகம் கூறுகிறது. துணை இலி : தன்னைத்தவிர வேறு துணையில்லாதவன்; "தான் அலால் துணையும் இல்லை" என்றார் அப்பர்; "தன் துணை ஒருவரும் தன்னில் வேறுஇலான்" என்று கூறுவர் கம்பர்.

தேவியை வவ்விய தென் இலங்
 கைத்தச மாமுகன்
பூஇய லும்முடி பொன் றுவித்து
 அப்பழி போய்அற
ஏ இய லும்சிலை அண்ணல்செய்
 தஇரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னர்கள் தம்
 மேல்வினை வீடுமே. உ0எ.

மைத்தகு மேனி வாள் அரக்
 கன் தன் மகுடங்கள்
பத்தின திண்தோள் இருபதும்
 செற்றான் பரங்குன்றைச்
சித்தமது ஒன் றிச் செய்கழல்
 உன்னிச் சிவன்என் று
நித்தலும் ஏத்தத் தொல்வினை
 நம்மேல் நில்லாவே. உ0அ.

உ0எ. தேவி: சீதை. வவ்விய: கவர்ந்த. தசமாமுகன்: பெரிய பத்து முகங்களை உடைய இராவணன். பூ இயலும் முடி: மாலை அணிந்த தலை. பொன்றுவித்து: அழித்து. அற: நீங்க. ஏ இயலும் சிலை அண்ணல்: அம்பு பொருந்திய வில்லைப்பெற்ற இராமன். செய்த: உண்டாக்கிய. வீடும்: நீங்கும்.

உ0அ. மைத்தகு மேனி: மை போன்ற உடம்பு. பத்தின திண்தோள்: பத்தைச் சேர்ந்த வலிய தோள்கள். பரங்குன்று: திருப்பரங்குன்றம். சித்தம்: மனம். உன்னி: நினைத்து.

பாடலார் வாய்மொழியீர்! பைங்கண்
வெள்ளேறு ஊர்தியீர்!
ஆடலார் மாநடத்தீர்! அரிவை
போற்றும் ஆற்றலீர்!
கோடலார் தும்பிமுரன்று இசைமி
ழற்றும் குடவாயில்
நீடலார் கோயிலே கோயி
லாக நிகழ்ந்தீரே. ௨௦௯.

வாழ்ந்த நாளும்இனி வாழும்
நாளும்இவை அறிதிரேல்,
வீழ்ந்த நாள்எம்பெரு மானை
ஏத்தவிதி இல்லீர்காள்!
போழ்ந்த திங்கட்புரி சடையி
னன்தன்புக லூரையே
சூழ்ந்த உள்ளம்உடை யீர்கள்
உங்கள்துயர் தீருமே. ௨௧௦.

---

௨௦௯. ஊர்தி: வாகனம். அரிவை: தேவி. ஆற்றல்: வலிமை. கோடல்ஆர்: தேனைச் சேர்த்துக் கொள்ளுதலை யுடைய. தும்பி: வண்டு. முரன்று: கத்தி. குடவாயில்: ஒரு சிவத்தலம்.

௨௧௦. வீழ்ந்தநாள்: கழிந்துபோன காலம். போழ்ந்த திங்கள்: பிளவுச் சந்திரன். புகலூர்: திருப்புகலூர் என்னும் தலம்.

உரம்கெ டுப்பவன் உம்பர்க
ளாயவர் தங்களை;
பரம்கெ டுப்பவன் நஞ்சைஉண்
டுபக லோன்தனை;
முரண்கெ டுப்பவன் முப்புரம்
தீஎழச் செற்றுமுன்;
வரம்கொ டுப்பவன் மாமழ
பாடியுள் வள்ளலே. உகக.

எண்ணார் முத்தம் ஈன்று
மரகதம் போற்காய்த்துக்
கண்ணார் கமுகு பவளம்
பழுக்கும் கலிக்காழிப்
"பெண்ணோர் பாகா! பித்தா!
பிரானே!" என்பார்க்கு
நண்ணா வினைகள் நாள்தொறும்
இன்பம் நணுகும்மே. உகஉ.

உகக. உரம்: வலிமை. பரம்: பாரம். முரண்: மாறுபாடு. மழபாடி: திருமழபாடி என்னும் தலம்.

உகஉ. முத்தம்: முத்து. மரகதம்: பச்சை. பவளம்: நவரத்தினங்களுள் ஒன்று; அது செந்நிறமானது. கண்ஆர் கமுகு: கணுக்களையுடைய பாக்கு. கலிக்காழி: ஆரவாரம் கொண்ட சீகாழி. நண்ணா: அணுகமாட்டா.

வரிதரு புலிஅதள் உடையினர்,
மழுஎறி படையினர்,
பிரிதரு நகுதலை வடம்முடி
மிசைஅணி பெருமையர்,
எரிதரும் உருவினர், இமையவர்,
தொழுவதொர் இயல்பினர்,
புரிதரு குழல்உமை யொடும்இனிது
உறைபதி, புறவமே. ௨௧௩.

அலைவளர் தண்புனல் வார்சடைமேல்
அடக்கி ஒருபாகம்
மலைவளர் காதலி பாடஆடி
மயக்கா வருமாட்சி;
இலைவளர் தாழை முகில்விரியும்
இராமேச் சுரமேயார்
தலைவளர் கோலநன் மாலைசூடும்
தலைவர்செ யும்செயலே. ௨௧௪.

---

௨௧௩. வரிதரு: கோடுகள் உடைய. அதள்: தோல். பிரிதரு நகுதலைவடம்: உடம்பை விட்டுப் பிரிக்கப்பட்ட கண்டார் சிரிக்கத்தக்க தலைமாலை. எரிதரும் உரு: செம்மேனி. புரிதரு குழல்: முறுக்கப்பட்ட கூந்தல். புறவம்: சீகாழிப்பதி.

௨௧௪. தண்புனல்: கங்கை. மலை வளர்காதலி: உமையவள். மயக்கா: மயக்கி. தலைவர் செயும் செயல், வருமாட்சியாக இருக்கின்றது என முடிக்க!
இது தலைவி கூற்று.

அறுசீர் விருத்தம்

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவுஅழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக "அஞ்சேல்"என்று
அருள்செய்வான் அமரும் கோயில்;
வலம்வந்த மடவார்கள் நடம்ஆட
முழவுஅதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருவை யாறே. ௨௧௫.

ஊன்பாயும் முடைதலைகொண்டு ஊர்ஊரின்
பலிக்குஉழல்வர், உமையாள் பங்கர்,
தான்பாயும் விடைஏறும் சங்கரனார்,
தழல்உருவர், தங்கும் கோயில்;
மான்பாய வயல்அருகே மரம்ஏறி
மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமலம்
மொட்டுஅலரும் திருவை யாறே. ௨௧௬.

---

௨௧௫. புலன் ஐந்து: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து. பொறி: மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து. நெறி மயங்கி: வழிமாறுபட்டு. ஐ: கபம். அலமந்த போதாக: வருந்திய காலத்து. முழவு: மத்தளம். மந்தி: குரங்கு. முகில்: மேகம்.

மாதர் நடனம் ஆடுவது மயில் ஆடுவது போலவும் மத்தளம் அதிர்வது மேகம் முழங்குவது போலவும் இருப்பதால் குரங்குகள் மழை என மரம் ஏறி வானைப் பார்க்கின்றன.

௨௧௬. ஊன்: மாமிசம். முடை: ஒரு வகை நாற்றம். தழல் உருவர்: தீ வண்ணர். மடுக்கள்: நீர் நிலைகள். கமலம்: தாமரை. மொட்டு அலரும்: மொக்கு விரியும்.

மான்பாய, அதுகண்டு வயல் அருகே இருக்கும் மரத்திலே ஏறி மந்திகள்பாய, அங்குள்ள மடுக்களிலேயுள்ள மீன்கள் அவ்ஒலி கேட்டுத்துள்ளித் தாமரை மொட்டிலே மோத, அது விரிந்து தேனைச் சொரியும் திருவையாறு.

நீரோடு கூவிளமும் நிலாமதியும்
  வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்குஅணிந்த
  தத்துவனார் தங்கும் கோயில்;
காரோடி விசும்புஅளந்து கடிநாறும்
  பொழில்அணைந்த கமழ்தார் வீதித்
தேரோடும் அரங்குஏறிச் சேயிழையார்
  நடம்பயிலும் திருவையாறே. உகள.

நின்றுஉலா நெடுவிசும்பில் நெருக்கிவரு
  புரம்மூன்றும் நீள்வாய் அம்பு
சென்றுஉலாம் படிதொட்ட சிலையாளி
  மலையாளி சேரும் கோயில்;
குன்றெலாம் குயில்கூவக் கொழும்பிரசம்
  மலர்பாய்ந்து வாசம் மல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு
  கண்வளரும் திருவையாறே. உகஅ.

உகள. நீர்: கங்கை. கூவிளம்: வில்வம். கரந்தை: திருநீற்றுப் பச்சை. கார்: மேகம். விசும்பு: விண் உலகம். கடி: மணம். அரங்கு: சபை.

உகஅ. தொட்ட சிலையாளி: தொடுத்த வில்லாளன். மலையாளி: மலையின்கண் இருந்து ஆட்கொண்டவன். பிரசம்: தேன்.

அஞ்சாதே கயிலாய மலைஎடுத்த
அரக்கர்கோன் தலைகள் பத்தும்
மஞ்சுஆடு தோள்நெரிய அடர்த்து,அவனுக்கு
அருள்புரிந்த மைந்தர் கோயில்;
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி இரிந்துஅங்கு ஓடிச்
செஞ்சாலிக் கதிர்உழக்கிச் செழுங்கமல
வயல்படியும் திருவை யாறே. ௨௧௯.

மந்தம் ஆர்பொழில் மாங்கனி
மாந்திட மந்திகள், மாணிக்கம்
உந்தி நீர்வரு காவிரி
வடகரை மாந்துறை உறைவானை,
நிந்தி யாஎடுத்து ஆர்த்தவல்
அரக்கனை நெரித்திடு விரலானைச்
சிந்தி யாமனத் தாரவர்
சேர்வது தீநெறி அதுதானே. ௨௨௦.

---

௨௧௯. மஞ்சு: மேகம். அடர்த்து: தாக்கி. அவனுக்கு: அந்த இராவணனுக்கு. தெங்கின் பழம்: தேங்காய். மேதி: எருமை. இரிந்து: நிலைகுலைந்து. உழக்கி: கலக்கி. செழும் கமல வயல்படியும்: செழுமையான தாமரை பூத்த பண்ணையிலே பொருந்தும்.

௨௨௦. மந்தம்: தென்றல். உந்தி: தள்ளி. மாந்துறை: திருமாந்துறை என்னும் தலம். நிந்தியா: நிந்தித்து. எடுத்து ஆர்த்த: மலையைத்தூக்கி ஆரவாரம் செய்த. சிந்தியா மனத் தாரவர்: எண்ணாத மனம் படைத்தவர்.

மூத்துவர் ஆடையி னாரும்
மூசு கடுப்பொடி யாரும்
நாத்துவர் பொய்ம்மொழி யார்கள்
நயம்இல் அராமதி வைத்தார்,
ஏத்துயர் பத்தர்கள் சித்தர்
இறைஞ்ச அவர்இடர் எல்லாம்
காத்தவர், காமரு சோலைக்
கற்குடி மாமலை யாரே. உஉக.

தரும்சரதம், தந்தருள்என்று அடிநினைந்து
தழல்அணைந்து தவங்கள் செய்த
பெரும்சதுரர், பெயலர்க்கும் பீடுஆர்தோ
ழமைஅளித்த பெருமான் கோயில்;
அரிந்தவயல் அரவிந்தம் மதுஉகுப்ப
அதுகுடித்துக் களித்து வாளை,
கருஞ்சகடம் இளகவளர் கரும்புஇரிய
அகம்பாயும் கழுமலம்மே. உஉஉ.

உஉக. மூத்துவர் ஆடையினர்: மூத்த காவிஉடையினர். மூசு கடுப்பொடியார்: நிறையக் கடுக்காய்ப் பொடியைத் தின்னும் சமணர். நாத்துவர் பொய்ம் மொழியார்: நாக்குத் துவர்க்கப் பொய் பேசுபவர். இம்மூவகையினர்க்கும் நயம் இல்லாதவர். அராமதி: பாமபும் திங்களும்.

உஉஉ. தரும் சரதம்: நிச்சயம் தருவான். தழல் அணைந்து: நெருப்பில் நின்று. பெரும்சதுரர்: பேர்அறிஞர். பெயலர்: மேகம்போன்ற கொடைவள்ளல். பீடு: பெருமை. அரிந்த வயல்: கதிர் அறுத்த நிலம். அரவிந்தம்: தாமரை. மது உகுப்ப: தேனைக்கொட்ட. வாளை: வாளைமீன். கரும்சகடம்: பெரியவண்டி. இளக: ஒடிய. இரிய: நிலைகுலைய. கழுமலம்: சீகாழிப்பதி.

நினைவார் நினைய இனியான்,
பனியார் மலர்தூய் நித்தலும்;
கனையார் விடைஒன்று உடையான்;
கங்கை திங்கள் கமழ்கொன்றை
புனைவார் சடையின் முடியான்;
கடல்சூழ் புறவம் பதியாக
எனையாள் உடையான்; இமையோர்
ஏத்த உமையோடு இருந்தானே. உஉங.

உற்றுஉமை சேர்வது மெய்யினையே!
உணர்வது நின்அருள் மெய்யினையே!
கற்றவர் காய்வது காமனையே!
கனல்விழி காய்வது காமனையே!
அற்றம் மறைப்பதும் உன்பணியே!
அமரர்கள் செய்வதும் உன்பணியே!
பெற்றும் உகந்தது கந்தனையே!
பிரம புரத்தைஉ கந்தனையே. உஉச.

உஉங. கனையார் விடை: கனைக்கின்ற காளை. புறவம்: சீகாழி.

உஉச. உற்று: பொருந்தி. மெய்: உடம்பு. மெய்: உண்மை. கற்றவர் கொல்வதும் காமனைத்தான்; உன் கனல் விழி கொன்றதும் அவனைத்தான். அற்றம்: அழிவு. கந்தன்: குமாரக்கடவுள். பிரமபுரம்: சீகாழி. உகந்தனை: மகிழ்ந்தாய்.

மாயவன், சேயவன், வெள்ளிய
வன்,விடம் சேரும் மைமிடற்றன்,
ஆயவன் ஆகியொர் அந்தர
மும்மவன் என்றுவ ரையாகம்
தீயவன் நீரவன் பூமிய
வன்திரு நாரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வார்அவர்
மேல்வினை ஆயின வீடுமே. உஉரு.

தூசு புனைதுவ ராடைமே
வுந்தொழி லார், உ டம்பினிலுள்
மாசு புனைந்துஉடை நீத்தவர்
கள்மயல் நீர்மை கேளாதே,
தேசுடை யீர்கள்! தெளிந்தடை
மின்! திரு நாரை யூர்தன்னில்,
பூசு பொடித்தலை வர்அடி
யார்அடி யேபொ ருத்தமே. உஉசு.

உஉரு. மாயவன்: திருமால். சேயவன்: முருகன். வெள்ளியவன்: வெள்ளிமலையாகியகயிலையில் இருப்பவன். மாயவனும் சேயவனும் வெள்ளியவனும் மைமிடற்றனும் ஆயவன் ஒருவனே என்பது கருத்து. அந்தரம்: வான். வரை ஆகம்: மலைபோல் மேனி. தீயவன்: தீ நிறமானவன். நீரவன்: நீரில் துயின்ற திருமால். பூமியவன்: உலகைப்படைத்த பிரமன். வீடும்: அழியும்.

உஉசு. தூசு புனை துவர்ஆடை மேவும் தொழிலார்: பஞ்சிறல் ஆய காவி தோய்த்த ஆடை உடுத்தும் தொழிலுடையார். மாசு புனைந்து உடைநீத்தவர்கள்: தூசியைப்போட்டுக் கொண்டு உடையைத் தள்ளியவர்கள். மயல் நீர்மை: மயக்கத் தன்மை. தேசுஉடையீர்கள்!: ஒளிபெற்றவர்களே.

தீவிரி யக்கழல் ஆர்ப்பச்
  சேயெரி கொண்டுஇடு காட்டில்
நாவிரி கூந்தல்நற் பேய்கள்
  நகைசெய்ய நட்டம் நவின்றோன்;
காவிரி கொன்றை கலந்த
  கண்ணுத லான்கடம் பூரில்
பாவிரி பாடல் பயில்வார்
  பழியொடு பாவம் இலாரே. உ உ எ.

நீலமா மணிநிறத்து அரக்கனை
  இருபது கரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார்
  வழிபட மன்னு கோயில்,
ஏலமோடு இலைஇல வங்கமே
  இஞ்சியே மஞ்சள் உந்தி
ஆலியா வருபுனல் வடகரை
  அடைகுரங்கு ஆடு துறையே. உ உ அ.

உ உ எ. தீ விரிய: நெருப்புப் பெருக. கழல் ஆர்ப்ப: சிலம்புகள் சத்தமிட. சேயெரி கொண்டு: சிவந்த அனலைக் கையில் கொண்டு. இடுகாடு: சுடுகாடு. நாவிரி: நாக்குத் தொங்கும். நட்டம் நவின்றோன்: நடனம் ஆடினவன். காவிரி கொன்றை: சோலையிலே மலர்ந்த கொன்றைப்பூ. கடம்பூர்: திருக்கடம்பூர்.

உ உ அ. அரக்கன்: இராவணன். கரம்: கை. ஒல்க: தளர்ந்துபோக. வாலியார்: இராமனால் கொல்லப்பட்ட குரங்கினத் தலைவர், இலவங்கம்: கிராமபு. ஆலியா: ஒலித்து. வடகரை அடை குரங்கு ஆடுதுறை: வடகுரங்காடுதுறை என்னும் தலம்.

வாரார் கொங்கை மாதோர்
பாகம் ஆக வார்சடை
நீரார் கங்கை திங்கள்
சூடி நெற்றி ஒற்றைக்கண்
கூரார் மழுவொன் றேந்தி
அந்தண் குழகன் குடமூக்கில்
காரார் கண்டத் தெண்டோள்
எந்தை காரோ ணத்தாரே. உஉகூ.

செந்தமிழர், தெய்வமறை நாவர்,செழு
நற்கலைதெ ரிந்த அவரோடு
அந்தம்இல்கு ணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்யஅமர் கின்ற அரன்ஊர்,
கொந்தலர்பொ ழிற்பழன வேலிகுளிர்
தண்புனல்வ ளம்பெ ருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்வி
ரும்புபதி வீழி நகரே. உஙo.

உஉகூ. வார்: ரவிக்கை. கூர்ஆர்: கூர்மை பொருந்திய. குழகன்: அழகன். குடமூக்கு: கும்பகோணம். காரோணம்: கும்பகோணத்துள்ள காரோணம் என்னும் கோயில்.

உஙo. நாவர்: நாக்கைப்பெற்றவர். அந்தம் இல்: முடிவு அற்ற. அர்ச்சனை: வழிபாடு. அரன்: சிவன். கொந்து: கொத்து. பொழில்: சோலை. பழனம்: வயல். வெம் திறல்: விரும்பத்தக்க வலிமை. வேதியர்: வேதம் கற்றவர் வீழிநகர்: திருவீழி மிழலை நகர்.

புவம்வளி கனல்புனல் புவிகலை
 உரைமறை திரிகுணம் அமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர்
 திகழ்தரும் உயிர்அவை அவைதம
பவமலி தொழிலது நினைவொடு
 பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர்
 செழுநில னினில்நிலை பெறுவரே. ௨௩௧.

தந்தையார் போயினார்; தாயாரும்
 போயினார்; தாமும் போவார்;
கொந்தவேல் கொண்டுஒரு கூற்றத்தார்
 பார்க்கின்றார்; கொண்டு போவார்;
எந்தநாள் வாழ்வதற் கேமனம்
 வைத்தியால் ஏழை நெஞ்சே!
அந்தண்ஆ ரூர்தொழுது உய்யலாம்
 மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே! ௨௩௨.

---

௨௩௧. புவம்: வானம். வளி: காற்று. கனல்: தீ. புனல்: நீர். புவி: மண். கலை: அம்சம். உரை: பேச்சு. மறை: வேதம். திரிகுணம்: மூன்றுகுணம். அமர்நெறி: பொருந்தும்வழி. திவம்: பரமபதம். சுரர்: தேவர். தம: தம்முடைய. பவம்: அநுபவம். பதும நன்மலர்: உள்ளத் தாமரை. மருவிய: சேர்ந்த. சிவபுரம், ஒரு தலம்.

௨௩௨. கொந்து அ வேல்: அச்சுறுத்தும் அந்தவேல். கூற்றத்தார்: எமனார். ஆரூர்: திருவாரூர். உய்யலாம்: பிழைக்கலாம். மையல் கொண்டு அஞ்சல்: மயங்கிப் பயப்படாதே.

மாலைமதி வாள்அரவு கொன்றைமலர்
துன்றுசடை நின்று சுழலக்
காலையில்எ ழுந்தகதிர் தாரகைம
டங்கஅனல் ஆடும் அரன்ஊர்;
சோலையின்ம ரங்கள்தொறும் மிண்டிஇன
வண்டுமது உண்டுஇ சைசெய,
வேலைஒலி சங்குதிரை வங்கசுற
வங்கொணரும் வேத வனமே. உ௩௩.

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்ததொரு மாக டல்விடம்
தான்அமுது செய்துஅருள் புரிந்தசிவன்
மேவுமலை தன்னை வினவில்,
ஏனம்இனம் மானினொடு கிள்ளைதினை
கொள்ளஎழில் ஆர்க வணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி
விலகுகா ளத்தி மலையே. உ௩௪.

உ௩௩. வாள்அரவு : ஒளிதரும் பாம்பு. துன்று : பொருந்திய. காலையில் எழுந்த கதிர் : இளஞ்சூரியன். தாரகை : நட்சத்திரம். மடங்க : ஒளி மழுங்க. மிண்டி : நெருங்கி. மது உண்டு : தேன்பருகி. வேலை : கடல். ஒலி சங்கு : ஓசையுடைய சங்கு. திரை : அலை. வங்கம் : தோணி. சுறவம் : சுறுமீன். வேதவனம் : திருமறைக்காடு.

உ௩௪. தானவர் : அசுரர். வாதைபட : துயரம் அடைய. மா கடல் விடம் : பெரிய ஆலகால விஷம். ஏனம் இனம் : பன்றிக்கூட்டம். கிள்ளை : கிளி. தினை கொள்ள : தினைப் பயிரைக் கவர. எழில் ஆர் கவணினால் : அழகான கவண் என்ற கல் எறியும் கருவியால். கானவர்தம் மாமகளிர் : வேட்டுவப் பெண்கள். கனக மணி விலகு : பொன் கல்லால் விலக்கும். காளத்திமலை : திருக்காளத்தி என்னும் தலத்துள்ளமலை.

கண்நி றைந்தவிழி யின்அழ
 லால்வரு காமன் உயிர்வீட்டிப்
பெண்நி றைந்தஒரு பால்மகிழ்வு
 எய்திய பெம்மான் உறைகோயில்,
மண்நி றைந்தபுகழ் கொண்டுஅடி
 யார்கள்வ ணங்கும் வலிதாயத்து
உள்நி றைந்தபெரு மான்கழல்
 ஏத்தநம் உண்மைக் கதியாமே. உ௩ரு.

தாதுஆர் கொன்றை தயங்கு
 முடியர், முயங்கும் மடவாளைப்
போதுஆர் பாகம் ஆக
 வைத்த புனிதர், பனிமல்கும்
மூதுஆர் உலகில் முனிவர்
 உடனாய் அறம்நான்கு அருள்செய்த
காதுஆர் குழையர், வேதத்
 திரளர், கயிலை மலையாரே. உ௩சு.

உ௩ரு. விழியின் அழல்: நெற்றிக்கண்ணின் நெருப்பு. வீட்டி: வாங்கி. வலிதாயம்: திருவலிதாயம் என்னும் தலம்.

உ௩சு. தாது: மகரந்தப்பொடி. தயங்கு: விளங்கும். முயங்கும் மடவாள்: அணைந்த பார்வதி. போது ஆர் பாகம் ஆக: பூப்போன்ற பக்கமாக. பனி: குளிர்ந்த. மூது ஆர் உலகம்: பழமையான உலகம். முனிவர்: சனகாதிநால்வர். வேதத் திரளர்: மறைகளின் தொகுப்பாக அமைந்தவர். கயிலை மலையார்: திருக்கயிலாய மலையுடையார்.

கொங்குஇயல் பூங்குழல் கொவ்வைச்
 செவ்வாய்க் கோமள மாதுஉமையாள்
பங்குஇய லும்திரு மேனி
 எங்கும் பால்வெள்ளை நீறுஅணிந்து,
சங்குஇயல் வெள்வளை சோர
 வந்துஎன் சாயல்கொண் டார்தமதுஊர்,
துங்கஇயல் மாளிகை சூழ்ந்த
 செம்மைத் தோணி புரந்தானே. உ௯எ.

எழுசீர் விருத்தம்.

ஊன்ஏறு வேலின் உருவேறு கண்ணி
 ஒளிஏறு கொண்ட ஒருவன்,
ஆன்ஏறது ஏறி, அழகுஏறு நீறன்,
 அரவுஏறு பூணும் அரன்ஊர்;
மான்ஏறு கொல்லை மயில்,ஏறி வந்து
 குயில்ஏறு சோலை மருவித்
தேன்ஏறு மாவின் வளம்ஏறி ஆடு
 திருமுல்லை வாயில் இதுவே. உ௯அ.

உ௯எ. கொங்கு: வாசனை. கொவ்வைச் செவ்வாய்; கொவ்வைக்கனிபோன்ற சிவந்தஅதரம். சங்குஇயல் வெள்வளைசோர: சங்கினால் ஆய வெண்மையான வளையல் கழலுமாறு. சாயல்: மேனிஎழில். துங்கஇயல்: சுத்தமான. தோணிபுரம்: சீகாழிப்பதி.

இப்பாடல் கடவுளைக் காதல் கொண்ட தலைவி கூற்று.

உ௯அ. ஊன் ஏறு வேலின் உருவுஏறு கண்ணி: தசையைக் கோத்த வேலாயுதம் போன்ற வடிவு உடைய கண்ணைப் பெற்ற பார்வதி. ஒளி ஏறுகொண்ட ஒருவன்: (அவளுடைய) ஒளியினால் தாக்கப்பெற்ற ஒப்பற்ற சிவபெருமான். ஆன் ஏறது ஏறி: காளைமாட்டில் ஏறுபவன். அழகு ஏறு நீறன்: அழகு ஏறுமாறு திருநீறு பூசியவன். அரவு ஏறு பூணும் அரன் ஊர்: ஆண் பாம்பு அணிந்த அந்தச் சிவன் வாழ் ஊர் எது? மயில், பிறபகுதிக்கு எழுவாய். மா; மாமரம். திருமுல்லைவாயில், ஒரு சிவத்தலம்.

மின்னிய அரவும் வெறிமலர் பலவும்
விரும்பிய திங்களும் தங்கு
சென்னியது உடையான், தேவர்தம் பெருமான்,
சேயிழை யொடும்உறை விடமாம்;
பொன் இயல் மணியும் உரிகரி மருப்பும்
சந்தமும் உந்து,வன் திரைகள்
கன்னியர் ஆடக் கடல்ஒலி மலியும்
கழுமல நகர்என லாமே. உ௩௯.

பூங்கொடி மடவாள் உமைஒரு பாகம்
புரிதரு சடைமுடி அடிகள்,
வீங்குஇருள் நட்டம் ஆடும்எம் விகிர்தர்,
விருப்பொடும் உறைவிடம் வினவில்,
தேங்கமழ் பொழிலில் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டுஇசை பாடும்
ஓங்கிய புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே. உ௪௦.

உ௩௯. வெறி: மணம். திங்கள்: சந்திரன். சென்னி: தலை. சேயிழை: தேவி. மணி: இரத்தினம். உரி கரி மருப்பு: உரிக்கப்பட்ட யானையின் தந்தம். சந்தம்: சந்தனம். உந்து: தள்ளும். வன்திரை: வலிய அலை. கழுமல நகர்: சீகாழிப்பதி.

உ௪௦. பூங்கொடி மடவாள்: அழகிய கொடிப்போன்ற பெண். கோதி: சிதைத்து. செறிதரு: நெருங்கிய. ஓமமாம்புலியூர்: திருவோமாம்புலியூர் என்னும் தலம். வடதளி, அங்குள்ள கோயில்.

தாயினும்நல்ல தலைவர்என்று அடியார்
தம்அடி போற்றிசைப் பார்கள்,
வாயினும் மனத்தும் மருவிநின்று அகலா
மாண்பினர், காண்பல வேடர்,
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர், ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலைஅமர்ந் தாரே. ௨௪௧.

மங்கையர்க்கு அரசி, வளவர்கோன் பாவை,
வரிவளைக் கைம்மட மானி,
பங்கயச் செல்வி, பாண்டிமா தேவி,
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்குஅழல் உருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே. ௨௪௨.

---

௨௪௧. போற்றிசைத்தல்: வணங்கிப்புகழ்தல். அகலா மாண்பினர்: நீங்காத பெருமையுடையார். காண்பல வேடர்: காணத்தக்க பல வடிவினர். பிணி: கட்டு. ஞாலம்: உலகம். கோணமாமலை: ஈழநாடு என்று கூறப்படும இலங்கைத் தீவில் கடற்கரையின்கண் உள்ள திருக்கோணமலை என்னும் தலம்.

௨௪௨. மங்கையர்க்கு அரசி, கூன் பாண்டியன் மனைவி. வளவர்கோன்பாவை: சோழனுடைய மகள். வரிவளைக் கை மடமானி: கோடுகள் பொருந்திய வளை அணிந்த கைகளையுடைய இளமையும் பெருமையும் கொண்டவள். பங்கயச் செல்வி: திருமகள். அம் கயல் கண்ணி: அழகியமீன்போன்ற கண்ணை யுடையவள்; மீனாட்சி. ஆலவாய்: மதுரை. இப்பாடலை "மங்கையர்க்குத் தனிஅரசி" என்று தொடங்கிச் சேக்கிழார் அடிகள் நயம்பட எடுத்து ஆண்டிருக்கிறார்.

மண்எலாம் நிகழ மன்னனாய் மன்னும்
  மணிமுடிச் சோழன்தன் மகளாம்
பண்ணின்நேர் மொழியாள், பாண்டிமா தேவி,
  பாங்கினாற் பணிசெய்து பரவ,
விண்உளார் இருவர் கீழொடு மேலும்
  அளப்புஅரி தாம்வகை நின்ற
அண்ணலார், உமையோடு இன்புறு கின்ற
  ஆலவாய் ஆவதும் இதுவே. உ௩௩.

மானின் நேர்விழி மாத ராய்!வழு
  திக்கு மாபெருந் தேவி! கேள்,
"பானல் வாய்ஒரு பாலன் ஈங்குஇவன்"
  என்று நீபரிவு எய்திடேல்;
ஆனை மாமலை ஆதி ஆய
  இடங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்குஎளி யேன்அ லேன்,திரு
  ஆல, வாய்அரன் நிற்கவே. உ௩௪.

உ௩௩. பண்ணின் நேர்மொழியாள் ; இசையை ஒத்த பேசினள். பாங்கு : தகுதி. இருவர் : திருமால், பிரமன். அளப்பு அரிதாம் வகை : அளக்கமுடியாதபடி.

உ௩௪. மானின் நேர் விழி : மானின் கண்ணை ஒத்த கண். வழுதி : பாண்டியன். தேவி : மங்கையர்க்கரசி. கேள் : கேட்பாயாக. பானல் : ஆம்பல்பூ. பரிவு : வருத்தம். ஈனர்கள் : சமணர்கள்.

உள்ள வாறுஎனக்கு உரைசெய் மின்! உயர்
  வாய மாதவம் பேணுவீர்!
கள்ள விழ்பொழில் சூழும் கண்டியூர்
  வீரட் டத்துறை காதலான்,
பிள்ளை வான்பிறை செஞ்ச டைம்மிசை
  வைத்த தும்பெரு நீர்ஒலி
வெள்ளந் தாங்கியது என்கொ லாமிகு
  மங்கை யாள்உடன் ஆகவே. ௨௪௫.

எண்சீர் விருத்தம்.

வேய்உறு தோளி பங்கன், விடம்உண்ட
  கண்டன், மிகநல்ல வீணை தடவி,
மாசுஅறு திங்கள் கங்கை முடிமேல்
  அணிந்து, என் உளமே புகுந்த அதனல்,
ஞாயிறு திங்கள்செவ் வாய்புதன் வியாழம்
  வெள்ளி சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறு நல்ல நல்ல அவைநல்ல
  நல்ல அடியார் அவர்க்கு மிகவே. ௨௪௬.

---

௨௪௫. கள்அவிழ்பொழில் : தேன்கொட்டும் சோலை. கண்டியூர் : திருக்கண்டியூர்; இத்தலம் அட்டவீரட்டத்துள் ஒன்ருதலின் வீரட்டத்துறை என்று கூறப்பட்டது. காதலான் : பேரன்பிற்கு உரியவனை கடவுள். மங்கையாள் : உமையாள்.

௨௪௬. வேய் உறு தோளி : மூங்கில் அனைய தோளை உடைய தேவி. "விணை தடவி" என்பதனை, "சொல்லுயர்ந்த நெடு வீணை......மெல்விரல்கள் சிவப்பெய்தத்தடவி" என்பார் திருமங்கையாழ்வார். பாம்பு இரண்டு : இராகு, கேது.

பாகமும் தேவியை வைத்துக் கொண்டு
  பைவிரி துத்திப் பரிய பேழ்வாய்
நாகமும் பூண்ட நள்ளாறு உடைய
  நம்பெரு மான்,இது என்கொல் சொல்லாய்!
போகமும் நின்னை மனத்து வைத்துப்
  புண்ணியர் நண்ணும் புணர்வு பூண்ட
ஆகம் உடையவர் சேரும் கூடல்
  ஆலவா யின்கண் அமர்ந்த வாறே. உ௨எ

"புண்ணியர், பூதியர், பூத நாதர்,
  புடைபடு வார்தம் மனத்தார், திங்கட்
கண்ணியர்" என்றென்று காத லாளர்
  கைதொழுது ஏத்த இருந்த ஊராம்,
விண்உயர் மாளிகை மாட வீதி
  விரைகமழ் சோலை சுலாவி எங்கும்
பண்இயல் பாடல் அறாத ஆவூர்ப்
  பசுபதி ஈச்சரம் பாடு நாவே. உ௨அ.

உ௨எ. பை விரி: படம் விரிந்த. துத்தி: படத்தில் உள்ள புள்ளி. பரிய: பெரிய. பேழ்வாய்: பிளந்த வாய். ஆலவாய்: மதுரை.

உ௨அ. கண்ணி: தலையில் சூடும்மாலை. விரை: மணம். சுலாவி: சுற்றி. திருஆவூர் என்ற தலத்தின்கண் உள்ள கோயிலுக்குப் பசுபதீச்சரம் என்று பெயர்.

வஞ்சி விருத்தம்

கொலையார் தருகூற் றமுதைத்து,
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்,
கலையார் தொழுதேத் தியகாழி
தலையால் தொழுவார் தலையாரே. உசகூ.

கண்ணனும் நான்முகன் காண்பரியார்,
வெண்நாவல் விரும்பு மயேந்திர ம்
கண்ணப்பர்க்கு அருள்செய்த கயிலைஎங்கள்
அண்ணல்ஆ ரூர்ஆதி ஆனைக்காவே. உருo.

உசகூ. கொலை ஆர்தரு கூற்றம்: கொலை நிறைந்த எமன். கலையார்: கலைவல்லார். காழி: சீகாழிநகர். தலையார்: முதன்மையானவர்.

உருo. கண்ணன்: திருமால். வெண் நாவல்: திருவானைக் காவலின் தல விருட்சம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேவார மணி

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

நான்குசீர் விருத்தம்

பித்தா! பிறை சூடீ!பெரு மானே! அருள் ஆளா!
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்; மனத்து உன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருள் துறையுள்
அத்தா!உனக்கு ஆளாய்இனி அல்லேன்எனல் ஆமே.

ஏழ் இசையாய்இசைப்பயனாய் இன் அமுதாய்என்உடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழைஒண்கண் பரவையைத்தந்து ஆண்டானை
மதியில்லா
ஏழை,ஏன் பிரிந்துஇருக்கேன்? என் ஆரூர்
இறைவனையே. உ௫உ.

உ௫க. பித்தா: கிறுக்குப் பிடித்தவனே. அருள் ஆளா: அருளை ஆள்கின்றவனே. எத்தால்: எவ்விதத்தாலும். மனத்து உன்னை வைத்தாய்: என்மனத்துள்ளே உன்னை இருத்தினாய். பெண்ணைத் தென்பால்: பெண்ணையாற்றின் தெற்குப்பகுதியில் உள்ள. வெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர். அத்தா: தலைவனே.

உ௫உ. துரிசு: குற்றம். உடனாகி: உடந்தையாக இருந்து. மாழை: மாவடு வகிர் அன்ன. ஒண் கண்: ஒளியுடைய கண். பரவை: பரவை நாச்சியார். ஏழை: அறிவிலி. ஏன்: எதற்காக. என் ஆரூர் இறைவன்: என்னுடைய திருவாரூர் இறைவன்.

வங்கமலி கடல்நஞ்சை வானவர்கள் தாம்உய்ய
நுங்கி,அமுது அவர்க்குஅருளி நொய்யேனைப்
பொருட்படுத்துச்
சங்கிலியோடு எனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குஉலக்கப் பிரிந்துஇருக்கேன், என்ஆரூர்
இறைவனையே. உருங.

இங்ஙனம்வந்து இடர்ப்பிறவிப் பிறந்துஅயர்வேன்,
அயராமே
அங்ஙனம்வந்துஎனை ஆண்ட அருமருந்துஎன் ஆர்அமுதை
வெங்கனல்மா மேனியனை மான்மருவும் கையானை
எங்ஙனம்நான் பிரிந்துஇருக்கேன் என்ஆரூர்
இறைவனையே. உருச.

உருங. வங்கம் மலி : கப்பல் நிறைந்த. உய்ய : பிழைக்க. நுங்கி : விழுங்கி. அவர்க்கு : அவ் வானவர்க்கு. நொய்யேனை : அற்பனாகிய என்னை. சங்கிலியோடு எனைப் புணர்த்த: சங்கிலி என்ற பெண்ணோடு என்னைச் சேர்த்து வைத்த. சழக்கன் : தீயவன். உலக்க : கேடு அடைய.

உருச. இங்ஙனம் : இவ்வாறாக. இடர்ப்பிறவி : துயரப்பிறப்பு. அயர்வேன் : தளர்ச்சியடைவேன். அங்ஙனம் : அவ்வாறு. வெங்கனல்மாமேனியன் : பழுத்த தீப்போன்ற சிறந்த திரு உருவன். மான் மருவும் : மான் பொருந்திய. எங்ஙனம் : எவ்வாறு.

மின்அனை யாள்திரு மேனிவி ளங்கஓர்
தன்அமர் பாகம தாகிய சங்கரன்,
முன்நினை யார்புரம் மூன்றுஎரி ஊட்டிய
பொன்அனை யான்உறை பூவணம் ஈதோ. உருரு.

எங்கேனும் இருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கேவந்து என்னொடும் உடனாகி நின்றுஅருளி,
இங்கேஎன் வினையை அறுத்திட்டு, எனைஆளும்
கங்காநாயகனே! கழிப்பாலை மேயானே. உருசு.

கண்ணாய் ஏழுலகும் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே!
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
அண்ணா! நின்னைஅல்லால் இனியாரை நினைக்கேனே.

பொய்யவன்,நாயடியேன் புகவேநெறி ஒன்றுஅறியேன்;
செய்யவனாகிவந்துஇங்கு இடர்ஆனவை தீர்த்தவனே!
மெய்யவனே!திருவே! விளங்குந்திருக் காளத்திஎன்
ஐய!நுன் தன்னைஅல்லால் அறிந்துஏத்த மாட்டேனே.

உருரு. மின்அனையாள், உமையவள். பொன் அனையான்: பொன் நிறம் பெற்றவன். பூவணம்: திருப்பூவணம்; திருப் புவனம் என்று வழங்கப்பெறும் தலம். ஈதோ: இதுவே தானோ.

உருசு. கங்காநாயகன்: கங்கையின் கணவன். கழிப்பாலை: திருக்கழிப்பாலை என்னும் தலம்.

உருஎ. கருத்தாய அருத்தம்: உள்நிறைந்த பொருள். பண் ஆர் இன்தமிழ்: இசையோடு பொருந்திய இனிய தமிழ். மழ பாடி: திருமழபாடி.

உருஅ. புகவே நெறி: செல்ல வழி.

பண் இடைத் தமிழ்ஒப்பாய்! பழத்தினிற் சுவைஒப்பாய்!
கண் இடை மணிஒப்பாய்! கடுஇருட் சுடர்ஒப்பாய்!
மண் இடை அடியார்கள் மனத்துஇடர் வாராமே,
விண் இடைக் குருகாவூர் வெள்ளடை நீஅன்றே. உ௯௬

பண்ணின் தமிழ் இசைபாடலின் பழவேய்முழவு அதிரக்
கண்ணின்ஒளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய,
மண்ணின்றன மதவேழங்கள்மணிவாரிக்கொண்டுஎறியக்
'கிண்'என்றுஇசை முரலுந்திருக் கேதாரம்என னீரே.

"மான்திகழும் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்துஅளித்தாய்" என்றுஉரைக்க
உலகம்எலாம்
ஈன்றவனே! வெண்கோயில் இங்குஇருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோல்அருளி உளோம்போகீர்
என்றானே. உ௬க.

உ௯௬. பண்ணுக்குத்தமிழாகவும் பழத்திற்குச் சுவையாகவும் கண்ணுக்கு மணியாகவும் கடும் இருளுக்கு ஒளியாகவும் அமைந்தவனே.

உ௬௦. பழவேய் முழவு: பழைய மூங்கில் பொருத்தப்பட்ட மத்தளம். கனகம்: தங்கம். மதவேழங்கள்: மதயானைகள். மணிவாரிக்கொண்டு எறிய: இரத்தினங்களை அள்ளிவீச. 'கிண்' ஒலிக் குறிப்பு. கேதாரம்: இமயமலையிலுள்ள திருக்கேதாரம் என்னும் தலம். எனீரே: என்று சொல்லுங்கள்.

உ௬க. வெண்கோயில்: திருவெண்பாக்கம் எனும் தலம். கோல் அருளி: கம்பு தந்து. உளோம்: இருக்கின்றோம். போகீர்: போவீராக.

ஐந்துசீர் விருத்தம்

தன்மையி னல்அடி யேனைத்தாம்
 ஆட்கொண்ட நாள்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன்
 என்பதோர் வாழ்வுதந்தார்;
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்து
 என்னைப்போ கம்புணர்த்த
நன்மையி னார்க்குஇடம் ஆவது,
 நம்திரு நாவலூரே. உ௬உ.

தாயவ ளாய்த்தந்தை ஆகியே
 சாதல் பிறத்தல்இன் றிப்
போயக லாமைத்தன் பொன்அடிக்கு
 என்னைப் பொருந்தவைத்த
வேயவ னார்,வெண்ணெய் நல்லூரில்
 வைத்துஎனை ஆளுங்கொண்ட
நாயக னார்க்குஇடம் ஆவது,
 நந்திரு நாவலூரே. உ௬௩.

உ௬உ. தன்மையினல்: பெருங்கருணைத் திறத்தால். வன்மைகள்: கடுஞ்சொற்கள். வன்தொண்டன் என்று சொல்லக்கூடிய வாழ்க்கையைத் தந்தார். புன்மை: இழிந்த சொற்கள். போகம் புணர்த்த: இன்பத்தில் சேர்த்த.

உ௬௩. போய் அகலாமை: போய் நீங்காமல். வேயவனார்: மூங்கிலில் பிறந்த மூர்த்தி.

நீளநி னைந்தடி யேன்உமை
நித்தலும் கைதொழுவேன்;
வாளன கண்மட வாள்அவள்
வாடிவ ருந்தாமே,
கோளிலி எம்பெரு மான்!குண்டை
யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்;
ஆளிலை எம்பெரு மான்!அவை
அட்டித்த ரப்பணியே. உ௬௪.

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்
ளேநின்ற ஒண்பொருள்;
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று
திருவொற்றி யூர்;புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி
மென்தோள் தடமுலை;
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்
தூர்ஐயன் அருளதே. உ௬௫.

உ௬௪. நீள: நெடுகலும். வாள் அன கண்மடவாள் அவள்: வாளை ஒத்த கண்ணையுடைய அம்மடவாளாகிய பரவை. கோளிலி: திருக்கோளிலிப்பதி. குண்டையூர்: திருக்குண்டையூரிலே. ஆள் இலை: (என்னிடம்) வேலையாள் இல்லை. அவை: அந் நெற்களை. அட்டித்தரப்பணி: கொண்டு சேர்க்கச் செய்.

உ௬௫. ஓர்ந்தனன்: உணர்ந்தேன். புக்கு: புகுந்து. சார்ந்தனன்: பொருந்தினேன். சங்கிலி: சங்கிலி என்னும் நங்கை. ஆர்ந்தனன்: அடையப்பெற்றேன். ஆமாத்தூர், ஒரு தலம்.

தான்எனை முன்படைத் தான்;அது
அறிந்துதன் பொன்அடிக்கே
நான்என பாடல்;அந் தோ! நா
யினேனைப் பொருட்படுத்து,
வான்எனை வந்துஎதிர் கொள்ளமத்
தயானை அருள்புரிந்து
ஊன்உயிர் வேறுசெய் தான்நொடித்
தான்மலை உத்தமனே. உகக.

அறுசீர் விருத்தம்.

பேராது காமத்திற் சென்றாற்போல்
அன்றியே பிரியாது உள்கிச்
சீர்ஆர்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுந் திருவி னரை
ஓராது தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்துஆட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்துஎம்
பெருமானைப் பெற்றாம் அன்றே. உகஎ.

உககக. எனபாடல்: எனதுபாடல்களை அளித்தேன். பொருட் படுத்து: பொருளாகக்கொண்டு. வான்: சிறப்பாக. மத்த யானை அருள்புரிந்து: மதயானையைத் தந்து. ஊன்உயிர் வேறு செய்தான்: உடம்பிலுள்ள உயிரின் பழையநிலையைப் போக்கி வேறுபுத்துயிர் அளித்தான்; உடம்பைவிட்டு உயிரை வேறாகப் பிரித்தான் என்று கூறுவது பொருத்தம் இல்லை; அங்ஙனம் செய்திருந்தால் அதன்பிறகு இப்பாடல் தோன்றி யிருக்க முடியாதல்லவா. நொடித்தான்மலை: கயிலைமலை.

உகஎ. பேராது: நீங்காமல். அன்றியே: அல்லாமல். உள்கி: நினைந்து. ஓராது: உணராமல். தருமனார் தமர்: எமதூதர். ஆட்கொள்வான்: ஆட்கொள்வானாகிய. பேரா ளர்: பெருமையோர்கள் வாழ்கின்ற. புலியூர்: சிதம்பரம். பெற்றாம்: அடைந்தோம்.

கருமைஆர் தருமனார் தமர்நம்மைக்
கட்டியகட்டு அறுப்பிப் பானை
அருமையாம் தன்உலகம் தருவானை
மண்உலகம் காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கம் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்துஎம்
பெருமானைப் பெற்றாம் அன்றே. ௨௬௮.

நீற்றாரும் மேனியராய் நினைவார்தம்
உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றானைத் தீயானைக் கதிரானை
மதியானைக் கருப்ப றியலூர்க்
கூற்றானைக் கூற்றுஉதைத்துக் கோல்வளையாள்
அவளோடும் கொகுடிக் கோயில்
ஏற்றானை மனத்தினால் நினைந்தபோது
அவர்நமக்கு இனிய வாறே. ௨௬௯.

---

௨௬௮. கருமையார் தருமனார் தமர்: கறுப்பு நிறம்வாய்ந்த எமதூதர். கட்டு: எமபாசம். பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை: பல்லவ அரசர்க்குக் கப்பம் கட்டாத அரசர்களை. மறுக்கம் செய்யும்: தண்டிக்கும். பெருமையார்: பெருமையுடையார் வாழும்.

௨௬௯. நீற்று ஆரும் மேனியராய்: திருநீறு நிறைந்த திருமேனியினராய். கதிர்: சூரியன். மதி: சந்திரன். கருப்பறியலூர்: திருக்கருப்பறியலூர் எனும் ஊர். கூற்றான்: கூறாக, இடமாக உடையவன். கூற்று: எமன். கோல்வளையாள்: திரண்டவளையல்களை உடைய தேவி. கொகுடி: முல்லைக் கொடி. ஏற்றான்: விடைவாகனன்.

மணம்என மகிழ்வர் முன்னே,
மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணம்எனச் சுடுவர் பேர்த்தே,
பிறவியை வேண்டேன் நாயேன்;
பணை இடைச் சோலை தோறும்
பைம்பொழில் விளாகத்து எங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. உ௭௦.

இறைகளோடு இசைந்த இன்பம்,
இன்பத்தோடு இசைந்த வாழ்வு,
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந்து ஈண்டித் தேவர்
செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. உ௭௧.

உ௭௦. மணம்என: திருமணம் என்றுசொல்லி. பேர்த்து: திரும்ப. பணை: பண்ணை. விளாகம்: இடம். அணைவினை: பொருந்துதலை.

உ௭௧. இறைகளோடு இசைந்த இன்பம்: சிவனோடு சேரும் இன்பம். இன்பத்தோடு இசைந்த வாழ்வு: அப்பேரின்பத்துடன் பொருந்திய வாழ்க்கை; (வேண்டும்) பறை கிழித்தனைய போர்வை: பறை கிழிந்தால் அப்பறையின் கிழிந்த உபயோக மற்ற தோலைப்போன்ற போர்வை உடம்பு. பற்றியான் நோக்கினேற்கு: அவ்வுடம்பைப்பற்றித் திரிந்த எனக்கு; (இன்பமும வாழ்வும் தருவாயாக). திறை: கப்பம். ஈண்டி: நெருங்கி. அறை கழல்: ஒலிக்கும் திருவடி.

மீளா அடிமை உமக்கே
ஆளாய்ப் பிறரை வேண்டாதே,
மூளாத் தீப்போல் உள்ளே
கனன்று முகத்தால் மிகவாடி,
ஆளாய் இருக்கும் அடியார்
தங்கள் அல்லல் சொன்னக்கால்,
வாளாங் கிருப்பீர்! திருவா
ரூரீர்! வாழ்ந்து போதீரே. உஎஉ.

எழுசீர் விருத்தம்.

ஓவு நாள்,உணர்வு அழியும் நாள் - உயிர்
போகும் நாள்-உயர் பாடைமேல்
காவும் நாள்-இவை என்ற லாற்கரு
தேன்;கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்துஇ ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லா!உனை நான்ம றக்கினும்
சொல்லும்நா, "நமச்சி வாய"வே. உஎங.

உஎஉ. மீளா: திரும்பாத. பிறரை வேண்டாதே: வேறு எவரையும் விரும்பாமல். மூளாத்தீப்போல்: மூண்டு எரியாத நெருப்புப்போல. உள்ளே கனன்று: உள்வெதும்பி. வாடி: வாட்டமடைந்து. ஆளாய் இருக்கும்: அடிமைப் பட்டிருக்கும். அல்லல் சொன்னக்கால்: துயரத்தை எடுத்துச் சொன்னால். வாளாங்கு இருப்பீர்: சும்மா இருக்கின்றீர்! வாழ்ந்து போதீர்: (நீராவது) வாழ்ந்திரும்.

உஎங. ஓவு நாள்: (உன்னை) நீங்கும் நாட்களை. உணர்வு: அறிவு. காவுநாள்: தூக்கிச் செல்லும் நாள். என்றலால் கருதேன்: என்று அல்லாமல் வேறாக நினையேன்; உன்னை அடையாத நாட்களை அறிவு அழிந்த நாட்களாகவும் உயிர் இழந்த நாட்களாகவும் பாடைமேல் செல்லும் நாட்களாகவுமே கருதுவேன். கிளர்புனல் காவிரி: விளங்கும் நீரைப்பெற்ற காவேரி. பாவு: பரவிய. பரஞ்சோதி: இறைவன்.

மிடுக்கு இ லாதானை, வீம னேவிறல்
  விசய னேவில்லுக்கு இவன்என்று

கொடுக்கி லாதானைப் பாரி யேஎன்று
  கூறி னும்கொடுப் பார்இலை;

பொடிக்கொள் மேனிஎம் புண்ணி யன்புக
  லூரைப் பாடுமின்! புலவீர்காள்!

அடுக்கு மேல்அமர் உலகம் ஆள்வதற்கு
  யாதும் ஐயுறவு இல்லையே. உஎச.

வஞ்ச நெஞ்சனை, மாச ழுக்கனைப்,
  பாவி யை,வழக்கு இல்லியைப்,

பஞ்ச துட்டனைச், "சாது வே"என்று
  பாடி னும்கொடுப் பார்இலை;

பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக
  லூரைப் பாடுமின்! புலவீர்காள்!

நெஞ்சில் நோய்அறுத்து உஞ்சு போவதற்கு
  யாதும் ஐயுறவு இல்லையே உஎரு.

உ.எச. மிடுக்கு: வலிமை. வீமன்: பாண்டு மைந்தன்; தருமன் தம்பி; வலியால் மிக்கவன். விசயன்: அவன் தம்பி. விறல்: வெற்றி. கொடுககிலாதானை: கொடுத்தறியாதவனை. பாரி: பாரிவள்ளல். பொடி: திருநீறு. புண்ணியன்: சிவபெருமான். புகலூர்: திருப்புகலூர்த் தலம். பாடுமின்: பாடுங்கள். புலவீர்காள்: புலவர்களே. அடுக்குமேல் அமர் உலகம்: ஒன்றன் மேல் ஒன்றாக உள்ள பல உலகமும் கடந்து இருக்கின்ற சிவலோகம். ஐயுறவு: சந்தேகம்.

உஎரு. மாசழுக்கன்: பெரும் குற்றவாளி. வழக்கு இல்லி: முறையற்றவன. பஞ்சதுட்டன்: கொலை களவு கள் காமம் பொய் என்ற ஐந்தையும் கைக்கொண்ட கேடன். நெஞ்சில் நோய் அறுத்து: மனத்துயர் போக்கி. உஞ்சு போதல்: பிழைத்துப் போவது.

தேனை ஆடுமுக் கண்ண ரோ! மிகச்
செய்ய ரோ! வெள்ளை நீற்றரோ!
பால்நெய் ஆட லும் பயில்வ ரோ! தமைப்
பற்றி னார்கட்கு நல்லரோ!
மானை மேவிய கண்ணி னாள்மலை
மங்கை நங்கையை அஞ்சலார்
ஆனை ஈர்உரி போர்ப்ப ரோ! நமக்கு
அடிகள் ஆகிய அடிகளே. உஎ௬.

முன்னைச் செய்வினை இம்மை யில்வந்து
மூடும் ஆதலின், முன்னமே
என்னை நீ,தியக் காதுஎ ழுமட
நெஞ்ச மே!எந்தை தந்தைஊர்,
அன்னச் சேவலோடு ஊடிப் பேடைகள்
கூடிச் சேரும் அணிபொழில்
புன்னைக் கன்னி கழிக்கண் நாறும்
புறம்ப யம்தொழப் போதுமே. உஎஎ.

உஎ௬. முக்கண்ணரோ: மூன்றுகண் உடையவரோ. செய்யர்: சிவந்தவர். ஆனைஈர் உரிபோர்ப்பர்: யானையைப் பிளந்து அதன் தோலைப் போர்த்துக் கொள்வர்.

உஎஎ. இம்மையில்: இப்பிறப்பில். மூடும்: பற்றும். முன்னமே என்னை நீ தியக்காது: விரைந்து என்னை நீ மயக்காமல். பேடை: பெண் பறவை. அணி பொழில்: அழகிய சோலை. புன்னைக் கன்னி: இளம் புன்னை மரம். கழிக்கண்: கழியினிடத்தே. புறம்பயம்: திருப்புறம்பயம். போதும்: செல்வோம்.

செந்த மிழ்த்திறம் வல்லி ரோ!செங்கண்
அரவம் முன்கையில் ஆடவே,
வந்து நிற்கும்இது என்கொ லோபலி
மாற்ற மாட்டோம், இடகிலோம்,
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்தம் நாறுபைஞ் ஞீலியீர்!
அந்தி வானம்உம் மேனி யோசொலும்
ஆர ணீய விடங்கரே. உஎஅ.

மற்றுநான் பெற்றது ஆர்பெற வல்லார்?
வள்ளலே! கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணம்எனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்;
செற்றுமீது ஓடும் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலாய்! அடியேன்
பற்றிலேன், உற்ற படுதுயர் களையாய்!
பாசுப தா!பரஞ் சுடரே. உஎகூ.

உஎஅ. செங்கண் அரவம்: சிவந்த கண்ணையுடைய பாம்பு. பலிமாற்ற மாட்டோம்: பிச்சை இல்லை என்று சொல்லமாட்டோம். இடகிலோம்: இடவும் மாட்டோம். கந்தம்: மணம். பைஞ்ஞீலி: திருப்பைஞ்ஞீலி என்னும் தலம். ஆரணீய விடங்கர், திருப்பைஞ்ஞீலியின் சுவாமி பெயர்.

உஎகூ. கள்ளம்: வஞ்சகம். மிகை: தகாதசெயல். செற்று: வென்று. பற்று இலேன்: பற்றுக்கோடு இல்லாதேன்.

குழைத்துவந்து ஓடிக் கூடுதி நெஞ்சே!
 குற்றேவல் நாள்தொறும் செய்வான்;
இழைத்தநாள் கடவார் அன்பில ரேனும்
 எம்பெரு மான்என்றெப் போதும்
அழைத்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச் சிராமத்து
 அடிகள்தாம் யாதுசொன் னனும்
பிழைத்தது பொறுத்தொன் றுஈகில ராகில்
 இவரலாது இல்லையோ பிரானர். உ_அ௦.

எண்சீர் விருத்தம்.

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
 போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
 பிழைஎ லாம்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றுஅறிவு ஒண்ணு
 எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்துஅணி
 ஆரூ ரானைம றக்கலும் ஆமே. உ_அக.

உ_அ௦. குழைத்து: உருகி. கூடுதி: சேர்வாயாக. செய்வான்: செய்யும் பொருட்டு. இழைத்தநாள் கடவார்: விதித்த காலத்தைத் தாண்டமாட்டார். பாச்சிலாச் சிராமம், ஒரு தலம். பிழைத்தது பொறுத்து: செய்தகுற்றத்தைப்பொறுத்துக்கொண்டு. ஒன்றுஈகிலராகில்: ஒன்றும் தாவில்லையானல். இவரலாது இல்லையோ பிரானர்: இவரைத்தவிர வேறு தலைவர் இல்லையோ?

உ_அக. மெய்ப்பொருள்: உண்மைச் செல்வம்; அருள். போகம்: இன்பம். திரு: செல்வம். புணர்ப்பான்: அடைவிப்பான். தவிர: நீங்க. பணிப்பான்: செய்வான். அறிவு ஒண்ணு: அறிய முடியாத. அன்னம் வைகும்: அன்னப் பறவைகள் தங்கும். வயல் பழனம்: வயல் சூழ்ந்த மருத நிலம். அணி: அழகிய. மறக்கலும் ஆமே: மறக்க முடியுமா.

ஒட்டி ஆட்கொண்டு போய்ஒளித் திட்ட
 உச்சிப் போதனை நச்சுஅரவு ஆர்த்த
பட்டி யைப்பக லைஇருள் தன்னைப்
 பாவிப் பார்மனத்து ஊறும்அத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்தெளி தன்னைக்
 காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
 ஆரூ ரானைம றக்கலும் ஆமே. உஅஉ.

அழுக்கு மெய்கொடுஉன் திருவடி அடைந்தேன்;
 அதுவும் நான்படப் பாலதுஒன்று ஆனால்,
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்!
 பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்;
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
 மற்று நான்அறி யேன்மறு மாற்றம்;
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்து உரையாய்!
 ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. உஅங.

உஅஉ. ஒட்டி: பொருந்தி. ஒளித்திட்ட: மறைந்து கொண்ட. உச்சிப்போதனை: உச்சிப் பொழுதனை. நச்சு அரவு: நஞ்சுடைய பாம்பு. ஆர்த்த: கட்டிய. பட்டி: கட்டுக் காவல் இல்லாதவன். பாவிப்பார்: எண்ணுவார். கட்டி: கருப்பட்டி. கரும்பின் தெளி: கருப்பஞ்சாறு. காதலால்: விருப்பத்தால். கடல் சூர் தடிந்திட்ட: கடல் போன்ற சூரனைக் கொன்ற. செட்டி: முருகன். அப்பன்: அவன் தந்தை. பட்டன்: அந்தணன்.

உஅங. அழுக்கு மெய்கொடு: அழுக்கு உடம்பு கொண்டு. பிழுக்கை வாரியும் பால் கொள்வர்: ஆட்டுப்பால் கொள்பவர் அதன் பிழுக்கையை வாரித்தள்ளிவிட்டுப் பாலைக்கொள்வார்கள். பிழைப்பன் ஆகிலும்: தவறுடையேன் ஆனாலும். மறு மாற்றம்: வேறு பேச்சு. ஒழுக்க என் கணுக்கு: என் கண்ணுக்கு வார்க்க.

மகத்திற் புக்கதுஓர் சனிஎனக்கு ஆனாய்!
  மைந்த னே!மணி யே!மண வாளா!
அகத்திற் பெண்டுகள் நான்ஒன்று சொன்னால்,
  "அழையேல் போகுரு டா" எனத் தரியேன்;
முகத்திற் கண்இழந்து எங்ஙனம் வாழ்கேன்!
  முக்க ணா!முறை யோமறை ஓதி!
உகைக்கும் தண்கடல் ஓதம்வந்து உலவும்
  ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. உ௮௪.

ஆலம் தான்உகந்து அமுதுசெய் தானை,
  ஆதி யை,அம ரர்தொழுது ஏத்தும்
சீலம் தான்பெரி தும்உடை யானை,
  சிந்திப் பார்அவர் சிந்தையு ளானை,
ஏல வார்குழ லாள்உமை நங்கை
  என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
  காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. உ௮௫.

உ௮௪. மகத்தில் புக்கது ஓர் சனி எனக்கு ஆனாய்: எனக்கு மக நட்சத்திரத்தில் புகுந்த ஓர் சனியாக ஆனாய் நீ; மகத்திற் சனி புகின் கேடு தரும் என்பது சோதிடக் கருத்துப்போலும். அகத்தில் பெண்டுகள்: வீட்டிலுள்ள பெண்கள். தரியேன்: பொறுக்கமாட்டேன். முகத்திற் கண் இழந்து எங்ஙனம் வாழ்கேன: (அகக்கண் இருக்கத்தான செய்கிறது; ஆனாலும்) முகக்கண் இல்லாமல் எப்படி வாழ்க்கை நடத்துவேன். முக கணா: (நீ மட்டும) மூன்று கண் வைத்திருக்கிறாயே. மறை ஓதி: மறைகளால் புகழப்பட்டவனே. உகைத்தல்: எழும் புதல். ஓதம்: அலை.

உ௮௫. ஆலம்: நஞ்சு. உகந்து: விரும்பி. ஏலம்: மணம். வார்குழல்: நீண்ட கூந்தல். கால காலன்: எமனுக்கு எமனானவன். கம்பன்: ஏகம்பன்; காஞ்சீவரத்தில் இருக்கும் சிவபெருமான். பெற்றவாறு: அடைந்தமாதிரி; (வியத்தற் குரியது.)

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே! மற்றுஆரை உடையேன்;
உள்மயத்த உமக்குஅடியேன், குறைதீர்க்க வேண்டும்;
ஒளிமுத்தம் பூண்ஆரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்;
கடல்நாகைக் காரோணம் மேவிஇருந் தீர்என்று
அண்மயத்தால் அணிநாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவைவல்லார் அமர்உலகுஆள்பவரே.

திருவும் வண்மையும் திண்திறல் அரசும்
சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு,
மருவு கோச்செங்க ணான்தனக்கு அளித்த
வார்த்தை கேட்டுநுன் மலர்அடி அடைந்தேன்;
பெருகு பொன்னிவந்து உந்துபன் மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவும் தெற்றியும் முற்றமும் பற்றித்
திரட்டும் தென்திரு நின்றியூ ரானே. உஅஎ.

உஅசு. பண் மயத்த மொழிப் பரவை சங்கிலி : இசைமயமான பேச்சைப்பெற்ற பரவையார், சங்கிலியார் என்னும் இருமனைவிமார்; பேசுவதுபண்பாடுவதுபோல இருக்குமெனபது கருத்து. "சிந்து ஒக்கும் சொல்லினார்" என்றார் கம்பர். உள்மயத்த : உள்ளே இருக்கின்ற. ஒளிமுத்தம : நல்முத்து. பூண்ஆரம் : அணியும்மாலை. கண்மயத்த : கண்ணுக்கு இனிய. சாந்து : சந்தனம். அண்மயத்தால் : பொருந்தும் விதத்தால். நாவல் ஆரூரன் : திருநாவலூரனாகிய சுந்தரன்.

உஅஎ. திரு: செல்வம். வண்மை : கொடைத்தன்மை. சிலந்தியார் : சிலந்திப் பூச்சியார். செய்பணி : பணிவிடை. மருவு : பொருந்திய. கோச்செங்கணான் : கோச்செங்கட் சோழ நாயனார். பிள்ளைப்பல்கணம் : குழந்தைகளின் கூட்டம். பண்ணை : விளையாடுமிடம். தெற்றி : திண்ணை.

அணிகொள் ஆடைஅம் பூண்அணி மாலை
அமுது செய்துஅமு தம்பெறு சண்டி,
இணைகொள் ஏழெழு நூறிரு பனுவல்
ஈன்ற வன்திரு நாவினுக்கு அரையன்,
கணைகொள் கண்ணப்பன், என்றுஇவர் பெற்ற
காதல் இன்அருள் ஆதரித்து அடைந்தேன்;
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே. ௨௮௮.

நல்இசை ஞானசம் பந்தனும் நாவினுக்கு
அரசனும் பாடிய நல்தமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்இ யல்மனத் தைக்கசி வித்துக்
கழல்அடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்இயல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. ௨௮௯.

---

௨௮௮. அமுது செய்து : அமுது செய்வித்து. அமுதம் பெறுசண்டி : முத்தி பெற்ற சண்டேசுவர நாயனார். இணைகொள : (தானே தனக்கு) சமமான. ஏழெழுநூறு இருபனுவல் ஈன்றவன் திருநாவினுக்கு அரையன் : நாலாயிரத்துத் தொள்ளாயிரம், என்றும் உள பாடல்களைத் தந்தருளிய திருநாவுக்கரசன். கணைகொள் : அம்புகொண்ட. ஆதரித்து : விரும்பி. திணைகொள் : ஐந்து திணைகளைக் கொண்ட. தெரியும : அறிந்துபாடும்.

௨௮௯. ஏத்து உகப்பான் : போற்றுவதற்கு மகிழ்வான். கல் இயல் மனம் : கல்லினை ஒத்த வலிய மனம். களைகள் : குற்றங்கள். வலிவலம் : திருவலிவலம் என்னும் தலம்.

நாளும் இன்இசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குஉல கவர்முன்
தாளம் ஈந்து,அவன் பாடலுக்கு இரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின்று ஆடும்
அங்க ணன்தனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. உகம.

மற்றுஒரு துணைஇனி மறுமைக்கும் காணேன்;
வருந்தல்உற் றேன்;பிற வாவரம் பெற்றேன்;
சுற்றிய சுற்றமும் துணைஎன்று கருதேன்;
துணைஎன்று நான்தொழப் பட்டஒண் சுடரை,
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
முறைமுறை பல்பல நெறிகளும் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை, அடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. உகக.

உகம. அங்கணன்: பெருங் கருணையாளன். கோளிலி: திருக்கோளிலி என்னும் தலம். கோலக்கா: திருக்கோலக்கா என்னும் தலம்.

உகக. ஒண்சுடர்: பேரொளியாகிய சிவபெருமான். கழுமல வளநகர்: வளமவாய்ந்த சீகாழிப்பதி.

அருமணியை முத்தினை ஆன் அஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறல் இரும் தேனைத்
தெரிவுஅரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியும் திரைவாய்க்
கோல்வளையார்குடைந்தாடும்கொள்ளிடத்தின்கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. உகூஉ.

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவம் கண்டு,
குறிப்பினொடும் சென்று,அவள்தன் குணத்தினைநன்கு அறிந்து,
விரும்பும்வரம் கொடுத்து,அவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்,
அரும்புஅருகே சுரும்புஅருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்புஅருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே. உகூ௩.

உகூஉ. ஊறல்: சாறு. இரும்: பெரிய. திகழ்தரு: விளங்காநின்ற. குரு: நிறமான. திரை: அலை. கோல் வளையார்: குச்சிபோன்ற மெல்லிய வளையல் அணிந்த பெண்கள். நீலம்: குவளை. கழனி: வயல்.

உகூ௩. குரும்பை: தென்னம் பிஞ்சு. குழலி: கூந்தலையுடைய தேவி. வேட்டு: மணம் செய்து. சுரும்பு: வண்டு. அருவ: அணைய. அறுபதம்: வண்டின்வகை. பண்பாட: இசைமிழற்ற. கருங்குவளை: நீலமலர். கண்வளரும்: உறங்குகின்ற. கழனி: வயல். கமலம்: தாமரை. கலயநல்லூர்: திருக்கலயநல்லூர் என்னும் தலம்.

பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
பலரும் கண்டுஅழுது எழஉயிர், உடலைப்
பிரிந்து போம்;இது நிச்சயம்! அறிந்தாற்
பேதை வாழ்வுஎனும் பிணக்கினைத் தவிர்ந்து,
கருந்த டங்கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றுஅடை மனனே. உகூச.

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னை;
குற்றம் செற்றம் இவைமுதல் ஆக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும்;
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல;
நடுக்கம் உற்றதுஓர் மூப்புவந்து எய்த
நமன்த மர்நர கத்துஇடல் அஞ்சி,
இடுக்கண் உற்றனன்; உய்வகை அருளாய்!
இடைம ருதுறை எந்தைபி ரானே. உகூ௫.

உகூச. பரிந்த சுற்றம்: விரும்பிய உறவினர். வன்துணை: பெருந்துணைவி. பிணக்கினைத் தவிர்ந்து: மாறுபாட்டை விட்டு. கருந்தடங்கண்ணி: பெரிய அகன்ற கண்களையுடைய உமை. உயிரை: உயிராக அமைபவனை. செருந்தி, ஒரு பூமரம். பொன்மலர்: பொன்னைப்போலப் பூக்கின்ற. திருத்தினை நகர், ஒரு சிவத்தலம்.

உகூ௫. கொடுக்ககிற்றிலேன்: கொடுக்கவேமாட்டேன். செற்றம்: பகை. விடுக்ககிற்றிலேன் குற்றம், செற்றம் இவை முதலாக வேட்கையும சினமும்: தீயவை எதையும விடமாட்டேன. வேட்கை: ஆசை. சினம: கோபம் வேண்டில்: (நல்லவற்றைச் செய்ய) விரும்பினால். ஐம்புலன் என்வசம் அல்ல: மெய், வாய், கண், மூக்கு, செவி என்னிடம் இல்லை. இடுக்கண்: துயரம். இடைமருது: திருவிடைமருதூர்.

திங்கள் தங்கு சடைக்கண் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவ்வாள்;
கணப தியேல் வயிறு தாரி;
அங்கை வேலோன் குமரன் பிள்ளை;
தேவி யார்கோல் தட்டி யாளார்;
உங்க ளுக்குஆட் செய்ய மாட்டோம்;
ஓண காந்தன் தளியு ளீரே. உகௌ.

நாதனை நாதம்மிகுத்து ஓசைய தானவனை
ஞான விளக்குஒளியாம் ஊன்உயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்துஇறையும்
பற்றுவி டாதவனைக் குற்றம்இல் கொள்கையனைத்
தூதனை என்தனைஆள் தோழனை நாயகனை
தாழ்மக ரக்குழையும் தோடும் அணிந்ததிருக்
காதனை நாயடியேன் எய்துவது என்றுகொலோ?
கார்வயல் சூழ்கானப் பேர்உறை காளையையே. உகள

உகௌ. வயிறுதாரி: பெருவயிறன். குமரன்பிள்ளை: சிறு பிள்ளை. கோல் தட்டி ஆளார்: கம்பைத்தட்டி அடக்கி ஆளமாட்டார். ஓணகாந்தன் தளி, ஒரு தலம்.

உகள. மாதனை: மாதோடு கூடியவன். இறை: சிறிது. தாழ்: தொங்குகின்ற. கார்வயல்: மேகத்தின் உதவி வேண்டும் நிலம். கானப்பேர்: காளையார்கோவில் என்னும் தலம். காளை: காளையப்பர்; காளையார் கோவில் சிவபெருமானின் பெயர்.

குறைவுஇ லாநிறை வே! குணக் குன்றே!
 கூத்த னே! குழைக் காதுஉடை யானே!
உறவுஇ லேன்உனை அன்றிமற்று அடியேன்;
 ஒருபி ழைபொறுத் தால்இழிவு உண்டே?
சிறைவண்டு ஆர்பொழில் சூழ்திரு வாரூர்ச்
 செம்பொ னே! திரு வாவடு துறையுள்
அறவ னே! எனை "அஞ்சல்" என்று அருளாய்!
 ஆர்எ னக்குஉறவு; அமரர்கள் ஏறே. உகஅ.

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
 அவனைக் காப்பது காரணம் ஆக
வந்த காலன்தன் ஆர்உயிர் அதனை
 வவ்வி னாய்க்குஉன்தன் வண்மைகண்டு அடியேன்
எந்தை! நீஎனை நமன்தமர் நலியின்
 "இவன்மற்று என்அடி யான்" என விலக்கும்
சிந்தை யால்வந்துஉன் திருவடி அடைந்தேன்;
 செழும்பொ ழில்திருப் புன்கூர்உ ளானே. உகக.

உகஅ. குறைவுஇலா நிறைவு: குறைவு அற்ற பெருக்கம்; எது? கடவுள். "குறைவு இலா நிறைவே" என்ற இதே சொற்றொடரைத் திருவாசகமும் முழக்குகிறது. இழிவு உண்டே: தாழ்ந்துபோய்விடுமா. அறவனே: தருமமூர்த்தியே.

உகக. அந்தணாளன்: மார்க்கண்டன். வவ்வினாய்க்கு: கவர்ந்த உனக்கு. வண்மை: வள்ளல் தன்மை. நமன் தமர் நலியின்: எமதூதர் வருத்தினால். தன்னை 'என் அடியான்' எனச் சிவபெருமான் கூறுவதை "ஏதமே பிறந்து இறந்து உழல்வேன்தனை என் அடியான் என்று" என மணிவாசகனாரும் அருளுவர்.

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொருள் இருள்அறுத்து அருளும்
தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ ஆவணங் காட்டி,
அடிய னாய்என்னை ஆளது கொண்ட
நற்ப தத்தைநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந்து என்நினைக் கேனே. ௧௦

௩.௧௦. கற்பகம். வேண்டுவார் வேண்டுவதே ஈயவல்லது. கனகமால்வரை: தங்கப்பெருமலை. காமகோபன்: எமனை முனிந்தவன். கண்ணுதலான்: நெற்றிக்கண் பெற்றவன். இருள் அறுத்து: மயக்கங்கெடுத்து. அற்புதப்பழஆவணம் காட்டி: அருமையான பழையஓலையைக்காட்டி. நற்பதத்தை: நல்ல பதவியை. நள்ளாறனை: திருநள்ளாறு கோயில் கொண்டவனை. என்நினைக்கேன்: எதை நினைக்கப் போகிறேன்.

தேவார மணி

பாட்டு முதல் குறிப்பு அகராதி.

பாட்டு முதல்	பக்க எண்
அகல் இடமே இடமாக	40
அஞ்சாதே கயிலாய	96
அணிகொள் ஆடை	132
அணை அலைசூழ்	89
அந்தணாளன் உன்	137
அருந்துணையை	46
அருமணியை	134
அலைவளர் தண்	93
அல்லல் என் செயும்	7
அழுக்கு மெய் கொடு	129
அனுசயப்பட்டு	13
அன்று ஆலின்	53
ஆணி போலநீ	10
ஆலம்தான்	130
இங்ஙனம்	116
இரு நிலனாய்	45
இல்லக விளக்கது	6
இறைகளோடு	123
இன்று அரைக்கண்	17
இன்றுளார்	10
உடம்பு எனும்	25
உண்ணாமுலை	81
உயிர் நிலை	32
உரம் கெடுப்பவன்	92
உருகு மனத்து	55
உள்ளவாறு	109
உற்று உமை	98
உன்னி எப்போதும்	29
ஊசலாள் அல்லள்	14
ஊன் ஏறு வேலின்	105
ஊன் பாயும்	94
எங்கள் பெருமானை	75
எங்கேனும்	117
எண்ணார் முத்தம்	92
எத்தாயர்	49
எத்திசையும்	61
எந்த மாதவம்	12
எனக்கு என்றும்	50
என்றும் நாம்	41
என்ன மாதவம்	12
என்னில் ஆரும்	9
ஏலமார்	79
ஏழ் இசையாய்	115
ஐயினால்	58
ஒட்டி	129
ஒரு மணியை	52
ஒரு முழம்	35
ஒருவனாய்	56
ஒழுகும் மாடத்துள்	10
ஒன்றி இருந்து	18
ஓசை ஒலிஎலாம்	48
ஓர்ந்தனன்	120
ஓவுநாள்	124
கங்கைஆடில் என்	4
கச்சைசேர் அரவர்	28
கண் காட்டும்	70

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
கண்காள்	1	குனித்த புருவமும்	18
கண்ணனும்	111	கூர் ஆரல்	84
கண்ணுய்	117	கூவல் ஆமை	6
கண் நிறைந்த	104	கைப்போது	7
கரவாடும்	7	கையினேடு	8
கருஉற்ற நாள்	23	கொங்குஇயல்	105
கருமைஆர்	122	கொடுக்க கிற்றிலேன்	135
கருவாய்க் கிடந்துன்	22	கொலேயார்தரு	111
கருவினுல் அன்றியே	74	கோடி தீர்த்தம்	5
கலேயாரும்	54	கோடிமாதவங்கள்	34
கல்நெடும்காலம்	15	சகமலாது	27
கல்லினேடு எனே	11	சங்கநிதி பதுமநிதி	43
களித்துக் கலந்ததொர்	20	சடையாய் எனுமால்	82
கள் ஆர்ந்த	72	சந்தணி கொங்கையாள்	31
கள்ளனேன்	26	சந்தம் ஆர்	81
கறுத்தவன்	26	சலம்பூவொடு	36
கற்பகத்தினே	138	சாட எடுத்தது	19
கற்றவர்கள் உண்ணும்	56	சிந்திப்பரியன	19
கற்றுக் கொள்வன	4	சிலேயினுல்	81
கனிதனே	77	சிவனுகி	57
கனியினும்	11	சிவன் எனும் நாமம்	15
காதல் ஆகி	69	சிறையாரும்	83
காயமே கோயில்ஆக	24	சுற்றமொடு	73
காவினே இட்டும்	88	செங்கட் பெயர்	83
கீதமுன்	73	செந்தமிழர்	101
குரும்பைமுலே	134	செந்தமிழ்த்திறம்	127
குவப்பெரும்	27	செய்யானே	49
குழைத்து	128	செல்வ நெடுமாடம்	70
குறவி தோள்	33	செல்வம் மல்கு	86
குறைவு இலா	137	செவிகாள்	1
குற்றம் நீ	79	செறிவிலேன்	29

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
சொன்மாலை	14	நஞ்சடைந்த	65
தந்தையார் தாய்யார்	45	நம் பொருள்	71
தந்தையார் போயினார்	102	நம் மானம்	71
தரும் சரதம்	97	நல் இசை	132
தலை சுமந்து	37	நறை கொண்ட	76
தலையே நீ	1	நற்பதத்தார்	44
தன்மையினால்	119	நன்றுடையானை	88
தாதுஆர் கொன்றை	104	நன்று நோற்கில்என்	5
தாயவளாய்	119	நாகத்தை நங்கை	33
தாயினும் நல்ல	107	நாதனை	136
தான் எனை	121	நாம் ஆர்க்கும்	40
திங்கள் தங்கு	136	நாளாய போகாமே	78
திருநாமம் அஞ்செழுத்தும்	44	நாளும் இன்இசை	133
திருவும்	131	நிலை பெறுமாறு	55
திருவே என்	53	நிலைமை சொல்லு	12
தினைத்தனையோர்	48	நினைந்து உருகும்	51
தீவிரியக்கழல்	100	நினைவார்	98
துஞ்சலும்	70	நின் அடியே	74
துஞ்சவருவாரும்	87	நின்றுஉலா	95
துஞ்சு இருள்	30	நீதியால்	37
துறைபல	82	நீரிடைத் துயின்றவன்	77
தூசுபுனை	99	நீரோடு	95
தூண்டு சுடர்	59	நீலமாமணி	100
தேடிக் கண்டு	2	நீள நினைந்து	120
தேடிச் சென்று	13	நீற்றாரும்	122
தேவியை வவ்விய	90	நூறுகோடி	5
தேனைஆடு	126	நெக்கு நெக்கு	3
தையலாள் ஒரு	72	நெஞ்சம் என்பதோர்	9
தொண்டர் அஞ்சு	82	நென்னலை ஓர்	63
தொழுது	9	நேர்ந்து ஒருத்தி	62
நங்கடம்பனை	8	நொய்யவர்	30

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
பச்சை நிறமுடையர்	52	பேயாயின	74
பஞ்சின் மெல்அடி	13	பேராது	121
பஞ்சுதோய்	78	பேர் ஆயிரம் பரவி	47
படைகள் போல்	38	பைங்கோட்டு	83
படைமலிந்த	61	பொய்யவன்	117
பட்டு உடுத்து	64	பொருவிடை	17
பண்ஆர்ந்த வீணை	43	பொன்னும்	128
பண் இடை	118	போதும் பொன்னும்	86
பண்ணில் ஓசை	8	போதையார்	72
பண்ணின் தமிழ்	118	போற்றிசைத்துன்	46
பண்ணின் நேர்மொழி	13	மகத்திற் புக்கது	130
பண் மயத்த	131	மங்கையர்க்கு அரசி	107
பரிந்த	135	மட்டு இட்ட	85
பருமாமத	80	மணம் என	123
பழி இலான்	39	மண் எலாம்	08
பன்னிய செந்தமிழ்	50	மண்ணிடை	38
பர்கமும் தேவியை	110	மண்பாதலம்புக்கு	21
பாடகம் சேர்	57	மந்தம் ஆர்	96
பாடலார்	91	மருஉற்ற	65
பாராரே	84	மலையார் தரு	77
பிடி எலாம்	80	மலையார் மடந்தை	20
பித்தா	115	மறையானை	51
பிறை அணி	36	மற்று ஒரு	133
புண்ணியர்	110	மற்றுநான்	127
புலன் ஐந்தும்	94	மனத்தகத்தான்	62
புவம் வளி	102	மனத்துள்	11
புழுவாய்ப் பிறக்கினும்	21	மனமெனும்	35
புற்றினில் வாழும்	23	மனிதர்காள்	4
பூங்கொடி	106	மன் ஆனவன்	75
பெண் ஆண் என	76	மன்னும் மலைமகள்	21
பெருகலாம் தவம்	12	மாஇருஞாலம்	28

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
மாசில் வீணையும்	2	மைப்படிந்த	42
மாட்டைத்தேடி	10	மைப்பூசும்	85
மாயவன்	99	வங்கமலி	116
மாலைமதி	103	வஞ்ச நெஞ்சனை	125
மானம் ஆக்குவ்வன	73	வஞ்சித்து என்	14
மானின் நேர்விழி	108	வரிதரு புலி அதள்	93
மான்திகழும்	118	வரைகள் ஒத்தே	34
மிடுக்கு இலாதானை	125	வாது செய்து	6
மின் அனையாள்	117	வாயே வாழ்த்து	2
மின் காட்டும்	60	வாரார் கொங்கை	101
மின்னிய அரவும்	106	வார் ஆண்ட கொங்கையர்	41
மீளா அடிமை	124	வாழ்க அந்தணர்	69
மீளாத ஆள் என்னை	47	வாழ்த்த வாயும்	3
முந்திமா	87	வாழ்ந்த நாளும்	91
முளைத்தானை	60	வாள் ஆர்கண்	75
முன்னம் அவனுடைய	63	வானம் துளங்கில் என்	16
முன்னம் நின்ற	89	வானவர்கள்	103
முன்னே உரைத்தால்	16	வானிற் பொலிவு	79
முன்னைச் செய்வினை	126	விடிவதுமே	58
மூஉருவின்	42	விளங்கு இழை	76
மூத்துவர்	97	விளைவு அறிவு	24
மூரி முழங்கு ஒலிநீர்	59	விறகில் தீயினன்	3
மெய் உளே	31	வெஞ்சினக்கடும்	11
மெய்த் தவன்காண்	54	வெந்தார் வெண்	64
மெய்ம்மையாம்	25	வெம்கள் விம்மு	80
மெய்யராகி	78	வெம்மை நமன் தமர்	22
மெய்யெலாம்	32	வெள்ள நீர்	39
மை தவழும்	71	வேதம் ஓதில் என்	5
மைத்தகுமேனி	90	வேய்உறு தோளி	109